# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 28 சனிக்கிழமை (13.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 260





03 நிலைப்பாட்டை தெளிவுபடுத்துக

14 கூட்டமைப்புக்கு ஓர் எச்சரிக்கை



19 உடன் நடவடிக்கை எடுங்கள்



21 இந்தியாவில் ஊழல் தலைவிரித்தாடுகிறது



25 இந்தியா கடும் போராட்டம்

## நாட்டைக் கலக்கும் கிறிஸ் பூதங்கள் இதுவரை 3 பேர் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 13

இரவுவேளையில் நடமாடும் 'கிறீஸ் பூதங்கள்' தொடர்பான மிரட்சி காரணமாக கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இயல்புநிலை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இருட்டியதும் பெண்கள் வீடுகளுக்குள் முடங்கும் அதேநேரம், ஆண்கள் சட்ட அனுமதியின்றி ஆயுதங்களுடன் நடமாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

'கிறீஸ் பூத' அச்சம் காரணமாக நேற்றிரவுவரை குறைந்தது 3 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். பல இடங்களில் தொடர்ந்து அமைதியின்மையும் பதற்றமும் நிலவுகின்றது.

பொத்துவிலில் சாவு

பொத்துவில் பொலிஸ் நிலையப் பகுதியில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூட்டில் அவர் இறந்தார் எனக் கூறப்பட்டது.

பொத்துவிலைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான அலிஜார் மொகமட்

பக் 27

## சம்பந்தன் நேற்று இந்தியா பயணம்

கொழும்பு, ஓக. 13


தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று இந்தியா பயணமானார்.

சம்பந்தன் இம்மாதம் 19ஆம் திகதி கொழும்பு திரும்புவார் என்றும், மறுநாள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு

பக் 27

# இலங்கையின் மீது போர் தொடுப்போம்

## ஆயுதங்களின்றிப் புறப்படுங்கள் படகுகளில்; அழைக்கிறது பாரதீய ஜனதாக் கட்சி



சென்னை, ஓக. 13

இலங்கை மீது ஆயுதங்கள் இன்றி ஒரு தாக்குதல் தொடுப்போம் என்று இந்திய நாடாளுமன்றம் முன்பாக உறுமி இருக்கிறது பாரதீய ஜனதாக் கட்சி. அதன் முக்கிய தலைவரும், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அரசில் நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சராக இருந்தவருமான யஸ்வந்த் சின்ஹா நேற்று இதனைத் தெரிவித்தார். "இந்தியர்கள் எல்லோரும் உறுதியாக ஈழத் தமிழர்களை ஆதரிக்கின்றோம் என்பதை உலகுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்" என்றார் அவர்.

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் புதுடில்லியில் இந்திய நாடாளுமன்றம் முன்பாக நேற்று நடத்திய, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பாரதிய ஜனதாக் கட்சியின் ஈழத் தமிழர் ஆதரவை வெளிப்படுத்தினார் சின்ஹா. சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டால் அதிலும் தான் கலந்துகொள்வார் என்று அவர் தெரிவித்தார்.

வன்னியில் அரசு நடத்திய இறுதிப் போரின்போது நிகழ்ந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் நம்பகமான ஆதாரங்களை முன் வைத்துள்ள ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இந்திய மத்திய அரசு தொடர்ந்து மௌனம் சாதிப்பதை எதிர்த்து மதிமுக தலைவர் வைகோ இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தார்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்து பங்கேற்ற ஆர்ப்பாட்டத்தில், பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவருமான யஸ்வந் சின்ஹா, பீஹார் மாநிலத்தின் பலம் மிக்க கட்சியான லோக் ஜனஷக்திக் கட்சித் தலைவர் ராம் விலாஸ் பாஸ்வான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

"நானும் உங்களுடன் சேர்ந்து கொள்கிறேன். வாருங்கள் எல்லோருமாகப் படகுகளில் புறப்பட்டுச் சென்று, இலங்கை விவகாரத்தில் நாங்களும் உங்களுடன் இருக்கிறோம் என்று உலக நாடுகளுக்குச் சொல்வோம்.

பக் 04



புதுடில்லியில் இந்திய நாடாளுமன்றம் முன்பாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## சிறிதரன் எம்.பியின் வாழ்த்தால் சிறப்பு மலர் வெளியிடத் தடை

### ஆளுநரின் அடாவடி உத்தரவு

பளை, ஓக. 13

பளை, மத்திய கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. எல்லா நிகழ்வுகளும் நிறைவேறின. ஆனால் அங்கு பாடசாலையின் சிறப்பு மலர் வெளியிட 'தடை உத்தரவு' வந்தது.

ஆளுநர் அலுவலகத்தில் இருந்து அவரின் பதில் செயலாளர் இ.இளங்கோவன் இந்த திடீர் அதிரடி தடை உத்தரவை தொலைபேசி மூலம் விடுத்தார் எனத் உதயனுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அந்தச் சிறப்பு மலரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சி.சிறீதரனின் வாழ்த்துச் செய்தி இடம்பெற்றிருந்ததே தடை அறிவிப்பு - உத்தரவுக்கு காரணம் என்று கல்விப்புல வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய திறப்பு விழா நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்

பக் 04

## வவுனியாவில் நேற்றுக் கடையடைப்பு நகரசபை முன்றிலில் சத்தியாக்கிரகம்

வவுனியா, ஓக. 13

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான பட்டாணிச்சூர் முஸ்லிம் மையவாடிக்குள் சட்டவிரோதமாக கட்டடம் கட்டப்படுவதைக் கண்டித்தும் நகரசபையின் உபதலைவருக்கு ஜிகாத் அமைப்பின் பெயரில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை கண்டித்தும் நேற்று நகரசபை முன்றிலில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

நகர சபைத்

பக் 04

## நாட்டைவிட்டு வெளியேறினார் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். பல்கலைக்கழக பொறியியல்பீட இணைப்பாளரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் நாட்டை விட்டு வெளியேறி உள்ளார். அவ்வாறு வெளியேறுவதற்குத் தான் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றும் அமைச்சர் டக்ளஸ்

பக் 04

## பெற்றோர் அன்பு, அரவணைப்பு கிடைக்காததால் தவறான வழியை நாடுகின்றனர் இளமட்டத்தினர்

### சிறுமிகள் கர்ப்பம் அடைவதற்கான உந்துதலுக்கு அதுவே காரணம்; தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் உதயனுக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.13

சிறுவர்கள் எதிர்பார்க்கின்ற அன்பும் அரவணைப்பும் பெற்றோரிடமிருந்து உரிய வகையில் கிடைக்காமையினால் அதனை தேடி தவறான வழியில் செல்கின்றனர். இதுவே பாடசாலை மாணவிகள் கர்ப்பம் தரிப்பதற்கான காரணமாகின்றது.

- இவ்வாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்தார். யாழ் மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த அவர் 'உதயனுக்கு' வருகை தந்து வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் தேசிய சிறுவர்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




கிளி., முல்லை. மாவட்டத்தில் மழைக்கான சாத்தியமும் யாழில் மப் புமந்தாரமும் காணப்படுவதுடன் வவுனியா, மன்னாரில் தெளிவான காலநிலை காணப்படலாம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
ஆவணி 12, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,833.06↑
மிலங்கா(MPI) 6,186.71↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 5,737.25Mn
பங்குகளின் அளவு(No.) 124.68Mn
வியாபாரம்(No.) 25,510
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சிங்கலங்கா 585.00
செலிங்கோ கஷுரிங் 26.90
காகோ போட் 136.90
ஒறியன் காமன் 46.30
மொறிசன்(x) 2399.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கொமஷ்சல் வங்கி(R) 7.50
செப்லொயிக் பைனான்ஸ்(R) 2.50
மீறம பிச 350.00
செலான் மேச்சன்(W15) 1.10
மேக்கன்ரைல் சிப்பிங் 300.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பேச்சில் இருந்து தமிழ்க் கூட்டமைப்பு விலகியதை வரவேற்கிறது ஈ.பி.ஆர். எல்.எவ்.

## திட்டவட்டமான முடிவு என்றும் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக. 13

உருப்படியான எந்த பெறுபேற்றையும் எட்டாமல் தொடர்ந்து நடைபெற்ற அரசுடனான பேச்சில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுத்து விலக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது என பத்மநாபா ஈ.பி.ஆர். எல்.எவ். அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 6 மாதங்களுக்கு மேலாக 10 தடவைகள் அரசுடன் பேச்சு நடத்தியுள்ளது. பின்னர் தற்போது அதிலிருந்து விலகியுள்ளது. இந்தப் பேச்சில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலம் கடந்துள்ள போதும் திட்டவட்டமான நிலைப்பாட்டை முன்வைத்து விலகியுள்ளமையை நாம் வரவேற்கிறோம்.

60 ஆண்டுகளுக்கு மேலாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பல்வேறு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றை மானசீகமாகச் செயற்படுத்துவதற்கு பௌத்த சிங்கள மேலாண்மை சக்திகளுக்கு விருப்பம் இல்லை.

தமிழர் தரப்புகளும் அவ்வப்போது கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய விடயங்களை முன்வைத்து பேச்சை ஆரம்பித்தது, அரசு என்ன கூறியது, அரசு அதிகாரப் பகிர்வுக்குத் தயாராக இருந்ததா? இல்லையா? என்பதை மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் சக்திகளுடன் இணைந்து அதிகாரப் பகிர்வு இயக்கத்தை நிறுவ முன்வர வேண்டும்.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் சிங்கள கட்சிகளிடம் இருந்து எதிர்ப்பு வருகிறது எனக் கூற முடியாது. இப்போதைய அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் உள்ளது. போதிய பலம் உள்ளது. எனவே நாடாளுமன்ற தெரிவுக்குழு என்பது மேலும் ஒரு இழுத்தடிப்பு நாடகமே - என்றுள்ளது. (த-14)

# 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு

தென்மராட்சி, ஒக. 13

வீட்டு ஜன்னலை அப்புறப்படுத்தி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் உட்பட பல்வேறு பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மீசாலை கிழக்கில் இடம்பெற்றது. இதே யிடத்தைச் சேர்ந்த மு.கயிலாய பிள்ளை என்பவரது வீட்டிலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இரவு படுத்திருந்ததாகவும் காலையில் ஜன்னல் அகற்றப்பட்டிருந்ததை அவதானித்து வீட்டினுள் பார்த்த போது திருட்டுப்போன விடயம் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றும்

# சுத்திகரிப்புத் தொண்டரைத் தாக்கிய சுகாதாரத் தொழிலாளி கைதானார்

யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சுத்திகரிப்புத் தொண்டர் ஒருவரை மூர்க்கத்தனமாக தாக்கிய சுகாதாரத் தொழிலாளி ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடமை நேரத்தில் மதுபோதையில் இருந்தே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வைத்தியசாலையின் வைத்தியர் விடுதி ஒன்றை துப்புரவு செய்யும் போது இடம் பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் துப்புரவுப் பணியை முன்னெடுத்து வரும் தனியார் நிறுவனம் ஒன்றின் சுகாதாரத் தொழிலாளியான அன்ரன்ராஜ் என்பவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது கடுமையான உட்காயங்களுக்கு இலக்கான யாழ். மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் சுகாதாரத் தொண்டரான தயாபரன் என்பவர் வைத்தியசாலை 24 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சைக்காக உடனடியாக அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியர் விடுதி ஒன்றைச் சுத்தம் செய்யுமாறு சுகாதாரத் தொண்டரான தயாபரன், அன்ரன் ராஜ் என்ற சுத்திகரிப்புத் தொழிலாளியை அழைத்தார். அதனைத் தொடர்ந்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் அம்புலனஸ் படைப்பிரிவினர் இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனையடுத்துப் பொலிஸாரினால் அன்ரன்ராஜ் கைது செய்யப்பட்டார்.



வட்டுக்கோட்டை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும் தென்பகுதிக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர். நேற்று அவர்கள் நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்து நாடாளுமன்ற நிகழ்வுகளைப் பார்வையிட்டனர். தேசிய மொழிகள் மற்றும் இன நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மாணவர் ஒருவரை அணைத்து உச்சி முகர்ந்தார்.

# மாணவனைக் காணவில்லை

கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த சி.பிரதீபன் என்ற பாடசாலை மாணவன் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.கடந்த 10 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற 15 வயதுடைய இந்த மாணவன் பின்னர் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-14)

# முதல் 5 மாதங்களில் மட்டும் 65 சிறுவர் தொழிலாளர்கள்

## அரச அதிபரின் அறிக்கை கூறுகிறது

யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களிலும் 65 சிறுவர் தொழிலாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் 414 சிறுவர்கள் பெற்றோரால் கைவிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:-

இந்த வருடத்தின் ஜனவரி முதல் மே மாதம் வரையிலான காலப் பகுதியில் 253 சிறுவர்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகியுள்ளனர். சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 59 சிறுவர்கள் பாடசாலையை விட்டு விலகியுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இந்தப் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான சிறுவர்கள் இடைவிலகியுள்ளனர்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் 65 சிறுவர் தொழிலாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான சிறுவர் தொழிலாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 131 சிறுவர்கள் பெற்றோரால் கைவிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறான அதிகரிப்புக்கள் தொடர்பில் குறித்த துறைசார் நிபுணர்களிடம் வினவியபோது,

குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளே இவற்றுக்கு அடிப்படைக் காரணமாகும். குடும்பப் பிரச்சினைகளாலேயே பெருமளவான சிறுவர்கள் கைவிடப்பட்டுள்ளனர். இவர்கள் தமது உறவினர்களுடன் அல்லது பராமரிப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். (த-15)

# நிகழ்வுகள்

### நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஒக.13

கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தின் நூற்றாண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நீர்வேலி வாழைக்குலைச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சி கோப்பாய் கிளைத் தலைவர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் செயற்குழு தெரிவு செய்தல் நிகழ்வும் கருத்துரைகளும் இடம்பெறும். (ற-313)

### கலை விழா

காரைநகர், ஒக.13

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகக் கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள் கலை விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-250)

### கௌரவிப்பு

பருத்தித்துறை நகரசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி சபா ரவீந்திரனைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பி.ப. 1 மணிக்கு நெல்லண்டை அம்மன் கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் தலைவராகவும் அதன் கீழ் உள்ள சிறுமலர்கள் பாலர் பாடசாலையின் பணிப்பாளராகவும் நீண்ட காலமாகப் பணியாற்றிவரும் சபா.ரவீந்திரனைக் கௌரவிக்க இரு நிறுவனங்களின் நிர்வாகசபை ஒன்று கூடிமுடிவு எடுத்ததைத் தொடர்ந்து இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ற-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு

# அரசு - கோத்தா இடையே முரண்பாடுகள் சரியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்துக!

### சுமந்திரன் எம்.பி. அறிக்கை



கொழும்பு, ஓக.13

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் மூலமாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகாணப்போவதாக அரசு உறுதிபட அறிவித்திருக்கும் நிலையில் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அரசின் கொள்கை வகுப்பாளர்களில் ஒருவருமான கோத்தபாய ராஜபக்ஷ இதற்கு நேர்மாறான நிலைப்பாடு ஒன்றை எடுத்து கருத்து வெளியிட்டுள்ளார். தற்போது நடைமுறையில் உள்ள அதிகாரப் பகிர்வு நிலைக்கு மேல் அதிகமாக எதுவும் செய்யக் கூடியதாக இருக்கப்போவதில்லை என்பது அவரது கருத்தாகவிருக்கிறது.

இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையில் எவ்வாறு அரசு இணக்கம் காணப்போகின்றது என்று தெரியவில்லை. எனவே அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசு தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும்.

இவ்வாறு தமிழத் தேசியக் கூட்டடைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள அறிக்கையொன்றால் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுமந்திரன் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய அதிகாரப் பகிர்வு நிலை மட்டத்துக்கு மேலதிகமாக எதுவும் செய்யக்கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தற்போது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பு நாம் அனைவரும் ஒன்றாக வாழ்வதற்குப் போதுமானது. இதை விட எதுவித பிரச்சினையும் இருப்பதாக தமக்குத் தெரியவில்லையென்று அவர் கூறியுள்ளார்.

ஜனவரி 10 ஆம் திகதி கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்ட போது 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிகழ்த்திய சொற்பொழிவை தீர்வுக்கான ஒருவழிமுறையாக ஏற்றுக்கொள்வதென ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்தப் பேச்சில் ஜனாதிபதி ''மக்கள் தமது சொந்தப் பகுதிகளில் தமது எதிர்காலத்தையும் அரசியல் - பொருளாதார சூழல்களின் கட்டுப்பாடுகளையும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறியிருந்தார். இதன் சாராம்சம்; ''அவசரமான விடயம் என்ற வகையில் மக்கள் தமது விதியை நிர்ணயித்துக்கொள்வதற்கு அதிகாரங்கள் அவர்களுக்கு பகிரப்படவேண்டும். நாட்டின் இறைமைக்கு பங்கம் ஏற்படாத வகையில் மக்களுக்கு கூடிய அளவு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்'' என்பதாகும்.

இருந்தபோதிலும் அரசின் கோரிக்கையின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் எதற்கும் பத்தாவது சுற்றுப் பேச்சுக்கள் வரையில் அரச தரப்பினால்பதில் அளிக்கப்படவில்லை. இந்த பின்புலத்தில் தான் மேற்கொண்டும் பேச்சுக்களைத் தொடருமுன்னதாக கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகளுக்கு அரசை பதிலளிக்குமாறு நாம் கேட்க நேர்ந்தது.

இப்பொழுது அரசு வேறுவிதமான ஒரு பொறிமுறையை முன்வைப்பதாகத் தெரிகின்றது. அதாவது தேசியப் பிரச்சினை தீர்வுக்கு நாடாளுமன்ற தெரிவுக் குழு நியமிப்பதாகும். அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தமிழ் பத்திரிகையொன்றுக்கு விடுத்துள்ள செய்தியில் தேசிய பிரச்சினை தீர்வுக்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுதான் சிறந்த வழியென்று கூறியிருப்பதாகத் தெரிகின்றது. இதன் மூலம் எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்று காணமுடியும் என்றும் இதில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த நீண்டகால பிரச்சினை தீர்வுக்கான இந்தக் குழுவின் நியமனத்துக்கான நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் இன்னமும் எமக்குத் தெரியவரவில்லை.

இதேசமயம் பாதுகாப்பு செயலாளர் வேறு விதமான நிலைப்பாட்டை எடுத்துள்ளார். எனவே தான் இந்த இரண்டுவித நிலைப்பாடுகளுக்கு மிடையில் அரசின் தெளிவான கொள்கை என்ன என்று நாம் வினவுகின்றோம்.

பாதுகாப்பு செயலாளரின் கருத்தின் பின்னணியில் இது விடயத்தில் எதுவும் மேற்கொண்டு செய்யமுடியாது என அவர் திட்டவட்டமாக கூறியிருக்கும் நிலையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நம்பிக்கை வைக்கும் படி பஸில் ராஜபக்ஷ எவ்வாறு கோரமுடியும்?

- இவ்வாறு சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். (ப)

# வலி.வடக்கு பாதுகாப்பு வலயத்தில் இரவில் தொடரும் திருட்டுக்கள்

### மீளக்குடியமர்ந்த மக்கள் அவதி

வலி.வடக்கு, ஓக. 13

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் இடம்பெறும் திருட்டுக்களினால் மீளக்குடியேறிய மக்கள் பல்வேறு துன்பங்கள்ந்க்கு உள்ளாகுவதுடன் பயத்தினால் தமது வீடுகளுக்குச் செல்வதற்கும் பின்னடித்து வருகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகால இடைவெளியின் பின்னர் தற்போது வலி.வடக்கில் உள்ள பல கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமது உடைந்த வீடுகளை திருத்தும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் பொது மக்கள் தமது எல்லைகளுக்கு முட்கம்பி வேலிபோடுவதற்காக கொண்டு சென்று போடப்படும் சிமெந்துத் தூண்கள் இரவு நேரத்தில் திருடப்படுவதுடன் வீடுகளில் உள்ள இரும்பு யன்னல்கள், கதவுகள் உட்பட ஏனைய பொருள்களும் கள வாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரத்தில் இத்தகைய செயல்கள் இடம்பெறுவதினால் பொதுமக்கள் என்ன செய்வது என்று தெரியாது திண்டாடுகின்றார்கள்.

பகலில் திருட்டு முயற்சியில் ஈடுபடுபவர்களை கையும் களவுமாகப் பலத்த சிரமத்தின் மத்தியில் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தாலும் பொலிஸார் அத்தகையவர்களை நீதிமன்றங்களில் நிறுத்தாது வெளியில் விடுவதினால் தொடர்ந்து அவர்கள் வீடுகளின் உரிமையாளர்களை மிரட்டி பொருள்களை மிகவும் துணிச்சலுடன் எடுத்துச்செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் இரவு தாம் பயத்துடனேயே பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாக மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (த-86)



சங்கானை, செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலயத்தின் நேற்றைய தேர்த்திருவிழாவில் ஆனைமுகன் பக்தர்கள் புடைசூழ வீதி உலா புறப்படத் தயாராகும் காட்சி. (ஒ)

# குருநகர் இளைஞர் மண்ணித்தலையில் கடலில் மூழ்கிச் சாவு

பூநகரி, ஓக.13

குருநகரில் இருந்து படகு மூலம் கௌதாரிமுனை மண்ணித் தலைக்கு நேற்று சுற்றுலா சென்றவர்களில் இளைஞர் ஒருவர் கடலில் குளிக்கும் போது மூழ்கி மரணமானார்.

மண்ணித்தலை துறைமுகம் அருகில் நடந்த இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பூநகரி கௌதாரிமுனை 15 ஆவது பிரிகேட் இராணுவத்தினர் இளைஞரின் சடலத்தை மீட்டெடுத்தனர்.

உயிரிழந்தவர் துஷ்யந்தன் (வயது 17) என்பவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்த இராணுவத்தினர் பின்னர் அதனை விசாரணைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் கையளித்தனர். சடலம் அங்கு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-406)

# தெரிவுக்குழுவுக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு; நாட்டை ஏமாற்றும் செயல் என்கிறது

கொழும்பு, ஓக. 13

''அரசியல் தீர்வு யோசனையைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதானது, முழு நாட்டையும் ஏமாற்றும் செயலாகும். இதை நாம் வரவேற்கப் போவதுமில்லை. இதில் கலந்துகொள்ளப் போவதுமில்லை.''

- இவ்வாறு ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:-

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்கப் போவதாகக் கூறிக்கொண்டு நீண்டகாலமாக இந்த அரசு ஏதோதோ எல்லாம் செய்து கொண்டிருக்கின்றது. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அமைத்து அதனூடாகத் தீர்வு முயற்சிகளை மேற்கொண்டது.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு மூன்று வருடங்கள் கூடி ஆராய்ந்து தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து ஜனாதிபதியின் கையில் கொடுத்தது. அந்தத் தீர்வு யோசனையை ஜனாதிபதி அப்படியே கசக்கி குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார்.

இந்த அறிக்கை தயாரிப்பதற்காக மூன்று வருடங்களும், அதிக நிதியும் செலவிடப்பட்டன. ஆனால், இதனால் நாட்டுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை.

இப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற ஒன்றை உருவாக்கி மீண்டும் காலத்தை விரயமாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசியல் தீர்வு தொடர்பாக காலத்துக்குக் காலம புதிது புதிதான விடயங்களை அறிமுகப்படுத்தி காலத்தை வீணாக்கி அரசு மக்களை ஏமாற்றி வருகின்றது.

அந்த அடிப்படையில் இப்போதைய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாகவும், முழு நாட்டையும் ஏமாற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் தெரிவுக் குழுவுக்கு நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். இதில் நாம் பங்கெடுத்துக்கொள்ள மாட்டோம்.

இந்தத் தெரிவுக்குழுவை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு அரசின் தீர்வு யோசனையை அரசு முதலில் சமர்ப்பிக்க வேண்டும். அது தொடர்பாக நாம் பேசலாம். மக்களும் அதை ஆராய்ந்து கருத்துத் தெரிவிப்பர் - என்றார். (ஒ-சி)

# இலகுவேலைக்கான நிவாரணம் பெறுபவர்கள் நெருக்கடி நிலையில்

### பெயர்ப்பதிவில் ஏற்பட்ட தவறே காரணம்

சண்டிலிப்பாய், ஓக. 13

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இலகு வேலையில் ஈடுபட்டவர்களின் பெயர்கள் பதிவு செய்யும்போது ஏற்பட்ட சில தவறால் இலகு வேலைக்கான நிவாரணத்தைப் பெறமுடியாத நிலை சிலருக்கு ஏற்பட்டுள்ளது.

பல மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தைப் பெறுவதற்காக ஆவலுடன் சங்கத்துக்குச் சென்றவர்கள் நிவாரணம் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாகக் கூறப்பட்டது.

கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாமல் இருந்த இறுதியானதும் ஒக்ரோபர் மாதத்துக்கு உரியதுமான இலகு வேலைக்கான நிவாரணம் தற்பொழுது குடாநாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

வலி.தென்மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இலகு வேலைக்கான நிவாரணம் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள, குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து கிளைகளில் வைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்தில் இலகு வேலையில் ஈடுபட்ட சிலரின் பெயர்கள் பதிவு செய்யும் போது ஏற்பட்ட தவறால் அவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

பிரதேசசெயலருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நிவாரணம் எடுப்பதற்குச் சங்கத்துக்குச் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டைவிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவானந்தாவே அதன் சூத்திரதாரி என்றும் அவர் குற்றஞ்சாட்டி உள்ளார்.

''ஆம்! நான் கைது செய்யப்படுவதில் இருந்து தப்புவதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக லண்டன் பயணமானேன். எனது சட்டத்தரணிகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையில் நான் அமெரிக்காவில் பணியாற்றுவேன்'' என்று பேராசிரியர் ஹூல் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் தமிழர் விரோதப் போக்கும் இந்திய பிராமணியத்துவக் கருத்துக்களைக் கொண்டதுமான 'தி ஹிந்து' பத்திரிகைக்கு மின்- அஞ்சல் மூலம் அளித்த பதிலில் அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் நடைபெற்ற துணைவேந்தர் தேர்தலில் போட்டியிட்டவர் ஹூல். ஒரு கட்டத்தில் அவருக்கு துணைவேந்தர் பதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி நேரில் உறுதி அளித்திருந்தார் என்று அவரே தெரிவித்தார். ஆனால் கடைசியில் வசந்தி அரசரட்ணம் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அரச தரப்பின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து 'சண்டே லீடர்' பத்திரிகையில் பேராசிரியர் ஹூல் மூன்று வாரங்கள் கட்டுரை எழுதி இருந்தார்.

குறிப்பாக ஊர்காவற்றுறைத் தேர்தலில் நடைபெற்ற முறைகேடுக்களுக்காக அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சரவைத் தகுதியுள்ள அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா மீதும் கடுமையான விமர்சனங்களை வைத்திருந்தார். இதற்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் அவமதிப்பு வழக்கு ஒன்றை அமைச்சர் பதிவு செய்துள்ளார்.

''துணைவேந்தர் நியமனத்தில் ஆதரவு அளிக்காததன் காரணத்தாலேயே தனக்கு எதிராக பேராசிரியர் அவதூறு பரப்புகிறார்'' என்று அமைச்சர் டக்ளஸ் தனது கட்சிப் பத்திரிகையிலும் அறிக்கைகளிலும் தெரிவித்திருந்தார்.

''கடைசி மூன்று வார சண்டே லீடர் பத்திரிகையில் எனது கட்டுரைகள் வெளியாகி இருந்தன. தேர்தல் காலங்களில் நான் எவற்றைப் பார்த்தேனோ அவற்றையே முதலாவது கட்டுரையில் தெரிவித்திருந்தேன் அது டக்ளஸுக்கு கோப மூட்டி உள்ளது'' என்று தெரிவித்திருக்கிறார் ஹூல்.

தனக்கு எதிரான வழக்கின் அடுத்த தவணை எதிர்வரும் 15ஆம் திகதி என்ற போதும், இந்தப் பிரச்சினை தீரும் வரைக்கும் நாட்டைவிட்டு வெளியேறும் படி தனது சட்டத்தரணி மட்டுமன்றி நண்பர்களும் கேட்டுக்கொண்டார்கள் என்று பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

''இலங்கையைச் சேர்ந்த நிபுணர்களை திரும்பவும் நாட்டுக்கு வருமாறு ஜனாதிபதி அழைத்த போது, பேராசிரியர் கார்லோ பொன்சேகா ஜனாதிபதியிடம் பேசினார். அப்போது, எனக்கும் எனது மனைவிக்கும் பேராசிரியர் நியமனங்கள் தரப்படும் என்று மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். நான் நாடு திரும்பிய போது அதற்கான உத்தரவை அவர் வழங்கினார். ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. கடந்த ஒரு வருடமாக எனது மனைவி வேலையற்று இருக்கிறார். மறுஅறிவித்தல் வரைக்குமாவது எனக்கு வேலை இருக்கிறது என நினைக்கிறேன்'' என்கிறார் பேராசிரியர் ஹூல். (உ)

## இலங்கையின் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் இன்றி இலங்கையின் மீது தாக்குதல் ஒன்றை நாம் தொடுப்போம். இந்தியர்கள் உறுதியாக ஈழத் தமிழர்களுக்கு ஆதரவளிக்கிறோம் என்பதை இந்த உலகுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்'' - என்றார் சின்ஹா.

இலங்கையில் நடந்த இனப்படுகொலைகளுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தும் வரைக்கும் இதனை நாம் விடப்போவதில்லை என்றும் சின்ஹா கூறினார்.

இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை காரணமாகவே, இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்துச் செல்கிறது என்று அவர் கண்டித்தார்.

சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்துவிடும் என்ற கார்ணத்தாலேயே கொழும்புக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க முடியாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருப்பது வெட்கக்கேடானது என்றும் சின்ஹா குற்றஞ்சாட்டினார். (உ)

## வவுனியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர், உப தலைவர், சபை உறுப்பினர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் மேற்படி சம்பவங்கள் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்ட போதும் அவர் எதுவித பதிலும் தெரிவிக்காத நிலையிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சத்தியாக்கிரகப் போராட்டம் காரணமாக நேற்றையதினம் வவுனியா நகரப் பகுதியில் தமிழ் வர்த்தகர்கள் தமது கடைகளைப் பூட்டி ஹர்த்தால் அனுஷ்டித்தனர். நகரில் சன நடமாட்டமும் குறைந்து வெறிச்சோடி இருந்ததுடன் வீதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்ததால் சற்று பதற்றநிலை காணப்பட்டது.

இதேவேளை, நேற்றையதினப் போராட்டத்தைக் கைவிடுமாறு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சக்ர் நேரடியாக சென்று கேட்டபோதும் சபை உறுப்பினர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்த நிகழ்வில் நகரசபை உபதலைவர் எம்.எம். ரதன் உரை நிகழ்த்துகையில்:-

நாம் இங்கு நடத்தும் உண்ணாவிரப் போராட்டம் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரானது அல்ல. இது சட்டத்தின் பிரகாரங்களை மீறி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கானதே. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த 2 ஆம் திகதி நகரசபையின் விசேட கூட்டத்தில் ஆளும்தரப்பு உறுப்பினர்கள் என்னையும் தமிழ் மக்களது விடுதலை போராட்டத்தையும் தவறாக விமர்சித்தனர். முள்ளிவாய்க்காலுடன் உங்கள் ஆட்டம் முடிந்தது என்று இனவாதம் பேசினர்.

அப்போது முள்ளி வாய்க்கால் தமிழ் இனத்தின் முடிவல்ல அதுதான் ஆரம்பம் எனத் திட்டவட்டமாக அறிவித்தேன் - என்றார். (ஒ-10-311-431)

## சிறிதரன் எம்பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவும் சிறப்பு விருந்தினராக ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் ஆஸ்திரேலிய தூதுவர், யுனிசெவ் அதிகாரி, ஆளுநரின் புதிய செயலாளரும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

வழக்கம் போல மங்கள விளக்கேற்றல், நாடாவைவெட்டி கட்டடத் திறப்பு என சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் அனைத்தும் இடம்பெற்றன.

ஆனால் பாடசாலையின் திறப்பு விழாவையொட்டி சிறப்பு மலர் வெளியீடு மட்டும் நடைபெறவில்லை.

பல்வேறு விடயங்கள், தகவல்கள், வாழ்த்துக்கள் போன்றவற்றை பெரும் சிரமத்தின் மத்தியில் பாடசாலை நிர்வாகம் சோதித்து, சிறப்பான ஒரு மலரை திறப்பு விழா நிகழ்வில் வெளியிட ஆவலுடன் இருந்தது.

நேற்றையதினம் விழா நடைபெற ஏற்பாடாகி இருந்த நிலையில், ஆளுநரின் புதிய செயலாளர் இளங்கோவன் அதிரடி அறிவிப்பு ஒன்றை நேற்றுக் காலையிலேயே - விழா ஆரம்பமாவதற்கு சில மணி நேரத்துக்கு முன்னர் அதிபருக்கு தொலைபேசி மூலம் அறிவித்தார்.

அந்த அறிவிப்பு இதுதான். 'நீங்கள் வெளியிடத் தயார் செய்து வைத்திருக்கும் சிறப்பு மலர் அனைத்தையும் காரியாலயத்திலேயே வைத்திருங்கள். விழாவில் அதனை வெளியிட வேண்டாம். இது மேலிடத்து உத்தரவு'' என்று ஒரேடியாகக் கூறிவிட்டார்.

பாவம் அதிபர். ஆசிரியர்கள் மற்றும் அபிமானிகளின் ஒத்துழைப்புடன் செய்து முடிந்திருந்த அந்த சிறப்பு மலர் பிரதிகள் 500 ஐயும் ஒதுக்குப் புறமாக வைத்து விட்டார். வேறு என்ன தான் செய்வது?


### விற்பனைக்கு

புதிய MUBOTA நெல் அறுவடை செயின் இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 0212224065

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியில் 3 ½ பரப்புக்காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- 0777111400

### பசு மாடு விற்பனைக்கு

ஆறு மா்தங்கள் நிரம்பிய சினையுள்ள ஜேசி இனப் பசுமாடு விற்பனைக்குண்டு. (2 ஆம் ஈத்து) 15 போத்தல் கறக்கக் கூடியது.
தொடர்பு - 0774581237

### ஏல விற்பனை

பனை அபிவிருத்திச் சபையின் பாவனையில் இருந்த பின்வரும் வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனங்கள் அலுவலக நேரத்தில் 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபையின் சந்தைப்படுத்தும் பகுதி அலுவலகத்தில் பார்வையிடலாம். இதற்குரிய கூறுவிலைகளை 20.08.2011 க்கு முன் சபையின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

01. மூச்சக்கர வண்டிகள் (Auto) - 02 — 202-9550, WPGI-4147
02. மோட்டார் சைக்கிள் - 01 153- 8661 (KB-125)

பசுபதி சிவரத்தினம்
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.

தலைமையக முகவரி:
பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செயலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

நாவற்குழி, அமிர்தா வீதியில் அமைந்துள்ள பொன்னுக்கோன் தோட்டத்தில் உள்ள 40 பரப்பு (நாற்பது) காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு- 0217901535, 0777763436

### வேலை ஆள் தேவை

நெல்லியடியிலும், பருத்தித்துறையிலும் உள்ள புடைவை கடைகளுக்கு ஆண் பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் நேரில் பேசலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தொடர்பு இல - 0772814844

### அறிவித்தல்

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் பின்வரும் தலைப்பின் கீழ் பரிசோதனையும், விசாரணையும் செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் வடமாகாணம் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்.

பரிசோதனை விடயம்
சங்கத்தின் 01.09.1999 ஆம் திகதி தொடக்கம் 02.05.2011 ஆம் திகதி வரைக்குமான நிதிப்பெறுகை, நிதிப்பிரயோக நடவடிக்கைகள்

மேற்குறித்த விடயம் தொடர்பாக சங்க நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள், சாட்சியங்கள் சமர்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்குறித்த விலாசத்துக்கு எழுத்து மூலம் 27.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தி. வித்தககலாநிதி,
கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்
(விசாரணை உத்தியோகத்தர்)
கூ. அ.உ.ஆணையாளர் அலுவலகம்,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6794)





### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
31.07.1987

இறப்பு:
15.09.2008

**கமலநாதன் மயூரன்**

(B.B.M. பெங்களூர்)

திதி: பௌர்ணமி
13.08.2011

பாவியரின் கொடுமையினால் - அன்புப்
பாலகனே நீ மறைந்தாய்
நின் ஆவியது பிரிந்ததனால் - நாம்
ஆற்றொணாத் துயரடைந்தோம்
நீ பிரிந்த நிலையதனால் - இங்கே
நிம்மதியை நாமிழந்தோம்
வான்மழை போல் கண்ணீரை - இன்று
வையகத்தே நாம் சொரிந்தோம்

குடும்பத்தினர்
கலட்டி அம்மன் வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிரணிகள் இல்லாமல் தெரிவுக்குழு சாத்தியமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தெரிவுக் குழுவே சிறந்த மார்க்கம் என்று அரசாங்கம் கண்டுபிடித்துள்ளது. அதனால் தானோ என்னவோ, நுனி மூக்கில் கோபம் வந்தது போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தையை அரசு முறித்துக்கொண்டது.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் கூட்டமைப்பினர் அரசிடம் சமர்ப்பித்த மூன்று முக்கிய அம்சங்களுக்கு ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் பதில் அளிப்பதைத் தாமதித்து வந்ததும், அவற்றுக்கு இரண்டு வாரங்களில் பதில் அளிக்குமாறு கூட்டமைப்பு வற்புறுத்தியதை ஒரு காரணமாக, சாட்டாக வைத்து, அதற்குக் காத்திருந்தது போன்று, திடீரெனப் பேச்சிலிருந்து விலகுவதாக அரசாங்கம் அறிவித்ததும் பழைய சங்கதி.

அதேவேளை, அரசின் பலம்மிக்க சூத்திரதாரிகளில் ஒருவரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இனப்பிரச்சினைக்குப் புதிதாகத் தீர்வேதும் தேவையில்லை என்று இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் ருடே'' தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருந்தார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளை அடியோடு ஒழித்துவிட்டதால் இனியும் தீர்வு, அதிகாரப் பகிர்வு, அது இது என்று பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை. எம்மிடம் அரசமைப்பு ஒன்று இருக்கிறது. அதில் திருத்தங்கள் செய்யவேண்டி இருந்தால் அரசால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச முடியும். ஏனெனில் வடக்கு, கிழக்கில் இப்போது நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் -

இரு இனங்களும் இணைந்து வாழ்வதற்குத் தற்போது இருக்கும் அரசமைப்பே போதுமானது. அதில் எந்தப் பிரச்சினைகளும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. கலந்துரையாடல்கள் மூலம் இதற்கான தீர்வினை மக்களிடம் கொடுக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அதாவது, இப்போது புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டாயிற்று. அதனால் இப்போதிருப்பதைவிட மேலான ஒன்றைச் செய்வதற்கான தேவை இருப்பதாக நான் கருதவில்லை -

இந்த அரசமைப்பு, அதிகாரங்களை அடிமட்டம் வரைக்கும் வழங்குகிறது. இப்போது கூட உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தி இருக்கிறோம். விரைவில் மாகாண சபைத் தேர்தலையும் ஜனாதிபதி நடத்த இருக்கிறார். எனவே அதிகாரப் பகிர்வு என்ற ரீதியில் நாங்கள் போதியளவுக்கு ஏற்கனவே வழங்கிவிட்டோம் என்றே நான் நினைக்கிறேன். அதைவிட மேலதிகமாக ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை - என்று பாதுகாப்புச் செயலாளர் கூறியிருந்தார்.

கோத்தபாயவை அடுத்து, அவரது சகோதரரும் பலம் நிறைந்த அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக இனப்,பிரச்சினைக்கு ஆறு மாதங்களில் தீர்வு ஒன்று வகுக்கப்படும், எட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று வகுக்கப்படும். தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத்தில் மறுபரிசீலனை செய்யப்பட்டு தீர்வு தயாரிக்கப்படும் - என்றும் அமைச்சர் விவரித்துள்ளார்.

மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் கருத்துக்களை உள்ளடக்கித் தீர்வு யோசனையைத் தயாரிப்பதே பொருத்தமானதாக அமையும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தில் இருந்து அரசியல் தீர்வு வெளிவருவதே பொருத்தமானதும் ஜனநாயக மானதாகவும் அமையும் - என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மேலும் வியாக்கியானம் தெரிவித்திருக்கிறார்.

அத்தோடு -

அரசின் இந்தத் தீர்வு யோசனை முயற்சி தொடர்பாகத் தமிழ் மக்கள் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. நிச்சயம் அவர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும். அரசியல் தீர்வை எழுத்து மூலம் மட்டும் வழங்கிப் பிரயோசனம் இல்லை. அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் அதன் நன்மைகளை மக்கள் அடையமுடியும் - எனவும் பஸில் ராஜபக்ஷ தமிழ்ப் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களிடம் விளக்கியுள்ளார்.

ஆனால், நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள், அரசாங்கம் அமைக்கவுள்ள தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதற்கு நிபந்தனைகளை விதித்துள்ளன. இனப்பிரச்சினைக்கு அரசு வழங்கவிருக்கும் உத்தேச தீர்வுத் திட்டம் எது என்பதனை, அது அறிவித்தால் மட்டுமே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது குறித்து முடிவு செய்யமுடியும் என்று தெரிவித்துள்ளன.

தேர்தல் காலப் பரப்புரைகளின் போது அறிவித்தது போன்று, இனப் பிரச்சினை குறித்து, தனது யோசனைகள் எவை என்பதனை முன்கூட்டியே அரசு அறிவிக்க வேண்டும். அவ்வாறு வெளியிட்டால் அவற்றைக் கருத்திற்கொண்டு தெரிவுக்குழுவில் பங்குபற்றுவோம். அவ்வாறில்லை என்றால் காலத்தை வீணடிக்கும் அரசின் செயற்பாட்டில் நாம் இணைந்து கொள்ளமாட்டோம் - என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துவிட்டார்.

அதேபோன்று, மற்றொரு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும், தெரிவுக் குழுவைக் கூட்டுவதற்கு முன்னர், அரசு தனது சொந்தத் திட்டத்தை அறி விக்க வேண்டும் என்று வற்புறுத்தி உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளது.

எமது தீர்வு யோசனையை அரசிடம் முன்வைத்தோம்; அதன் கருத்தைக் கேட்டோம். எமது யோசனை குறித்து அரசு சாதகமான பதிலை முன்வைத்தால் மட்டுமே மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படலாம். அவ்வாறு நடைபெற்று அதில் நல்லதோர் தீர்வை எட்டி, அதனை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்தால் மட்டுமே அதில் பங்குபற்றவது குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்கமுடியும் என்று கூட்டமைப்பு அறுத்து உறுத்துக் கூறியுள்ளது.

இத்தகைய ஒரு பின்னணியில், அரசு தனது உத்தேச தீர்வு யோசனையைத் திட்டவட்டமாக அறிவித்தால் மட்டுமே, தெரிவுக்குழு ஊடான தீர்வு முயற்சி சாத்தியம். இல்லையேல் கோத்தபாய கூறுவது போன்று, அதிகாரப் பகிர்வு அது இது என்று பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்ற கருத்தை அரசு வசதியாக விழுங்கிக் கொள்ள முயலலாம். ஆனால் சர்வதேசம் சுற்றி வர வலை போட்டுக் காத்திருக்கிறது. மஹிந்த சகோதரர்கள் விழித்துப் பார்த்து இதனை உணர்ந்து ஏனைய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளைச் சீரணித்துக் கொள்ளவேண்டும். சிலரைச் சில காலம் ஏமாற்றலாம், பலரைப் பல காலமாக ஏமாற்ற முடியாது. அதாவது சர்வதேச நாடுகளின் கண்களில் மண் தூவுவது அவ்வளவு இலகுவானதல்ல; தமிழ் மக்களை ஏமாற்றுவது போன்று...!

# காலாவதியான 'இன்சுலின்' இறக்குமதி விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஓக. 13

உலக சுகாதார நிறுவனத்தால் பாவனைக்கு உதவாதது என அறிவிக்கப்பட்ட 'இன்சுலின்' மருந்துவகையை சுகாதார அமைச்சருக்கும் தெரியாமல் இறக்குமதி செய்யச் சுகாதார அமைச்சின் அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டமை குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து நீரிழிவு நோயாளருக்காக இறக்குமதி செய்யப்பட விருந்த 'இன்சுலின்' மருந்தே பாவனைக்கு உத வாத நிலையில் உள்ளதாகச் சுகாதார அமைச் சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த மருந்தை இறக்குமதி செய்வது தொடர்பான கேள்வி கோரலுக்கு அனுமதி வழங்கப்பட்டமை குறித்து விசாரணைகளை மேற்கொள்ள விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். இது தொடர்பான விசாரணை அறிக்கையை ஒரு வாரகாலத்துள் கையளிக்கு மாறு அக்குழுவுக்குத் தாம் பணித்துள்ளதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார். அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த 'இன்சுலின்' மருந்து வகை பாவனைக்கு உதவாதது என உலக சுகாதார நிறுவனமும் பரிந்துரை வழங்கியுள்ளது. ஆனால் இந்தியா கூட 94 வீதம் வரை வெளிநாடு களிலிருந்து இறக்குமதியாகும் 'இன்சுலின்' மருந்தையே பயன்படுத்துகிறது.

இவ்வாறு இருக்கையில் பயன்பாட்டுக்கு உதவாத பெருந்தொகை 'இன்சுலின்' மருந்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு சுகாதார அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெரிந்தோ தெரியாமலோ சுகாதார அமைச்சின் செயலாளரும் இதற்கு அனுமதி வழங்கி, கையெழுத்திட்டுள்ளார்- என்றார். இந்த மருந்தை இறக்குமதி செய்வதற்குக் கேள்வி கோரல் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக விசாரணை அறிக்கை தம்மிடம் கையளிக்கப் பட்டதும். அதற்குப் பொறுப்பானோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (த-22)

# அமெரிக்காவுக்கு அடிபணியாமல் விசாரணைகள் நடத்த வேண்டும்

## அரசிடம் ஜே.வி.பி.கோரிக்கை

கொழும்பு,ஓக.13

அமெரிக்க போர் விமானங்கள் இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்தன என வெளியான தகவல்களில் யார் பொய் சொல்கின்றனர் எனக் கேள்வி எழுப்பும் ஜே.வி.பி., அமெரிக்காவுக்கு அடி பணிந்து இந்த விடயத்தை மூடி மறைக்காது சரியான விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கப் போர் விமானங்கள் இலங்கை வான்பரப்புக்குள் அத்துமீறியது உண்மையே என விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஆனால் அவ்வாறான அத்துமீறல்கள் இடம் பெறவில்லை என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் கூறியுள்ளார்.

விமானங்கள் அத்துமீறி பிரவேசித்தமை தொடர்பில் எந்தத் தரப்பினர் உண்மை சொல்கின்றார்கள் என்பது சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது எனத் தெரிவிக்கும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, அமெரிக்காவுக்கு அடி பணிந்து இந்த விடயத்தை மூடி மறைக்காது சரியான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விமானப்படையினர் ராடர்களின் மூலம் அவதானித்ததையே அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும், அமைச்சரின் கருத்துக்கள் நம்பக் கூடிய வகையில் அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதே வேளை, இந்தத் தகவல்களை வெளியிட்ட அதிகாரியை அரசு இடமாற்றம் செய்யக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# திருமுறைப் பெருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 13

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் திருமுறைப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு கொக்குவில் கிருபாகர ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழவில் காலை 6 மணிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்று காலை 9 மணிக்கு சமய குரவர்கள், பன்னிரு திருமுறைச் சுவடிகள் என்பவற்றுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தியாசாலை மாணவர்கள் திருமுறை மன்றத்தில் பயிற்சி பெறும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள், யாழ். சிவதொண்டர் நிலைய மாணவர்கள் நிகழ்த்தும் திருமுறைப் பண்ணிசை நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து கலா வித்தகர் செல்வி சுகன்யா புலேந்திர குமாரை கௌரவிக்கும் நிகழ்வும், திருமுறை மன்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் கலந்துகொள்வார். (ம-313)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக 13

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நல்லூர் 63 நாயன்மார்கள் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ள ஆன்மிக சொற்பொழிவுகளில் இன்று சனிக்கிழமை 'குருவாய் வருவாய்' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(ம-311)

* * *

யாழ்ப்பாணம், ஓக 13

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கை நடத்திவருகின்றது.

இன்று சனிக்கிழமை பத்தாம் திருவிழாவில் பொன்.ஸ்ரீ வாமதேவன், கே.குகபரன், எஸ். துரைராசா, எஸ். செந்தூரன் ஆகியோர் பங்குபற்றும் இசையரங்கு இடம்பெறும்.

(ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் சமய சொற்பொழிவுகளையும், கலை நிகழ்வுகள்ளயும் நடத்தி வருகின்றது. இன்று சனிக்கிழமை பத்தாம் திருவிழாவில் 'கலியுகத்தில் கண் கண்ட தெய்வம் முருகன்' எனும் தலைப்பில் காரை எம்.பி. அருளானந்தன் சமய சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து புஸ்பமலர் யோகநாதனின் நெறியாள்கையில் இசைக்கச்சேரி இடம்பெறும். தொடர்ந்து வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை, தொல்புரம் ஆதி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்கு பற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான கால்நடை வைத்திய நிலையம் பண்டத்தரிப்பில்

## வடமாகாணக் கால்நடை அபிவிருத்தி அமைச்சு அறிவிப்பு

நவாலி, ஒக. 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான கால்நடை வைத்திய நிலையம் பண்டத்தரிப்பில் அமைக்கப்படவுள்ளது.

இந்த வைத்திய நிலையம் சண்டிலிப்பாயில் நீண்ட காலமாக இயங்கி வருகின்றது. இதற்கு நிரந்தரக் கட்டடமொன்று அமைப்பதற்கென இரு காணிகள் நவாலியிலும் பண்டத்தரிப்பிலும் தெரிவு செய்யப்பட்டதில் பண்டத்தரிப்பிலேயே இதனை அமைப்பதென்று முடிவாகியிருந்தது.

இதனை ஆட்சேபித்து பல பொது அமைப்புக்கள் இந்த வைத்திய நிலையம் அனைத்துப் பகுதிக்குமான மையத்தில் அமையவேண்டுமென்றும் காக்கை தீவு, ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதி மக்கள் அதிகளவு கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள். இவர்கள் கால்நடைகளை அங்கு கொண்டு சென்று வருவதில் பல செலவுகளும் கஷ்டங்களும் ஏற்படுமென்றும் மகஜர்களை அனுப்பியும் நேரில்முறையிட்டு வந்ததைத் தொடர்ந்தும் கட்டட வேலைகள் சிறிது காலம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் பண்டத்தரிப்பு பிரதேசத்திலேயே இது நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று வடக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சினால் உறுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். (த-100)

# தெரு விளக்கு ஒளிர்வதில்லை

தென்மராட்சி, ஒக. 13

மட்டுவில் தெற்கு வேரக்கேணி சந்தியில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்கு நீண்ட காலமாக ஒளிர்வதில்லையென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மட்டுவில் மத்தி, மட்டுவில் தெற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து வேரக்கேணி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த தெருவிளக்கு நீண்ட காலமாக ஒளிராததால் வாகனங்களில் வருவோர் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

# தென்மராட்சி தெற்கு வயலை ஊடறுக்கும் வாய்க்காலுக்கு மதகு அமைக்கக் கோரிக்கை

## வாகனங்கள் பயணிக்க வசதியாக

தென்மராட்சி, ஒக. 13

தென்மராட்சி தெற்குப் பகுதியில் உள்ள நெல் வயல்களை ஊடறுத்துச் செல்லும் கீரை வாய்க்காலின் இரு இடங்களில் மதகுகள் அமைத்துத் தருமாறு நெற்செய்கையாளர்கள் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட நெல் வயல்களில் மழைக் காலங்களில் உபரியாக உள்ள நீரும் அந்தப் பகுதியில் உள்ள குளத்திலிருந்து வெளியேறும் நீரும் இந்த வாய்க்கால் ஊடாக சாவகச்சேரி கடலேரியைச் சென்றடைகின்றது.

இந்த வாய்க்காலுக்கு அப்பால் உள்ள நெல்வயல்களுக்குப் பல்வேறு தேவைகளுக்காகச் செல்லும் உழவு இயந்திரங்கள் வாய்க்காலுக்குக் குறுக்காக மதகுகள் இல்லாமையால் அதனைக் கடந்து செல்ல முடியாமல் சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் சுற்றியே குறித்த இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் மூன்று கிலோமீற்றர் நீளம் கொண்ட இந்த வாய்க்காலின் இரு இடங்களில் மதகுகள் அமைக்கப்படின் நெற்செய்கையாளருக்கு ஏற்படும் காலதாமதங்களையும், சிரமங்களையும் தவிர்க்க முடியுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் தொடங்கியுள்ளதால் மழைக் காலம் ஆரம்பிக்க முன்னர் இந்த வேலையை பூர்த்தி செய்து வழங்குமாறு உரிய அதிகாரிகளை அவர்கள் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(த-207)

# இளைஞர் நாடாளுமன்றத்தின் யாழ். உறுப்பினர்கள் பதவியேற்பு

வலி.வடக்கு, ஒக. 13

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் நாடாளுமன்றத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அண்மையில் அனுராதபுரத்தில் இடம்பெற்ற இளைஞர் நாடாளுமன்ற அமர்வின்போது சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து இளைஞர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது சத்தியப் பிரமாணத்தை தமிழ்க் கலாசார மரபுக்கு ஏற்ப செய்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரம் வருமாறு:

நவதர்சன் (நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவு), கிரிசேந்திரா (ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு), சயந்தன் ( காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு), குணேஸ் (சங்கானை பிரதேச செயலாளர் பிரிவு), சிவச்செல்வம் (கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவு), ஸ்ரீராகவன் (வேலணை பிரதேச செயலாளர் பிரிவு), விமலதாஸ் ( சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு), ரவீந்திரன் (நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு), நஜீதரன் (கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு), மக்ஸ்மில் ( யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு),அனுசன்( தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவு), சுபாகர்(சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு), யுகராஜ் (உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு). (த-86)

NIBM
BUILDING COMPETENCIES
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC)
அங்கீகாரம் பெற்ற அரச நிறுவனம் உங்களுக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது.
வியாபார மற்றும் முகாமைத்துவ கற்கை நெறிகள்


Certificate course in Customer Service Management
Certificate course in Communication and Business Skills
Certificate course in Business Management
Certificate course in Human Resource Management
www.nisaart.com
தொடர்புகளுக்கு:
077 071 6974
021 222 0360
021 222 0361
021 222 0362



Call Now
Special Discount
இல. 40 கல்லூரி வீதி
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்.

தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள்
தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு
இடம்:
யாழ்.பொது நூலகம்– கேட்போர் கூடம்
காலம்:
14.08.2011
ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10 மணி
"பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமான தாகும்."
பங்குபற்றுனர்:
ஆர்வமுடைய அனைவரும்
வடமாகாண அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் அடிப்படை வசதிகளில்லை; மீளக்குடியமரத் தயக்கம் காட்டும் மக்கள்





யாழ்ப்பாணம், ஓக. 13

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வலி.வடக்குப் பகுதியில் மக்கள் வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் ஏதும் இல்லை.

இதன் காரணமாக மீளக் குடியமர விரும்பாமல் மக்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் பட்சத்தில் தாம் குடியமரத் தயார் என்றும் மக்கள் கூறுகின்ற னர்.

வலி.வடக்குப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காக யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் அந்தப் பகுதிக்கு சென்றனர்.

வலி.வடக்கின் வீமன்காமம், மாவிட்டபுரம், கொல்லன் கலட்டி, சேந்தாங்குளம், வலித்தூண்டல் உள்ளிட்ட 7 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களை கூட்டாகவும் தனியாகவும் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

அதன்போதே, மீளக்குடியமர்ந்து வாழ்ந்துவரும் மக்கள் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளனர்.

அந்த மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

எமது சொந்த மண்ணில் வாழவேண்டும் என்ற அவாவில் மீளக்குடியமர்ந்து விட்டோம். ஆனால் எமது பகுதிகளில் வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்தித் தரவில்லை.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டபோது 12 கூரைத் தகரங்கள் மட்டும் வழங்கப்பட்டன. அதைத் தவிர வேறு எந்த உதவியும் எமக்குக் கிடைக்கவில்லை.

வீடுகள் அனைத்தும் இடிந்தழிந்த நிலையில் உள்ளன. மலசல கூட வசதிகள் இல்லை. குடிதண்ணீர் பெறுவதுக்காக புனரமைக்கபட்ட- சுத்திகரிக்கப்பட்ட கிணறுகள் இல்லை.

அடிப்படை சுகாதார வசதிகள் இல்லை. வாழ்வாதார முயற்சிகளை முன்னெடுக்க முடியா துள்ளது. மின்சார இணைப்புகள் வழங்கப்படவில்லை. வீதி வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை- என்று கூறப்பட்டுள்ளது.

(ம-14)

## தற்செயல் நிவாரணத்துக்கு ரூபா 50 ஆயிரம் நிதி

நாவற்குழி, ஓக. 13

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு 5 பேருக்கு தற்செயல் நிவாரணம் கொடுப்பனவை வழங்குவதற்கு 50ஆயிரம் ரூபாவை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளது.

கடும் மழை, தீ விபத்து போன்றவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட வீடுகள் திருத்த ஆரம்பிக்கப்பட்டதும் அடுத்த கட்டக் கொடுப்பனவு வழங்க பிரதேச செயலர் நடவடிக்கை எடுப்பார் என்று கூறப்பட்டது. (ம-121)

## கைதடி பரவைக்கடலில் உப்பு அள்ளும் மக்கள்

நாவற்குழி, ஓக.13

கோப்பாய், கைதடி பரவைக் கடலின் தெற்குப் புறமாக விளைந்துள்ள உப்பை அள்ளுவதில் இந்தப் பிரதேச மக்கள் ஈடுபட்டு உள்ளனர்.

நீண்ட காலத்துக்குப் பின்பு இந்தக் கடல் பிரதேசத்தில் உப்பு விளைந்துள்ளது.

கைதடி நீர்வேலி பரவைக் கடல் பிரதேசத்திலும் உப்பு அள்ளுவதில் பொது மக்கள் ஈடுபட்டுள்ளனர். (ம-121)

## உலக வங்கி அதிகாரிகள் தென்மராட்சிக்கு விஜயம்

### வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டனர்

தென்மராட்சி, ஓக. 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியால் மேற்கொள்ளப்படும் மீள் எழுச்சி வேலைத் திட்டங்களைப் பார்வையிட உலக வங்கியின் உயர் அதிகாரிகள் கடந்த 10 ஆம் திகதி பிரதேசத்துக்கு வருகை தந்திருந்தனர்.

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதிக்கு விஜயம் செய்த குழுவினர் அங்கு மீள் எழுச்சித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டதுடன் அவைகளால் பயன்பெறும் மக்களையும் சந்தித்து வேலைத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்த அதிகாரிகளுடன் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸாண்டர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தில் உலக வங்கியால் மேற்கொள்ளப்படும் மீள் எழுச்சித் திட்டக் கிராமங்களான மந்துவில் மேற்கு, மீசாலை வடக்கு, கோயிற்குடியிருப்பு , கரம்பகம், தனங்களப்பு, மந்துவில் கிழக்கு, கைதடி வடக்கு, கைதடி, நாவற்குழி, மறவன்புலோ ஆகியவற்றின் பயனாளிகளையும் இந்தக் குழுவினர் சந்தித்து உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

### கல்விக்காக...



புதிய படைப்பு: சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. ஆரம்பக் கல்வி கற்றல் கண்காட்சியை தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ. வரதராஜ மூர்த்தி திறந்து வைக்கின்றார். அருகில் அதிபர் வே.கந்தசாமி, ஆசிரியர்கள் கு.சண்முகலிங்கம், நகுலேஸ்வரன், செல்வி ந.நாகம்மா ஆகியோர் உள்ளனர். (த-496)

## மாவிட்டபுர மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக.13

வலி.வடக்கு, மாவிட்டபுரத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களின் பிரச்சினைகள் குறித்து விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் இது குறித்த விவரங்களைத் திரட்டி வருகிறது.

இன்று சனிக்கிழமை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் வைத்து இதற்கான படிவங்கள் விநியோகம் செய்யப்படும் என்று சங்கச் செயலாளர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.(ம-207)

## ரூ.8 லட்சம் பெறுமதியான நகைகள் சுன்னாகத்தில் புதன் இரவு திருட்டு

வலி.வடக்கு, ஓக. 13

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் உள்ள வீடொன்றில் சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. (ம-86)

## பெண்ணின் கைப்பையைப் பறித்தவர்கள் பணம் இல்லாததால் வீசிச் சென்றனர்

சண்டிலிப்பாய், ஓக. 13

வங்கியிலிருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணின் கைப்பையை அபகரித்துச் சென்ற இளைஞர்கள் பையில் பணமில்லாததால் ஏமாற்றத்துக்குள்ளான இவர்கள் பையை வீதியில் வீசிவிட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவம் சுதுமலை வடக்கில் அண்மையில் இடம் பெற்றுள்ளது. இது பற்றிக் கூறப்படுவதாவது:

கொழும்பிலிருந்து வந்து சுதுமலையிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருக்கும் இளம்பெண் ஒருவர் மானிப்பாயிலுள்ள வங்கியொன்றுக்குச்சென்று கொழும்பிலுள்ள உறவினருக்குப் பணத்தை அனுப்பி விட்டு வீடு நோக்கிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

இளம் பெண்ணின் செயற்பாட்டை நன்கு அவதானித்துக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்று மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தைச் சாதகமாகப் பயன்படுத்திப் பெண்ணிடம் இருந்த கைப்பையை அபகரித்துச் சென்றனர்.

எதிர்பார்ப்புடன் கைப்பையை அபகரித்துச் சென்ற இளைஞர்கள் பையில் பணமில்லாததால் அதனை வீதியில் எறிந்து விட்டுச் சென்றனர்.

(த-115)

## தொலைத்தொடர்பு சேவையை விஸ்தரிக்கும் பணிகள் கைதடியில் இடை நிறுத்தம்

நாவற்குழி, ஓக.13

கைதடி, மட்டுவில் பிரதேசங்களுக்கு தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்க ரெலிக்கொம் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் இடை நடுவில் விடப்பட்டுள்ளன.

நவீன தொழிநுட்ப வசதிகளுடனான இணைப்பு வழங்கப்படும் என்ற ஆவலில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பொது மக்கள் இதனால் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

ரெலிக்கொம் நிறுவனத்தின் கேயிள் இணைப்புக்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் கண்டி வீதியை மட்டும் முதன்மைப் படுத்தியதாக வழங்கப்பட்டு உள்ளது.

கிராமப் புறங்களில் உள்ள பொதுமக்களுக்கு சேவைகள் விரைவாக விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர். (ம-121)

## மாற்றுவலுவாளருக்கு தொழில் வாய்ப்புகள்

நாவற்குழி, ஓக.13

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு வேலை வாய்ப்பு சுண்டுக்குளியிலுள்ள ஜெய்ப்பூர் நிறுவனம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 தனியார் துறை நிறுவனங்கள் இவர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்களை வழங்க முன்வந்துள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிவரம், தொலைபேசி இலக்கங்களுடன் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்க லிபரல் கட்சி எடுத்த முடிவு சரியானதாகும்

## கனேடியத் தமிழர் தேசிய சபைப் பேச்சாளர்

இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக அதிகார பூர்வமான விசாரணைக்கு அழைப்பு விடுவதன் மூலம் மோசமான போர்க்குற்ற மீறல்களையும் மனித இனத்திற் கெதிரான குற்றங்களைப் புரிந்தவர்களையும் தண்டனைக்குட்படுத்தக் கனேடிய லிபரல் கட்சி தனது சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்று கனேடியத் தமிழர் தேசிய சபையின் பேச்சாளர் கிருஷ்ணா சரவணமுத்து தெரிவித்தார்.

லிபரல் கட்சித் தலைவர் பொப் றேயின் பணிமனையால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் லிபரல் கட்சியும் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்குழுவும் இணைந்து இலங்கையை சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கனேடியத் தமிழர் தேசிய அவையானது நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மைக்கொலம் ஆகியோரைச் சந்தித்து சர்வதேசப் போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவு கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அறிவிப்பானது இலங்கை அரசு அண்மையில் பொதுமக்களின் இழப்புக்களை ஏற்றுக்கொண்டதன் பின்னணியில் வெளியாகியுள்ளது.

மேலும் கனேடியத் தமிழர் தேசிய சபையானது இங்குள்ள முக்கிய கட்சிகளுடன் இணைந்து இலங்கையில் இடம்பெற்ற அப்பாவிப் பொதுமக்களின் படுகொலையும் தற்பொழுது நடந்துகொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களையும் அரசியல் பாகுபாட் டையும் வெளிக்கொணர்வதில் தொடர்ந்து ஈடுபடும்- என்றார் அவர்.

இதேவேளை கனேடிய இரண்டு முக்கிய கட்சிகள் போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ள இந்தநிலையில் எதிர்வரும் வாரங்களில் ஆளுங்கட்சியுடனும் கனேடியத் தமிழர் தேசிய அவை பேச்சுகளை நடத்தவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்குச் செல்லும் யாத்திரிகர் பொலிஸில் பதிவு செய்ய வேண்டும்

இலங்கையில் இருந்து தமிழகத்துக்குச் செல்லும் இலங்கையர்கள் பொலிஸ் நிலையத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தியாவுக்குள் செல்லும் யாத்திரிகர்கள் மேலதிக பாதுகாப்புக் காரணங்களுக்காக பொலி ஸாரிடம் தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு இந்தியாவுக்கான இலங்கையின் பிரதித்தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை யாத்திரிகர்கள் மீது சென்னையில் அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி தாக்குதல் சம்பவத்தில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

யாத்திரிகர்களின் வசதி கருதி விமான நிலையங்களிலேயே தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையர்கள் தமது பயண விவரங்களையும் தங்குமிட விவரங்களையும் பொலிஸாருக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறான தகவல்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்குப் போதியளவு பாதுகாப்பை வழங்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.



சிறந்த சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் ச.ஜெயானந்தனின் சேவை நயப்பு விழா நவாலி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. நவாலி மகாவித்தியாலய அதிபர் இ.வசந்தகுமார் விழா நாயகனைக் கௌரவிக்கிறார்.(ம-555)

# மாவிட்டபுரம் ஆலய உபயகாரர்களை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.13

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் விடே உபயங்களை ஏற்று நடத்தும் உபயகாரர்களை எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவை ஆதீனக்கர்த்தாவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை கார்த்திகை உபயம், ஷஷ்டி உபயம், சதுர்த்தி உபயம், சங்கிராந்தி உபயம், இலட்சார்ச்சனை பத்து தினங்கள் உபயம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணிச்சதுர்த்தி ஆகிய உபயங்கள், நவராத்திரி 10 தினங்கள் உபயம், கந்த ஷஷ்டி உபயம், கார்த்திகை சோமவாரம் உபயம், மார்கழித் திருவெம்பாவை உபயம் ஆகியவற்றை ஏற்று நடத்தி வந்தவர்களும் வெள்ளிக்கிழமைகள், தைச் சங்கிராந்தி, அமாவாசை விரதங்கள், பௌர்ணமி விரதங்கள், நடேசன் அபிஷேக உபயங்கள், பங்குனித் திங்கள் உபயங்கள், ஆடிச்செவ்வாய் உபயங்கள், ஆவணி ஞாயிறு உபயங்கள், புரட்டாதிச்சனி உபயங்கள், ஐப்பசி வெள்ளி உபயங்கள் ஆகிய உபயங்களை ஏற்று நடந்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளுமாறு மாவை ஆதீனகர்த்தா து.இரத்தினசபாபதிக் குருக்கள் அறிவித்துள்ளார். (ம-313)

# சிங்கள யாத்திரிகர் மீதான தாக்குதல் ஜாதிக ஹெல உறுமய கண்டனம்

சென்னையில் யாத்திரிகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தமிழக அரசு பொறுப்பு ஏற்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தெரிவித்துள்ளது.

மேலும் சிங்கள யாத்திரிகர்கள் மீதான தாக்குதல்களை தாம் வன்மையாகக் கண் டிப்பதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

பௌத்த மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக இந்திய பௌத்த மக்களை அணி திரட்ட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (வ)

## பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில்

தென்மராட்சி பிரதேச உதவிப்பொலிஸ் அதிகாரி தொடர்ச்சியாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மூன்று தினங்களாக தொடர்ச்சியாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதால் அவரது இரத்தமாதிரி ஆய்வு கூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.


## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 252 | சீட்டிழுப்புத் திகதி 11.08.2011

வெற்றி இலக்கங்கள்: 17 48 58 59 | சுப்பர் இலக்கம்: 09

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 8,352,470/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 74858 | ரூ. 20/= | ரூ. 1,497,160 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 6794 | ரூ. 40/= | ரூ. 271,760 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 5841 | ரூ. 100/= | ரூ. 584,100 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 549 | ரூ. 200/= | ரூ. 109,800 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 127 | ரூ. 1,500/= | ரூ. 190,500 |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 13 | ரூ. 3,000/= | ரூ. 39,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 8,352,470/= | |
| மொத்த எண்ணிக்கை | 88182 | | ரூ. 2,692,320/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 8,579,630/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்வித்த அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk



## Hatton National Bank

### அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி,பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.06.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 20.08.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...**

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

**அல்லது**

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

**ஏல விற்பனைத் திகதியைப் பிற்போடும் மற்றும் ஏலத்தை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.**

**ஹற்றன் நஷனல் வங்கி** (சி/2660)



## தவறிவிட்டது

இல.103, பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த கலிஸ்ரா சிவஞானம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 867153403V இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பன கடந்த 04.08.2011 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.05, பிளர்ச்சர்ஸ் லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்)


## மரண அறிவித்தல்

### S. வேலுப்பிள்ளை

*(யோகவிலாஸ் கச்சான் அலுவா உரிமையாளர்)*



கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட S.வேலுப்பிள்ளை (11.08.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2011) ஞாயிற்றக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.அன்னம்மா
(மனைவி)

77/1, கோயில் வீதி,
கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் சிவக்கொழுந்து



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் சிவக்கொழுந்து 11.08.2011 வியாழக்கிழமை தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவப்பா- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- நாகமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் சிதம்பரநாதன், நித்தியானந்தன், ஆனந்தகோபாலன் (பிரான்ஸ்), இரதிதேவி (டென்மார்க்), செல்வரதி, திலகவதி, செல்வராணி, கமலநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும் வரதா மணி, இராசலட்சுமி, மங்களேஸ்வரி, பாலசுந்தரம், செல்வராசா, குலராசசேகரம், சின்னராசா, வதனரூபி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2011). ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின்

# தலைமைப் பொறுப்பை விரைவில் ராஜினாமாச் செய்வார் பொன்சேகா

## ரணிலுடனான பேச்சில் இணக்கம்



ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பொறுப்பிலிருந்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விரைவில் ராஜினாமாச் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சரத் பொன்சேகாவுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சில் காணப்பட்ட இணக்கத்தை அடுத்தே அவர் அந்தப் பதவியிலி ருந்து இராஜினாமாச் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டது.ஐக்கிய தேசியக் கட்சியில் இரண்டாம் நிலைத் தலைவர் பதவி அவருக்கு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தினையடுத்தே அவர் இந்தத் தீர்மானத்தை மேற் கொண்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அவசரமாக சரத் பொன் சேகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவை முதல்வர் வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நிறுத்துவது குறித்து இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என அந்தக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச)

## தேர்தல் நடத்துவது தொடர்பில் விசேட விளக்கம்

கொழும்பு, ஒக.13

மீதமுள்ள 23 உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் தொடர்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கும் உதவித்தேர்தல் ஆணயாளர்களுக்கும் இடையில் தேர்தல்கள் செயலகத்தில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது வேட்புமனுக்களை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. தேர்தலை எவ்வாறு சிறப்புற நடத்துவது என்பது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகம் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு விளக்கமளிப்பார் என மேலதிக தேர்தல் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.பி. சுமணசிறி தெரிவித்துள்ளார். தேர்தல் வேட்புமனுக்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் வெற்றிடம்

சப்ரகமுவ மாகாணத்தி லுள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக சப்ரகமுவ மாகாணசபையின் சிரேஷ்ட உறுப்பினர் எம்.வை. எம்.இப்ணார் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையின் கீழ் அனைவருக்கும் சமஉரிமை, சமவாய்ப்பு வழங்கப்படுமென கூறப்பட்டபோதிலும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ்மொழி மூல மாணவர்கள், ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



பீஜிங் நகரில் அமைந்துள்ள வெளிநாட்டு மொழிக்கற்கை பல்கலைக்கழகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.
இந்தப் பட்டம் துணைவேந்தர் பேராசிரியர் சென் யுலூவினால் ஜனாதிபதிக்குக் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# கஷ்டத்தில் வாழும் சிறுவர்கள்; இரும்புகள் சேகரித்து விற்பனை

வடபகுதி சிறுவர்கள் கஷ்டத்தின் காரணமாக உயிராபத்தையும் கவனத்தில் கொள்ளாது இருப்புத் துண்டுகளைச் சேகரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் சிறுவர்கள் கண்ணிவெடி உள்ளிட்ட வெடிபொருள்களின் இரும்புத் துண்டுகளைச் சேகரித்து வருகின்றனர்.

இராணுவத்தினால் பாதுகாப்பற்ற பிரதேசம் என அறிவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் சென்று இவர்கள் இரும்புத் துண்டுகளைச் சேகரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் காரணமாக பெற்றோரை இழந்த மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இந்த நிலைமைய்ய எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, இந்த மாவட்டங்களில் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

சில சிறுவர்கள் கூலித் தொழில் செய்ய ஆரம்பித்துள்ளனர். இதன் காரணமாக சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையில் வடபகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசினால் முடியாமல் போயுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# யானைகள் கணக்கெடுப்புத் திட்டத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஒக.13

இலங்கையில் யானைகளைக் கணக்கெடுப்பதற்கான திட்டத் திற்கு ஆதரவளிப்பதிலிருந்து தாம் விலகிக்கொள்கின்றனர் என வனஜீவராசிகள் பாதுகாப்புக் குழுவொன்று தெரிவித்துள்ளது. யானைகள் மேலும் பிடிக்கப்படுவதற்கு இந்தத் திட்டம் பயன்படுத்தப்படும் என்ற அச்சமே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளாவிய ரீதியில் யானைக் கணக்கெடுப்பு நடவடிக்கை நேற்றுமுன் தினம் ஆரம்பமானது.

இந்தநாட்டில் சுமார் 40,000 யானைகள் உள்ளன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சொற்ப எண்ணிக்கையான யானைகள் பௌத்த மற்றும் இந்து ஆலயங்களில் சமய நடவடிக்கைளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த யானைக் கணக் கெடுப்புத் திட்டம் மிகச் சிக்கலான இலக்காகும். துல்லியமான கணக்கெடுப்பாக இல்லாமல் ஒரு மதிப்பீடாகவே இது அமையும் என அதிகாரிகள் நம்புகின்றனர். (ச)




அழகு மஞ்சம்

பல்லவி

அழகு மஞ்சம் மின்னொளியில் மிதந்து வந்தது
அருள்பொழியும் முருகனைக் கண்டகம் குளிர்ந்தது
[அழகு]

அநுபல்லவி

முழவுகொட்ட சின்னம் ஊத முருகன் வந்தனன் - திருப்
புகழ்முழங்கி அடியவர் பின்தொடர்ந்து வந்தனர்
[அழகு]

சரணங்கள்

தோரணமும் மாவிலையும் தொங்கவிட்டனர் - நறுந்
தூபமோடு தீபமேந்திச் சூழநின்றனர்
ஆரணமும் தமிழ்மறையும் ஓதுகின்றனர் - நல்லை
அப்பன் வெற்றி வேல்வீர வேல் என்றனர்
[அழகு]

காவடி எடுக்கும் அன்பர் கூட்டம் எங்கணும் - கர்ப்
பூரமேந்துகின்ற பெண்கள் கூட்டம் எங்கணும்
சேவலும் மயிலும் போற்றி என்று பாடுவார்
திருக்கை வேல் இருக்க அஞ்சோம் என்று கூவுவார்
[அழகு]

-சோ.ப

விழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:

திருமுருகன் கொம் ஞெற்

இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.




சங்கானை செங்கற்படை

மகாதேவப் பிள்ளையார்

உருவாகி மகாதேவத் திருவாகித் தோன்றும்
அருவாகி தத்துவ வித்தகனே செங்கற்படையானே!
கருவான உயிர்கள் யாவும் தம் தீமை வெப்பு அகல குளிர்ந்து
வரும் வான மழையென்ன அருள் மழை வழங்க
அருட் புனலாடி வரும் தீர்த்தனே தருவாய்
திடம் நீ தீர்த்தத் திருநாளில் தனில்
- தி.சிவதட்சணாமூர்த்தி (சங்கை சிவம்)

சிறப்புற பிரார்த்திப்போர்:
பொன்னுத்துரை இராசம்மா குடும்பத்தினர்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 ஒகஸ்ட் 2011 சனிக்கிழமை

# புலம்பெயர் மக்களின் அக்கறையால் எமது மக்களின் வாழ்வு மீட்சி பெறும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உரை

கிளிநொச்சி, ஒக.13

புலம்பெயர் சமூகத்தினர் காட்டுகின்ற அக்கறையிலே தான் எமது மக்களின் வாழ்வு மீட்சி பெறும் எனப் புலம்பெயர் சமூகத்தின் உதவிகளை மக்களுக்கு வழங்கும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூறியுள்ளார்.

கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் 72 பயனாளிகளுக்கு ஆஸ்திரேலிய கிறிஸ்தவ தமிழ் சிறுவர் ஒன்றியத்தால் வழங்கப்பட்ட 40 துவிச்சக்கர வண்டிகளையும் கனடா வாழ் புலம்பெயர் உறவான இராசலிங்கம் நிர்மலா என்பவர் அமரரான தனது தாயின் தாலிக் கொடியை விற்று வழங்கிய ஒரு லட்சத்து அறுபத்து நான்காயிரம் ரூபா பணத்தையும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட த.தே.கூ. அமைப்பாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் தனது உரையில் ஆர்ப்பாட்டமாக இங்கு பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படுகின்றபோதும் மக்களிடையே வறுமையும் வேலை இன்மையும் விரக்தியுமே விஞ்சி இருக்கிறது.

ஏதோ தேர்தல் காலத்துக்காக இங்கு வந்த அமைச்சர்களும் அரசியல் வாதிகளும் வாக்குகளுக்காக சலுகைகளை அளித்தார்களே தவிர உண்மையான எங்கள் மக்கள் மீதான அக்கறையினால் அவை நடைபெறவில்லை என்பதை தேர்தலுக்குப் பின்னரான இன்றைய காலம் ஒவ்வொருவருக்கும் உணர்த்தி நிற்கிறது.

இந்த நேரத்திலே எங்கள் மக்கள் மீதான பாரபட்சங்களை, அக்கறை இன்மைகளைப் புரிந்து கொண்டுள்ள புலம்பெயர் சமூகம் இன்றைய நிகழ்வைப் போல அதிகம் எமது மக்களுக்கு உதவ எல்லா வகைகளிலும் முன்வர வேண்டும்.

குறிப்பாக வீட்டளவிலான கைத்தொழில்கள், விவசாய உபகரணங்கள், சிறிய ஆடை உற்பத்தி விற்பனை நிலையங்கள், சுயவிவசாய முயற்சிகள் என்பவற்றுக்கு சிறிய அளவிலான முதலீடுகளையாவது எமது மக்கள் நம்பி வாக்களித்த பிரதேச சபைகள் ஊடாக வழங்க புலம்பெயர் சமூகம் மேலும் பங்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (க 426)

பொறுமையின் சின்னம்...



மிருகத்தின் மறுபக்கம்: வவுனியாவிலுள்ள கடையொன்றின் முன்னால் கடைச் சொந்தக்காரர் கொடுப்பதைப் பெறுவதற்காக இந்த மாடு காத்திருக்கின்றது. (421)

# மீன் பிடித்தவர்கள் விரட்டியடிப்பு

முல்லைத்தீவு, ஒக.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம் பிரதேச பிரிவில் உள்ள பனங்காமம் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மக்களை இராணுவத்தினர் விரட்டியடித்ததுடன் அவர்கள் பிடித்து வைத்திருந்த 150 கிலோ நிறையுள்ள மீனையும் பறித்துச் சென்றுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: மேற்படி பிரதேசத்தில் உள்ள பனங்காமம் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த 15 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அவர்களை மீன் பிடிக்கவிடாமல் தடுத்ததுடன் விரட்டி அடித்துள்ளனர்.

மேலும் அவர்கள் பிடித்து வைத்திருந்த 150 கிலோ நிறையுடைய மீனையும் எடுத்துச் செல்ல விடாமல் தடுத்ததுடன் பிடித்த மீன்களை இராணுவத்தினர் பறித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-ஏ)

# தொலைத் தொடர்பு சமிக்ஞைகள் சீரின்மையால் மக்கள் பாதிப்பு

மல்லாவி, ஒக.13

தொலைத் தொடர்பு சமிக்ஞைகள் சீரின்மையால் மல்லாவிப் பிரதேச மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதனால் இணைய வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழலில் வெளிநாட்டில் உள்ள தமது உறவுகளுடன் சீராக தம்மால் கதைக்க முடியாமல் உள்ளதாகவும் மக்கள் கவலையடைகின்றனர்.

தற்போது ஆலங்குளம் என்ற இடத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்று அமைத்துள்ளதுடன் இது மல்லாவியில் இருந்து தரையமைப்பில் பதிவான இடத்தில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமையை சீர் செய்வதற்கு மல்லாவி நகரின் மத்தியில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்றை அமைப்பதனூடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-எ)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய இயக்குநருமாகிய கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் Rtn.E.**சரவணபவன்** அவர்களின் அன்பு மைத்துனர்

**நடேசபிள்ளை ரவிதரன்**

இன் திடீர்மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா இளைப்பாற இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

**றோட்டறிக் கழகம்**
**யாழ்ப்பாணம்.** (சி/2652)(25,53)


# மன்னாரில் எரியாத விளக்குகள்

மன்னார், ஒக.13

மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள பல தெரு மின் விளக்குகள் இரவு நேரத்தில் ஒளிர்வதில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அண்மைக் காலமாகத் தொடர்ந்தும் இவ்வாறான பிரச்சினைகள் நிலவி வருகின்றமையால் இரவு நேரங்களில் மக்கள் வீதியில் செல்ல அச்சத்தில் உள்ளனர். குறிப்பாகப் பெண்கள் இரவு நேரத்தில் வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-601)


## உடனடி வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **முகாமைத்துவ உதவியாளர்** (Management Assistant):- **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா** (HNDA), **முகாமைத்துவப் பட்டதாரி அல்லது அதற்குச் சமனான தகைமை அல்லது முன் அனுபவம்**
- **ஆய்வு கூட உதவியாளர்** (Laboratory Assistant) **-தேசிய தொழில் நுட்ப சான்றிதழ்** (NCT) **க.பொ.த(உயர்தரம்) விஞ்ஞானப் பிரிவில் சித்தி**
- **களஞ்சிய பொறுப்பாளர் மற்றும் களஞ்சிய உதவியாளர்** (Store keeper and stores Assistant) **க.பொ.த.(உயர்தரம்) சித்தி**
- **காவலாளிகள்-இரவு மற்றும் பகல் நேர வேலைகள்** (Watchers)
- **அலுவலக உதவியாளர்** (Office Aid)
- **வாகனச் சாரதி** (Pickup Driver)

**தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 20.08.2011 ஆம் திகதிக்கு முன் எமக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.**

**தாபனப்பிரிவு, யூரோவில்,**
**45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**



## நெஞ்சகலா நினைவலைகள்

**31ஆம் நாள் நினைவஞ்சலி 78 ஆம் நாள் நினைவஞ்சலி**



திருமதி
குணரட்ணம் இராஜேஸ்வரி
மண்ணில் 18.07.1934
விண்ணில் 14.07.2011



அமரர்
குணரட்ணம் செல்வராசா (ரட்ணா)
அன்னை மடியில் 30.11.1971
ஆழியின் பிடியில் 29.05.2011

ஓடிப்போனதம்மா ஒரு மாதம்
ஒருகணமும் உங்களை மறந்ததில்லை
நாம் அம்மா என்று அழைக்க
இங்கு யாரும் இல்லை - அன்பு
தவழும் உங்கள் வதனம் - அதை
நினைக்கையில் துடிக்குதம்மா எங்கள்
மனம் உங்கள் நினைவை எமக்கு
சுமையாக்கி வந்த கடன் முடித்து
செல்லமகனுடன் வானுறையச் சென்ற
எங்கள் குடும்ப குலவிளக்கை
நினைத்திருக்கும்..................

"எங்கள் ஆருயிர் சகோதரனே!
எழுபத்தெட்டு நாள்கள் ஓடி மறைந்ததுவே
உம் நினைவுகள் எம்மை விட்டு
மறையவில்லை - அதற்குள் நம்
அன்னையையும் உம்முடன்
அழைத்துக் கொண்டீரே
எத்தனை பிறவி எடுத்தாலும் நீரே
எங்கள் சகோதரனாக பிறக்கவேண்டும்.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சகோதரர், மைத்துனிமார், பெறாமக்கள். (6782)(45-22)



## மரண அறிவித்தல்

### செபஸ்தியாம்பிள்ளை தியடோர்

(பவளத்துரை) முன்னாள் Taxi owner



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை தியடோர் (பவளத்துரை) 10.08.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை-அன்னபூரணம் (நல்லமுத்து) தம்பதியரின் மூத்த புதல்வனும், ஞானம்மாவின் (மனோன்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தேவராசா (சின்னன்), அலோசியஸ் (நக்கினி), மற்றும் திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கொலின் (ஜேர்மனி) அனித்தா, விஜிதா, நிரூஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெலன்(ஜேர்மனி), அன்ரனிதாஸ், அசன் ஆகியோரின் மாமனும், ஸ்ரெபி (ஜேர்மனி) அனோஜின், அனிஸ்ரன், அஸ்வின், நிஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆனையூர் அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (6775)(25,22)

தகவல்
நிரூஜன் (மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவராக மாறும் நிலையில் வன்னேரிக்குளம் கிராமம்

வன்னேரிக்குளக் கிராமம் இன்னும் சில ஆண்டுகளில் உவராக மாறிவிடும் என்ற செய்தி இந்தக் கிராம மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கிராமம் எதிர்கொள்ளவிருக்கும் இந்தப் பேராபத்து தொடர்பான செய்திகள் இப்போது தான் மெல்ல மெல்லக் கசியத் தொடங்கியுள்ளன.

வன்னேரிக்குளத்தின் கீழாக ஓடும் முடக்கன் ஆறு, மன்னியா குளமூடாக மருதோடை, வண்ணாந்திதி, மண்டைக் கல்லாறு மூலம் பூநகரிக் கடலில் கலக்கின்றது. ஆனைவிழுந்தான் ஆறு, உப்புவில் ஆறு ஆகிய இரு ஆறுகளும் மல்லிகையாற்றில் கலந்து மண்டைக்கல்லாற்றில் இணைந்து பூநகரிக் கடலில் சங்கமமாகின்றன.

வன்னேரிக் குளத்தில் ஆரம்பமாகும் அனைத்துச் சிற்றாறுகளும் மண்டைக்கல்லாற்றில் கலக்கின்றன. மருதோடை, வண்ணாந்திதி,மயில்பட்டாறு, ஆனைவிழுந்தான் ஆறு, உப்புவில் ஆறு, நரியாறு, நாச்சங்குடா ஆறு என்பன பூநகரிக் கடலில் கலக்கும் ஆறுகளாகும்.

வன்னேரிக்குளம் கிராமம் 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டபோதும் குஞ்சுக்குளம் தமிழர்களின் பாரம்பரிய கிராமமாகத் திகழ்கின்றது. அத்துடன் பல்லவராயன் கட்டு,மன்னியா குளம், நல்லூர் என்பனவும் இந்த வகையில் பாரம்பரியம் மிக்கனவாகத் திகழ்கின்றன.

இங்கு ஆட்சிபுரிந்த மன்னர்கள் மன்னாரிலிருந்து இந்தக் கிராமங்களுக்கூடாக யாழ்ப்பாணத்துக்கு நகர்ந்து சென்றதற்கான சான்றுகள் உள்ளன.

பழைய இலங்கை வரைபடத்தில் இந்தக்கிராமங்களின் பெயர்கள் உள்ளன. குஞ்சுக்குளம் அணைக்கட்டு இல்லாவிட்டால் வன்னேரிக்குளம் எப்போதோ உவராக மாறிவிடுமென்ற கருத்து இப்போதுதான் பலமாக ஒலிக்கத்தொடங்கியுள்ளது. குஞ்சுக்குளத்துடன் இணைந்த 100 ஏக்கருக்கு மேலான வயல் நிலங்கள் ஏற்கனவே உவருடன் கூடிய சதுப்பு நிலங்களாக மாறியுள்ளன. குஞ்சுக் குளத்தில் நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளமையால் வன்னேரிக்குளம் உவரடையாமல் பாதுகாக்கப்படுகின்றது.

மல்லிகையாற்றின் ஓரத்திலிருந்த பெரிய மருத மரங்கள் அழிவடைந்துள்ளன. நாச்சங்குடா முதலில் உவரடைந்தது. பின்னர் குஞ்சுக்குளமும் உவராக மாறியுள்ளது. மேலும் மண்டைக் கல்லாற்றில் கடல் மீன்கள் உள்ளதால் பூநகரிக் கடல் நீர் இதில் உட்புகுந்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே கடல்நீர் உட்புகுவது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும்.

மேலும் மருதோடை, நெடும்பிட்டி, நெத்தலிமோட்டை , தனிப்பனையடி, நாலாவெளி, மூன்று மோட்டைவெளி, வெத்திலை மோட்டை ஆகிய இடங்கள் ஏற்கனவே உவரடைந்துள்ளன. குஞ்சுக்குளம் கிராமத்தின் குடிதண்ணீர்க் கிணறுகள் ஏற்கனவே உவராக மாறியுள்ளன. மண்டைக் கல்லாற்றைத் தடுத்து அதன் வயல்பகுதிகளில் நன்னீர் நிலைகளை உருவாக்குவதன் மூலம் உவரடைதலைத் தடுக்கமுடியும்.

பூநகரியின் பெரும்பகுதி உவரடைந்துள்ள நிலையில் வன்னேரிக்குளம் இந்த ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் வன்னேரிக்குளம் கிராமம் உவரடைதலை எவருமே காப்பாற்ற முடியாது. மேலும் ஆனைவிழுந்தான் கிராமமும் உவராக மாறும் ஆபத்திலுள்ளது. முக்கொம்பனுக்கும் இதே நிலைதான்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட வன்னேரிக்குளம் கிராமம் உவரடைந்து அழிந்து போவதைத் தடுப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும். இந்த கிராமத்தைக் காப்பதற்கான முழுப் பொறுப்பும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறப்பினர்கள், பிரதேச சபையினர், அரச அதிகாரிகள் அனைவருக்கும் உண்டு.

இதற்கு முன்னோடித் திட்டமாக வன்னேரிக்குளத்தையும், தேவன் கட்டையும் இணைத்து நீர்த்தேக்கம் அமைக்கப்படுவது அவசியமாகும்.

இதன் மூலம் இந்தப் பிரதேசத்தில் உவரடையும் தன்மை குறைந்துவிடும். கிராமமும் காப்பாற்றப்பட்டுவிடும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல்சார் அறி

**கி.பிருதிவி**

ஞர்கள் உவரடைதலிலிருந்து வன்னேரிக்குளத்தைக் காப்பாற்றுவதற்காகத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்பதே இங்கு வாழும் மக்களின் வேண்டுகோளாகவுள்ளது.

*



கிளிநொச்சி அக்கராயன் ''வைகறை'' முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சிறார்கள் விநோத உடையில் கலந்துகொண்டனர். (410)

## ஒட்டுசுட்டானில் நடமாடும் சேவை

முல்லைத்தீவு, ஒக.13

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை ஒன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி சுபாதினி மதியழகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான், மாங்குளம் பிரிவின் விவாக பிறப்பு, இறப்புப் பதிவாளர் த.உ.சோமசேகரத்தால் 61 தம்பதிகளுக்கு இலவச விவாகப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், 1400 பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. காலம் கடந்த 59 பிறப்பு பதிவு விண்ணப்பங்களும் 31 பெயர்மாற்றல் விண்ணப்பங்களும் 99 காலங்கடந்த இறப்பு பதிவு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தண்டுவான் பிரதேச செயலர் பிரிவின் பதிவாளர் நா.செல்லையாவால் 14 தம்பதிகளுக்கு இலவச திருமணப் பதிவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் முல்லை மாவட்ட அரச அதிபர் அ.த.பத்திநாதன், வடமாகாணப் புதிய பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தி, முல்லைத்தீவு மாவட்டப் பதிவாளர் செல்வி குணாஜினி, உதவி மாவட்ட பதிவாளர் எஸ்.சண்முகநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவை சுவிஸ் நாட்டின் ''ஷா'' நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-440)

## கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 'மண்ணின் மகிமை' காணிப்பதிவுத் திட்டம்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 'மண்ணின் மகிமை' திட்டத்தில் காணிப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 4 ஆம் திகதி வியாழக் கிழமையில் இருந்து மேற்படி பிரதேச செயலகத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் அரச காணிகள், தனியார் காணிகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் கிராம அலுவலரிடம் இதற்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து இரண்டு மாதத்துக்குள் கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றவர்கள் w.w.w. binsaviya gov.lk என்ற இணையத்தள முகவரியை பார்வையிட்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-421)

## மாணவர்களின் திறமைகளைப் பாராட்டினால் அவர்கள் சாதனையாளர்களாக மாறுவர்

### கிளிநொச்சி அரச அதிபர்

அக்கராயன், ஒக.13

மாணவர்களின் திறமைகளைப் பாராட்டும் போதுதான் மாணவர்கள் எதிர்காலத்தில் சாதனையாளர்களாக உருவாக முடியும் எனக் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான சாதனையாளர் விருது விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நானும் இந்த மாவட்டத்திலேயே கல்வி கற்று உயர் பதவிக்கு வந்துள்ளேன். நாம் படித்த காலங்களில் மாணவர்களின் வெற்றிகளை விழாவாகக் கொண்டாடியதில்லை.

ஆனால், இன்றைய நாள்களில் மாணவர்களின் வெற்றிகளைப் பாராட்டுவதும் விழாக்கள் எடுப்பதும் பெரும் மகிழ்வைத் தருகிறது.

மாணவர்களின் திறமைகளையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். நாம் ஊக்குவிக்கும் போதுதான் மாணவர்கள் பெரும் சாதனைகளைத் தொடர்ந்து படைப்பார்கள்.

மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று முடிவெடுத்து செயற்படுத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா பாராட்டப்பட வேண்டியவர்.

வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் நிலையில் ஒரு நல்ல நிகழ்வை நடத்தி முடித்திருக்கிறார் என்பது மகிழ்வுக்குரிய விடயம் எனவும் தெரிவித்தார். (எ-410)

## மல்லாவிப் பகுதியில் அதிகரிக்கும் கசிப்பு உற்பத்தியால் மக்கள் பாதிப்பு

மல்லாவி, ஒக.13

மல்லாவி கற்குவாறிப் பகுதியில் கசிப்புப் பாவனை அதிகரித்துக் காணப்படுவதால் அந்தப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் கசிப்பு அருந்துவதற்கு வெளியிடங்களில் இருந்து நாளுக்கு நாள் புதியவர்கள் வருவதனால் தமக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது கிராமத்துக்கு வந்து கசிப்பை வாங்கிச் செல்பவர்கள் இந்தக் கிராமத்திலேயே ஆள்நடமாட்டம் அற்ற காணிகளில் இருந்து கசிப்பினை அருந்திவிட்டு வீதிகளில் செல்வோரை தகாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக தீர்வு கிடைக்க பொலிஸ் மற்றும் படையினரின் ஒத்துழைப்பை மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

பலதடவை இந்தப் பகுதியை பொலிஸ் சோதனைக்குட்படுத்திய போதும் கசிப்பு உற்பத்தியாளர்கள் தப்பி விடுவதும் வழக்கமான விடயம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

## அலங்காரத் திருவிழா

முழங்காவில் கிருஷ்ணா நகர் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை சாவகச்சேரி அருளுரை வள்ளல் அ.வாசுதேவா 'கம்பராமாயணம்' என்ற பொருளில் தெய்வீகப் பேருரை யாற்றவுள்ளார். எதிர்வரும் 22 ஆம் திகதி கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு இரவு 7 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும். (எ)

## வாடிக்கையாளருக்கு உதவுவது எப்படி? கூட்டுறவுச் சங்கங்கள் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக.13

கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு தொடர்பாக வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன் கிழமை கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போது,போட்டிப் பொருளாதார முறை நிலவும் இன்றைய சூழலில் பொருள்களை மலிவு விலையில் கொள்வனவு செய்து சங்கங்களினூடாக மக்களுக்குத் தரமான பொருள்களைக் குறைந்த விலையில் வழங்குவதனூடாகக் கூட்டுறவாளர்களின் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்தி உச்சப் பயன்பாடுடைய நிறுவனமாக சங்கங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று அவர் அறிவுறுத்தினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
புதிய வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். வீடு தேடிவரும் சிலர், நல்ல செய்திகளைக் கொண்டு வருவர். வியாபாரிகள் இருப்புப் பொருள்கள் விற்பனையால் கூடுதல் ஆதாயம் பெறலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவர்.

**இடபம்:**
பெரிய மனிதர்களின் பாராட்டுக்களை, ஆசிகளைப் பெறலாம். தொழில் ரீதியாகவோ, உறவினர்களைப் பார்க்கவோ வெளியூர் பயணம் செல்லலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து, பெருமை சேர்ப்பர். அரசு தொடர்பானக் காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**மிதுனம்:**
அயலாரின் தொந்தரவுகளுக்கு ஆள்படலாம். வாழ்க்கைத் துணைவர் வழியில் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். நெருங்கிய நண்பர் ஒருவர் பண உதவி கேட்டு வரலாம். தொழிலில் அதிக கவனம் அவசியம். வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். தடைகள் நேரும்.

**கடகம்:**
உற்சாகம், தெம்புடன் செயற்படும் நாள். பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான, குடும்ப ரீதியான விடயங்களில் தெளிவாகவும், விரைவாகவும் முடிவு எடுப்பீர்கள். உறவினர்கள் சிலர் உங்களைப் பாராட்டிப் பேசலாம். சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும்

**சிங்கம்:**
எதிலும் யோசித்து முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவீர்கள். சிலர் கேட்ட உதவிகளை, மற்றவர்களிடம் கடன் வாங்கிக் கொடுத்தாவது நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமைப்படுவீர்கள்.

**கன்னி:**
நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரை சந்திக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச்செலவு செய்யலாம். சில நாள்களுக்கு முன், பாதியில் விட்ட சில பணிகளை முடுக்கி விட முற்படுவீர்கள். குல தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மாமன், மைத்துனர்களின் வீடுகளுக்குச் செல்லலாம்.

**துலாம்:**
ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பணத்தட்டுப்பாடு வராமல் இருக்க, செலவுகளில் சிக்கனம் அவசியம். பெரிய மனிதர்கள் சிலர், உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். கடும் சிரமத்தைக் கொடுக்குமோ என நினைத்த பிரச்சினை ஒன்று கடைசி நேரத்தில் சுலபமாக முடியலாம். சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.

**விருச்சிகம்:**
எந்த வேலையையும் எடுத்தோம், முடித்தோம் என செய்து முடிப்பீர்கள். சிலரின் செயல்பாடுகள், உங்களின் உத்வேகத்தைத் தூண்டும் வகையில் அமையலாம். மற்றவர்களுக்குக் கிடைக்காத சில சலுகைகள் உங்களுக்கு கிடைக்கலாம். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்பி வரலாம். மனதில் நிம்மதி குடிகொள்ளும் நாள்.

**தனுசு:**
விரயங்களைத் தவிர்க்க, விழிப்புடன் செயற்பட வேண்டும். முக்கிய வேலைகளை, மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நல்லது. உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.

**மகரம்:**
சிரமங்கள் இருந்தாலும், சில வேலைகளை எப்படியாவது முடிப்பீர்கள். பெண்கள், சகோதரிகள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். புறம் பேசும் நண்பர்கள் மீது கோபம் கொள்ளலாம். தொழில் ரீதியாக உங்களின் திறமை வெளிப்படும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை தாணப்படும்.

**கும்பம்:**
சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். மனதை வாட்டிய கவலைகள் மாறி, தெம்பு, தன்னம்பிக்கை பெறுவீர்கள். மற்றவர்களுக்காக பிணை கொடுக்க வேண்டாம். குடும்பத்தினருக்குத் தெரியாமல் சில ரகசியங்களை மறைக்க முற்படுவீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். மருத்துப் பொருள்கள்

**மீனம்:**
பெரிய மனிதர்களின் உதவியால் பெருமை அடைவீர்கள். பிள்ளைகள் வழியில், சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் செலவுகள் அதிகரிக்கும். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம். கடிதங்கள் மூலம் முக்கியமானத் தகவல்கள் வரலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்

# உள்ளூராட்சி... கூட்டமை... ஓர் எச்ச...

ஜூலை மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. கூட்டமைப்பின் வெற்றிக்குக் காரணம் என்ன?

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள் என்பதாலா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தமிழ் மக்கள் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ள காரணத்தினாலா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவார்கள் என்ற காரணத்தினாலா?

கூட்டமைப்பினருக்குத் தமிழ் மக்கள் இந்த வெற்றியைக் கொடுத்தார்கள்?

இவை எதுவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்குக் காரணங்களல்ல.

சொல்லப்போனால் தமிழ் மக்கள் ''வேண்டா வெறுப்பாகத்தான்'' இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தும்புத்தடியைக் கொண்டு வந்து தேர்தலில் நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப்பார்கள்'' என மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி ஒருமுறை கூறியது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆரம்பத் தேர்தல் செயற்பாடுகள் அமைந்திருந்தன. உண்மையில் அப்படி அவர்கள் நம்பி இருந்தால் அதைவிட முட்டாள்தனம் வேறொன்றுமில்லை. சொல்லப்போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் விசனமும் கோபமும் கொண்டுள்ளனர் என்பதே உண்மை.

அப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தாலும் அதற்கே தமது வாக்குகளை அளித்துள்ளனர் என்றால் அதற்குக் காரணம் என்ன?

### அரசு மீதான வெறுப்பு

ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசு மீதான அளவற்ற வெறுப்புக் காரணமாகவே தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள். சர்வாதிகாரப் போக்கிலும் தமிழர் மீதான இனக் குரோதத்துடனும் செயற்பட்டு வரும் அரசு மீதான தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காகவே தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது புலிகள் இருக்கும்வரை தமிழ் மக்கள் என்ன காரணத்துக்காகப் புலிகளை ஆதரித்தார்களோ அதே காரணத்துக்காகவே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் மக்கள் ஆதரிக்கின்றனர் என்பதே உண்மை. வேறு மாற்றுத் தெரிவு இல்லாத காரணத்தால் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கின்றனர்.

தமிழ் மக்களுக்குச் சரியான ஒரு தலைமைத்துவம் உருவாகும் பட்சத்தில் (இதய சுத்தியுடன் செயற்படும்) கூட்டமைப்பை தமிழ் மக்கள் வீட்டுக்கு அனுப்பவும் தயங்கமாட்டார்கள் என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மனதில் கொள்ள வேண்டும்.

கடைசியாக நடைபெற்ற தேர்தல்களை விட இந்த முறை வாக்களிப்பு வீதம் கூடுதலாகக் காணப் பட்டது. ஏற்கனவே நடைபெற்ற தேர்தல்களில்

> **அரசு தனது வளங்கள் முழுவதையும் பாவித்து இந்தத் தேர்தலில் தோல்வியுற்றமைக்குக் காரணம் மக்களின் உறுதியான நிலைப்பாடுதான். மக்கள் தமது நிலைப் பாட்டில் உறுதியாக நின்ற காரணத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. அந்த உறுதியைக் கூட்ட மைப்பும் கைக்கொள்ள வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்.**



வாக்களிக் காமல் ஏனோ தானோ என்று இருந்தது பிழை என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர் [illegible]று இதை எடுத்துக் கொள்ளமுடியும்.

### அர்ப்பணிப்புடன் செயற்படுமா?

இதன் காரணமாகவே இந்தமுறை தேர்தலில் மக்கள் தாமாகவே முன் வந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளை அளித்துள்ளனர். இது வரவேற்கப்பட வேண்டியது.

இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்த்த பின்னராவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும். வாகன அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்வதற்கும் மதுபானசாலை நடத்தவதற்கும் கோத்தபாயவின் முன்னால் கூழைக் கும்பிடு போட்டு எனது பிள்ளைக்குப் புலமைப்பரிசில் தாருங்கள் என்று பல்லிளிப்பதற்கும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மக்கள் வாக்குகளைப் பயன்படுத்தவில்லை' என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனிவரும் காலங்களில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையை அரசு குறைத்தவுடன் துள்ளிக் குதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்பட்ட போதே அடுத்த கட்டமாகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரசு குறைக்கும் என்பது அதற்குத் தெரியாதா? அதைத் தடுக்க அன்றே ஏன் நட்வடிக்கை எடுக்கவில்லை அவர்கள்? வாக்காளர் பதிவுகள் மீளாய்வு செய்யப்பட்ட போது எந்தவொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராவது அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலென்ன அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவாக இருந்தாலென்ன, இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தாமல் வாக்காளர் இடாப்புக்களை மீளாய்வு செய்யக்கூடாது என அரசுக்கு அழுத்தம் கொடுத்தார்களா? அல்லது மக்களை வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்களா?

அரச சார்பற்ற நிறுவனங்கள் சில, மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்சித் தேர்தல் முடிவுகள்

# மைப்புக்கு

# ச்சரிக்கை

**தமிழ் மக்களுக்குச் சரியான ஒரு தலைமைத்துவம் உருவாகும் பட்சத்தில் (இதய சுத்தியுடன் செயற்படும்) கூட்டமைப்பை தமிழ் மக்கள் வீட்டுக்கு அனுப்பவும் தயங்கமாட்டார்கள் என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மனதில் கொள்ளவேண்டும்.**



வாக்காளர் இடாப்புப் பதிவை மேற்கொள்ளுமாறு ...த்திரிகைகளில் விளம்பரம் செய்தன. அதைக் கூட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் செய்ய வில்லை. பின்னர் இதுபற்றிக் கலந்துரையாட வாருங்கள் என்று ஒப்புக்குச் சப்பாணியாக மற்றக் ...ட்சிகளுக்குச் சும்மா ஓர் அழைப்பு விடுக்கிறார் அமைச்சர் டக்ளஸ்.

### புலிகளைத் தமிழ் மக்கள் ஏன் ஏற்றுக் கொண்டனர்?

புலிகள் செய்த அனைத்தையும் பொறுத்துக் கொண்டு புலிகளைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்ட தற்குக் காரணம் புலிகள் மூலமாவது தமிழ் மக்க ளுக்கு ஏதாவது விமோசனம் கிடைக்கும் என்ற ஒரே யொரு காரணத்துக்காகத்தான்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இன்று தமிழ் மக்கள் ஆதரிப்பதற்கும் அதுவே காரணம். இதன் மூலம் எங்களை நிம்மதியாக வாழவிட்டால் போதும் என்ற செய்தியை அரசுக்குச் சொல்லவே மக்கள் முயற்சிக்கிறார்கள்.

அரசு தனது வளங்கள் முழுவதையும் பாவித்து இந்தத் தேர்தலில் தோல்வியுற்ற மைக்குக் காரணம் மக்களின் உறுதியான நிலைப்பாடுதான். மக்கள் தமது நிலைப் பாட்டில் உறுதியாக நின்ற காரணத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. அந்த உறுதியைக் கூட்ட மைப்பும் கைக்கொள்ள வேண்டும் என் பதே மக்களின் விருப்பம்.

இந்தத் தேர்தலில் நாங்கள் அமோக வெற்றியீட்டியுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மார்தட்டுவ தற்கு எதுவுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனியாவது தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ளாவிட்டால் மக்கள் சக்தி என்ற மாபெரும் சக்தியின்

**நா. பரமேஸ்வரன்**

முன்னால் தோற்க வேண்டிய நிலை ஏற்படும். நடைபெற்று முடிந்த உள்ளூ ராட்சித் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் எச்சரிக்கை அல்லது எடுத்துக்காட்டு என்பதைத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினர் மறந்து விடலா காது. ஏனெனில் இந்தத் தேர்தல் வெற்றி யாருமே எதிர்பார்க்காத வெற்றி. ✸



## 'பகவான்' என்று சொல்லத் தகுதியுடையவர்



பொதுவாக எல்லோரும் பெயருக்கு முன்னால் தலைப்பெயர் போட்டுக்கொள் வோம். கொஞ்சம் பெரிய மனிதர்கள் பட் டம், பதவிகள் போட்டுக்கொள்வார்கள். சில சாமியார்கள் பெயருக்கு முன்னால் 'பக வான்' என்று போட்டுக் கொள்ள மிகவும் ஆசைப்படுவார்கள். இது எல்லோருக்கும் பொதுவான இயல்பு.

பகவான் இராமகிருஷ்ணர், பகவான் ரமணர் என்று சொன்னபோது அந்தக் காலத் தில் அதிகம் பிரச்சினை வரவில்லை. அவர்களை பகவான் என்றது நியாயம். ஆனால் இப்போதே ஊருக்கு நாலைந்து பகவான்கள் தோன்றி எல்லோரையும் கஸ்ரப்படுத்துகிறார்கள். அதுதான் சங்கடமாக இருக்கிறது.

பகவான் என்று அழைக்கப்படுகிற தகுதி ஒருவருக்கு உண்டா, இல்லையா என்பதைவிட, அவரை அப்படி அறிவிக்கும் தகுதி யாருக்கு உண்டு என்று முதலில் பார்க்கவேண்டும். பன்னிரண்டு வயதுப் பாலகனாய் இருந்த தசரதகுமாரனை, இராமச்சந்திர மூர்த்தியை எல்லோரும் சின்னப் பையனாய் நினைத்து மகிழ்ந்த போது அவனை பகவான் என்று அறிவித்தவர் விஸ்வாமித்திர மகரிஷி. சுலபத்தில் யாரையுமே மேலானவராக ஏற்காத விஸ்வாமித் திரர், ''தசரதா, இந்த இராமனை என்னோடு அனுப்பு. அவனைச் சிறுபிள்ளை என்று எண்ணாதே. அவன் பகவான்'' என்று கூறுவதாக வால்மீகி இராமாயணத்தில் வருகிறது.

பிறந்த குழந்தையாகக் கிருஷ்ணன் நந்தகோபன் மடியில் இருக்கிற போது பெயர் வைக்கும் சந்தர்ப்பத்தில், கர்சாச்சார்யார். ''நந்தகோபா, இவன் மேன்மைகளை இப்போது என்னை அன்றிவேறுயாரும் அறியமாட்டார்கள். இவன் சாட்சாத் பகவான்'' என்று அறிவிப்பதாக பாகவகத்தில் ஓர் இடம்வரும்.

இராமகிருஷ்ணர் வரலாறு கொஞ்சம் வேறுமாதிரி, அந்தக் காலத்தில் இருந்த பண்டிதர்கள், யோகிகள், மகான்கள் எல்லோரும் கூடியிருந்த சபையில் பைரவி பிராம்மணி இராமகிருஷ்ணர் பக வானே என்று சாதித்து, வாதித்து, நிரூபணம் செய்தனர். இந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது இதனால் எள்ளளவும் பாதிக்காதவராய் ஒரு குழந்தை மாதிரி சாட்சியாக இந்த விவாதத்தை வேடிக்கை பார்த் தார் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

பகவான் என்று அழைக்கப்படும் தகுதியும் முக்கியம். அதை அறிவிக்கின்றவன் தகுதியும் அதைவிட முக்கியம். ஒருவர் பலவான் என்பதற்காகப் பகவான் என்று அறிவித்துவிடமுடியாது. கிருஷ்ணர் கோவர்த்தன மலையைத் தூக்கினார். அதனால் பகவான் எனப்பட் டார் என்றால் இராவணன் கூட கயிலை மலையையே தூக்கியுள்ளார் என்பதால் அவரையும் பகவான் இராவணன் என்று சொல்லிவிட லாமே. பலவான் எல்லாம் பகவான் ஆகமுடியாது. ஆனால் பகவான் வேண்டுமானால் பலவானாக இருக்கமுடியும்.

ஸ்ரீ கிருஷ்ணர் சைதன்யர் வாழ்விலும் இந்த பகவான் பிரச்சினை வந்தது உண்டு. அது ஒரு தலையான நிகழ்ச்சி. போகிற பக்க மெல் லாம் பக்தியை, பக்தி வெள்ளத்தை உண்டாக்கியவர் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு. பூரி ஜகந்நாதர் திருக்கோயிலுக்குப் போயிருந்த போது ஒரு நிகழ்ச்சி நடந்தது. கோயில் தேர்த் திருவிழாவுக்கு முன்பு வழி பாட்டுக்கு உள்ளே நுழைந்த சைதன்யர் வருந்தினர். கோயில் முழு வதும் அழுக்காக இருந்தது. யாருக்கும் அறிவுரை சொல்லவில்லை. யாரையும் கோபித்துக் கொள்ளவில்லை. யாரையும் குறை சொல்லவும் இல்லை. ஒரு விளக்குத்துடைப்பதை கையில் எடுத்துக் கொண்டு பரபர என்று சுத்தம் செய்ய ஆரம்பித்தார். அவ்வளவுதான் ஊரே அவரோடு சேர்ந்து கொண்டது. ஒருவர் தரையைத் தேய்க்க மற்றவர் தண்ணீரை ஊற்ற ஆள் ஆளுக்குத் தொண்டு செய்யத் தொடங்கினார்கள். பஜனையும் பாட்டுமாய் பரிசுத்தப் பணி நடக்க லாயிற்று.

தண்ணீரைத் தரையிலே ஊற்ற வந்த ஒருவருக்குத் திடீர் என்று வித்தியாசமாக ஓர் எண்ணம் தோன்றியது. ஒரு வாளி தண்ணீரைக் கொணர்ந்து சைதன்ய மகாபிரபு பாதங்களில் விட்டு 'பகவானே' என்று வணங்கினான். பிரபு மிகவும் வருந்தினார். இறைவன் சந்நிதியில் மனிதரை வணங்குவது அபவாதம் என்று கருதினார். ஸ்ரீ வராக புராணத்தில் வைணவ ஆலயங்களில் செய்யக்கூடாத முப்பத்து இரண்டு அபவாதங்களில் இது ஒன்று என்று கூறப்பட்டுள் ளது. எனவே காலில் விழுவது தவறு என்று கண் டித்தார்.

பக்தனோ விடாப்பிடியாக ஜகந்நாதரைக் காட்டியபடியே, ''அங்கே இருக்கும் பெருமாளுக்கும் இங்கே இருக்கும் பெருமாளுக் கும் அப்படி ஒன்றும் வித்தியாசம் இல்லை'' என்றான். அவ்வளவுதான் ஸ்ரீ சைதன்யர் தற்கொலை செய்துகொள்ள ஓடினார் என்கிறது அவரது சரித்திரம். தற் கொலைக்காக சமுத்திரம் நோக்கி ஓடிய சைதன்ய மகா பிரவுவைச் சமாதானம் செய்வது பெரும் பாடாகி விட்டது என்கிறது அவர் வரலாறு.

இன்று தம்மை பகவானாய் பிரகடனப்படுத்தி விளம்பரப் படுத்தும் விபரீத சாமியார்கள் சைதன்யர் வரலாறு படிக்கவேண்டும். இந்த போலிச் சாமியார்களை சிறையில் வைத்தாலும் அசட்டு ஜனங் களுக்கு அறிவு வருமா என்பது சந்தேகம்தான்.

திருக்குறளில் 'ஆதிபகவன்'என்ற சொல்லுக்கு உரை எழுதிய பரிமேலழகர் ஆறு உன்னத குணங்களைச் சொல்லி அவை உடையவனே பகவான் என்கிறார். அது நல்ல அளவு கோல் என்றே தோன்றுகிறது.

**சுகி. சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 ஒகஸ்ட் 2011 சனிக்கிழமை

# ஃபிளமிங்கோ



ஃபிளமிங்கோ தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் வாழும் ஒரு பெரிய வண்ணமயமான பறவை இனங்களில் ஒன்றாகும். இவை தெற்கு ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியா வெப்பமான பகுதிகளில் காணப்படுவதோடு வளைந்த அலகும் இளஞ்சிவப்பு நிற உடலும் கொண்ட கரைப்பறவை வகையைச் சேர்ந்தவை. உப்புத்தன்மை அதிகமுள்ள ஏரிகளில் கடும் வெப்பத்தையும் தாங்கி வாழும் தன்மை கொண்டதோடு தமிழகத்திலுள்ள கோடியக்கரை வன உயிரினங்கள், பறவைகளின் புகலிடத்துக்கு வரும் எண்ணற்ற பறவைகளில் இதுவும் ஒன்று. இவை மிகவும் அழகாகக் காணப் படும். இவற்றில் பல்வேறுபட்ட இனங்கள் உள்ளதும் குறிப்பி டத்தக்கது.

குஜராத்தின் கச்சு பகுதியில் தான் இவை சேற்று மண்ணைக் குவித்து கூடுகட்டி, முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் போது ஆண், பெண் ஃபிள மிங்கோ இரண்டுமே ஒன்று மாறி ஒன்று அடைகாக்கும்.

மேலும் பல்லாயிரம் ஃபிளமிங்கோ ஒன்றாகக் கூடி இருப்பது இவற்றின் தனித் தன்மையுடன் இதுவே இவற்றுக்கு பாதுகாப்பும் அளிக்கின்றது. நீண்ட கால்க ளையும் நீண்ட கழுத்தையும் நீட்டியபடி ஃபிளமிங்கோ கூட்டம் கூட்டமாக பறந்து செல்வது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

கால்களால் சேற்றுநீரைக் கிளறியவுடன், வளைந்த அலகைக் கொண்டு நீரை அள்ளும் இந்த ஃபிளமிங்கோ அதன் அலகினுள் இருக்கும் வடிகட்டும் அமைப்பைக் கொண்டு தன் இரையை மட்டும் எடுத்துக்கொள்கிறது. இவை தமது உணவை எடுக்கும் போது உணவில் உயிரிகள், முட்டைப் புழுக்கள், சிறு மீன்கள் ஆகியவை அடங்கும். அதுமட்டுமன்றி இவை விரும்பி உண்ணும் கூனிறால் போன்ற ஒருவகை கிரத்தேசிய உயிரினம்தான் இவற்றின் இளஞ்சிவப்பு நிறத்துக்கு காரணமாகின்றது. பறவைகள் காப்பகத்தில் வைத்து பராமறிக்கப்படும் இந்தப் ஃபிளமிங்கோ இளஞ்சிவப்பு நிறமற்றுக் காட்சியளிப்பது நாம் அறிந்ததே.

மேலும் மகிழ்வூட்டும் இந்தப் பறவைகளின் வருகை வருடம் தோறும் குறைந்து கொண்டிருப்பது நமக்கு வேதனையளிப்பதாகவே இருக்கின்றது.

-நாதன்.
பருத்தித்துறை.

## விடுகதைகள்

* எனக்கு ஐந்து விரல்கள் உண்டு. இரத்தமும் இல்லை சதையும் இல்லை. நான் யார்?
* வெளிச்சத்தில் தெரிவேன் இருட்டில் மறைவேன் நான் யார்?
* ஆயிரம் ஆயிரம் முடிச்சுக்களும் என்னிடம் உண்டு. ஆயிரம் ஆயிரம் ஓட்டைகளும் என்னிடம் உண்டு நான் யார்?
* சாண் உயர பூனை ..... எல்லாம் சுமக்கும் நான் யார்?

**விடைகள்**

1.கையுறை, 2.நிழல்,
3.வலை, 4.அடுப்பு.

ர.நிவேதினி,
பருத்தி.

## சூறாவளி



தென்றலாய் வந்த நீ
புயலாய் மாறிய
காரணம் என்ன?
காற்றாய் வந்து நாம்
சுவாசிக்க உதவி செய்த நீ
இன்று எமது மூச்சை
பறித்து உயிரை காவிச் சென்றாயே

கவிதையாய் வந்து என்னை
தழுவுவாய் என்று பார்த்தேன்
சூறாவளியாய் வந்து நம்
வீடுகளை தூக்கி வீசியது ஏனே சொல்வாய்

உயிர்களின் பெறுமதியை அறிந்தே நீ
எமக்கு சுவாசிக்க கற்றுத் தந்தாய்
உயிர்களின் பெறுமதியை நீயே மறந்து
உயிரை காவிச் செல்கிறாய் ஏன்

காற்றே நீ புயலாக மாறுவது ஏன்
தென்றலாகவே இருந்து விடு
அனைவரது வீட்டிலும் சந்தோஷம் பிறக்கும்
மகிழ்வாக வாழ்வார்கள் தென்றலே...


ச.அருள்வாணி,
இணுவில்.

## வாழ்க்கைக்குச் சில...

* அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
* போட்டியிடுதல் பெருமை பொறாமைப்படுதல் சிறுமை என்பதை உணர்தல் வேண்டும்
* பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட உதவி செய்யும் கரங்கள் உயர்ந்தவை
* வாழ்வதற்காக வாழ்வதே வாழ்க்கை. அதை வீணடிக்கும் மனிதர்கள் கோழைகள்.
* நல்ல நூல்கள் படிப்பது கடந்த நூற்றாண்டின் தலைசிறந்த மனிதருடன் உரையாடுவது போன்றது.
* இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்த முகமே.
* ஒரு வினாடி பொறுமை கொள்வது பத்து வருடம் சுகம் தரும்.
* வெளி வரும் வழியினைத் தெரிந்துகொண்டு உள்ளே நுழை.

இராஜ் தனபால்

## தேவ மைந்தன்



அது ஓர் குதிரை லயம். அங்கே நாலைந்து அழகிய குதிரைகளுடன் ஒரு கழுதைக் குட்டியும் இருந்தன. குதிரைகளை நல்ல முறையில் பராமரித்து வந்த எஜமான் கழுதைக் குட்டியைக் கவனிப்பதே இல்லை. அதற்கு உணவழிப்பதும் இல்லை. குதிரைகள் தின்று கழித்துப் போடுவதைத் தின்றே கழுதைக் குட்டி பசியாற்றிக்கொள்ளும்.

குதிரைகள் மினுமினுப்பான தேகத்துடன், அழகிய பிடரி மயிருடன் மிக நேர்த்தியாகவே இருந்தன. அவை கழுதைக் குட்டியைப் பரிகாசம் செய்து கேவலமாகப் பேசும். சமயத்தில் உதைத்துத் தள்ளியும் கடித்தும் துன்புறுத்தி வந்தன. அதனால் கழுதைக் குட்டிக்குச் சொல்ல முடியாத மனத் துயரம். மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொள்வதைத் தவிர, அதனால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

''கடவுளே, அடுத்த பிறவியிலாவது என்னைக் குதிரையாகப் படைத்துவிடு. கழுதைக் குட்டியாகப் படைத்துவிடாதே...'' என்று மனதுக்குள் குமுறிக்கொண்டது. பெரிய நீளமான காதுகளும் சூம்பிய கால்களும் அசிங்கமான வாலும் இதற்கு இருந்தன. கழுதைக் குட்டிக்கே தன்மீது வெறுப்பும் கோபமுமாக இருந்தது. அப்போது எஜமானுடன் வேறு ஒருவரும் வருவதைக் கண்டது. வந்தவர், ''ஐயா! என் பெயர் ஜோசப். நானும் என் மனைவி மரியாவும் பெத்தலஹேமுக்குச் செல்கிறோம். மனைவி நிறைமாதக் கர்ப்பணியாக இருக்கிறாள். இந்த இருள் சூழ்ந்த வேளையில், அவளால் ஒரு அடிகூட நடக்க முடியாமல் களைத்துப் போய்விட்டாள். உங்களால் ஒரு குதிரையைக் கொடுத்து உதவ முடியுமா? உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்...'' என்று கெஞ்சாத குறையாக அவரிடம் கேட்டார்.

எஜமானன் தீவிர சிந்தனையுடன் தாடியைத் தடவிக்கொண்டே, தனது அழகிய மினுமினுப்பான கொழுத்த குதிரைகளைப் பார்வையிட்டான். 'இந்தக் குதிரைகள் மிகவும் விலை உயர்ந்தவை. நான் ஒருபோதும் இவற்றில் ஒன்றையேனும் இழக்கத் தயாரில்லை. இந்தக் கழுதைக் குட்டியால் எனக்கு எந்தவிதப் பயனும் இல்லை. தண்டமாகத் தின்றுவிட்டு, லயத்தை அசுத்தம் செய்து கொண்டிருக்கிறது. இந்த வழிப்போக்கனிடம் இதைத் தள்ளிவிடலாம்' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான். அவன் ஜோசப்பைப் பார்த்து, ''ஐயா! உங்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. மேலும், குதிரைகள் மிகவும் சண்டியானவை. வேகமாக ஓடுபவை. அவை கர்ப்பணியான உங்கள் மனைவியைப் பாதுகாப்பாகச் சுமந்து செல்லாது.

இந்த நோஞ்சான் கழுதைக்குட்டிதான் அதற்கு ஏற்றது. மிகவும் மெதுவாக, சோம்பேறித்தனமாக நடந்து செல்லும். அதை வேண்டுமானால் ஓட்டிப் போங்கள்...'' என்றான். [தொடரும்]

## வண்ணக் கோலங்கள்....



[illegible] அறிஞர் ஐயன்னா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் [illegible] சிறார்கள் உடற்பயிற்சி நிகழ்வில் ஈடுபட்டுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மறை மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு மறைக்கல்வித் தேர்வில் சில்லாலை றோ.க.த.க. பாடசாலையின் தரம் 10 இல் அல்பிறட் மெல்சியா முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தையும் டன்ஸ்ரன் ஜெயக்குமார் இரண்டாமிடத்தையும் பெற்றனர். அதிபர் யோ.எ.பங்கிராஸ் மற்றும் ஆசிரியர்களுடன் கௌரவிப்பைப் பெற்ற மாணவர்கள். (ம)

# எழுத்தாளர்கள் வாசகர்களாகும் போது சிறந்த படைப்புக்களை உருவாக்க முடியும்

## இலக்கியக் குவியப் பொருளாளர்

யாழ்ப்பாணம், ஓக.13

ஒவ்வொரு எழுத்தாளரும் முதலில் நல்ல வாசகர்களாகத் திகழ வேண்டும். இலக்கியச் சுவையுடைய நூல்களைக் கற்க வேண்டும். கற்பனை, திறமை எழுத்தின் ஆழம் என்பவற்றை ஒவ்வொரு எழுத்தாளனும் தன்னகத்தே கொண்டிருத்தல் அவசியம். இதனூடாகச் சிறந்த படைப்புகளை உருவாக்க முடியும்.

யாழ். இலக்கியக் குவியத்தின் பொருளாளர் எஸ்.சைலஜன் இவ்வாறு தெரிவித்தார். றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் 'இலக்கியக் குவியம்' என்னும் அமைப்பு நாவலர் வீதியில் அமைந்துள்ள உதயன் விருந்தினர் விடுதியில் வைத்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பார்கள். சமகாலத்தை உள்ளவாறே எழுத்துகள் மூலம் பிரசுரிக்க வேண்டியது ஒவ்வொரு எழுத்தாளரதும் கடமையாகும்.

எழுத்தாளன் தனது சுயவிருப்பத்தையும் சமூகத்தின் தேவைகளையும் எழுத்துமூலம் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

மூத்த எழுத்தாளர்கள் இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டிகளாகவும் அவர்களுடைய வாசகர்களாகவும் இருந்தால் இளம் எழுத்தாளர்கள் வளர்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தரமான எழுத்தாளர்களின் படைப்புக்களை இனங்கண்டு சந்தைப்படுத்துவதற்கும் முன்வர வேண்டும். சிறந்த எழுத்தாளர்களை எமது சமூகம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இலக்கியங்களில் உள்ள தொய்வு நிலைகளை இளம் எழுத்தாளர்கள் நிரப்பிக் கொள்ள வேண்டும்.

எழுத்தாளர்களிடம் உள்ள இடைவெளிகளை எழுத்துக்களில் உள்ள தளர்வு நிலைகளை இளம் எழுத்தாளர்கள் கருத்தில் கொண்டு தமிழை வளர்த்தெடுக்க வேண்டும்.- என்றார். (ம-311)

# விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த வங்கிகள் முன்னின்று செயற்பட வேண்டும்

## கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர்

விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகளை உயர்த்த வங்கிகள் முன்னுரிமை கொடுத்து உதவிகள் செய்ய வேண்டும். இதன்மூலம் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைகள் உயர்த்தப்படுவதுடன் விவசாயத்துறையும் முன்னேற்றம் அடையும்.

இவ்வாறு தெரிவித்தார் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் வ.நடராசா.

கொடிகாமம் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளையின் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்ட இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளை பிரதேச மக்களுக்கு முழுமையான சேவைகளை வழங்க வேண்டும்.

தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் அதிகமானோர் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களின் வாழ்வாதாரத் தேவைகள், தொழில் முயற்சிக் கடன்கள் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கி வங்கிகள் கடன் உதவிகள் வழங்க வேண்டும்.

ஏனெனில் கடந்தகால யுத்த சூழலால் பல விதமான அழிவுகளைச் சந்தித்துக் கொண்டவர்களில் தென்மராட்சிக் கிழக்குப் பிரதேச மக்களும் அடங்குவர்.

அத்துடன் பொதுமக்களும் இவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தித் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.- என்றார். (ம-122)

# அறிவுசார் பொருளாதாரத்தை மையப்படுத்தி தற்போதைய சமூகக் கட்டமைப்பு மாறியுள்ளது

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணம், ஓக.13

தற்போதுள்ள சமூகக் கட்டமைப்பு அறிவுசார் பொருளாதாரத்தை மையப்படுத்தி மாறியுள்ளது.

எனவே, இளஞ்சந்ததியினர் அதற்கு ஏற்ப வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார். வறுமைநிலையிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் திட்டத்தை யாழ்ப்பாண வணிகர் கழகம் மேற்கொண்டு வருகிறது.

அண்மையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் இந்த உதவி வழங்கல் இடம்பெற்றது. பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் உள்ளிட்ட வணிகர் கழக பிரதிநிதிகள் முன்னிலையில் 10 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலத்துக்குக் காலம் சமூக கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தற்போதுள்ள சமூக கட்டமைப்பு அறிவுசார் பொருளாதாரத்தை மையப்படுத்தி மாறியுள்ளது. அதற்கு ஏற்றவகையில் இளம் சந்ததியினர் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சமூக பொருளாதார உளவியல் ரீதியாக வறுமைப்பட்ட மக்களை வலுப்படுத்தும் நோக்குடன் யாழ். வணிகர் கழகம் வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகிறது. இடம்பெற்று முடிந்த யுத்தம் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கலாம். இருந்தும் எதிர்கால நம்பிக்கையுடன் வாழ வேண்டும். எதிர்கால சந்ததி ஆரோக்கியமாக வாழவேண்டும். அதற்கான மன வைராக்கியம், தற்துணிவு வேண்டும். பிறரைக் கையேந்தும் நிலை இல்லாமல் செய்யப்பட வேண்டும்.

அதற்கு உதவும் வகையில் வணிகர் கழகம் தற்போது வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றது. - என்றார். (ம-14)

# வடமராட்சி வலய சித்திரப் போட்டி முடிவுகள்

வடமராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவால் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வலயமட்ட சித்திரப்போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரம் வருமாறு:

**தரம்1:** உ.மாதுமை கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்), மு.அஸ்விகா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ம.டிலானி (குடத்தனை அ.மி.த.க பாடசாலை), க.ஷர்மினி(அம்பன் அ.மி.த.க பாடசாலை), லூ.பிரான்சிஸ் ஜெனா (கலட்டி றோ.க.த.க. பாடசாலை).

**தரம்:2** வி.கிருஷ்ணபதி (கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை), சு.வினுஜா (தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம்), கி.துளசிகா (கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை), ம.கிருஷன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ஜெ.தனோஜா (கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்).

**தரம்:3** சு.வனஜா (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), ம.சர்மிகா (கற்கோவளம் மெ.மி த.க. பாடசாலை), ஸ்ரீ.தர்சிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கை. பிருதுவி(கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), தி.நிஷாந்தன் (உடுத்துறை மகாவித்தியாலயம்).

**தரம்:4** நா.கஸ்தூரி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ச.ரெனோசன்(வல்வெட்டி இ.த.க. பாடசாலை), யோ.துவாரகா (உடுத்துறை மகாவித்தியாலயம்), ஜெ.சர்மினி(வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி), இ.அபிராமி (துன்னாலை மேற்கு மெ.த.க. பாடசாலை).

**தரம்:5** பு.அர்ச்சயா (மேலப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்), சி.சரணியா (உடுத்துறை மகாவித்தியாலயம்), லூ.அஜித் குமார்(பொலிகண்டி இ.த.க. பாடசாலை), அ.டிலக்ஷனா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), கு.பிரகலாதன் (நெல்லியடி மெ.த.க.பாடசாலை). (வ-190)

# உள்ளூராட்சி வார போட்டி முடிவு

நாவற்குழி, ஓக.13

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வினாவிடைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**தரம் 11**

கு.ராகவன் கைதடி குருசாமி வித்தியாசாலை, கு.திலக்சனா கைதடி குருசாமி வித்தியாசாலை, லோ.ருக்சாயினி கைதடி குருசாமி வித்தியாசாலை.

**தரம் 12**

ம.யசிந்தன் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, ச.ராகுலன் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி, க.லக்ஷன் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி,

முன்பள்ளி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

**தனி நடனம்**

சந்திரமோகன் பல்லவி, அருந்தவபாலன் மேனகா, சுதாகரன் மகிழ்நிலா.

**பாட்டு**

ஆனந்தராஜா டினோஜா, பிரபாகரன் புகழினி, தயானந்தன் அபிர்த்தனா.

**கதை கூறல்**

ரஞ்சித்குமார் மதுசிகா, மனோகரன் அரன், சிறீசந்திரமோகன் ஜஸ்வந்தி. (ம-121)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.13

நவாலி வடக்கு, இளைஞர் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் புலவர் முகாம் மண்டபத்தில் இடம் பெற்றன.

இதில் தலைவராக பா.மோகன்ராஜ், உபதலைவராக ந.பிரதீபா, செயலாளராக எஸ்.தர்சன், உபசெயலாளராக த.தனுஜா, பொருளாளராக செ.நிறோஸ் உட்பட 11 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(ம-313)

# இசை அர்ச்சனை ஒத்திகை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர் பெருந்திருவிழாவில் கார்த்திகை திருவிழாவன்று நடைபெறும் இசை அர்ச்சனை நிகழ்ச்சிக்கான ஒத்திகை நிகழ்வு இன்று சனிக்கிழமை மஞ்சத்தன்று நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதல் பங்குபற்ற விரும்பும் கலைஞர்களை வருகை தரு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி நிறுவனங்கள் பற்றிய சிறு தகவல்

✱ 1986 ஆம் ஆண்டு ஜப்பானில் அறிமுகமான NICAM - NEAR INTANTANEOUS COMPANDED AUDIO MULTIFLEX எனும் புதிய தொழில் நுட்பத்தினுள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் பிரவேசித்தது.

✱ இலங்கையின் தொலைக்காட்சிச் சேவை - 1978 இலும், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் -1982 இலும், ரூபவாஹினி கல்விச் சேவை ஒளிபரப்பு - 1986 இலும், ஒலிபரப்புச் சேவை 1925 இலும் ஆரம்பமாகின்.

இலங்கை வானொலிச் சேவை 1967இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியது (SLBC) எனப்படும்.


✱ இலங்கையின் வானொலி ஒலிபரப்பு சேவைகளாக:
இலங்கை வானொலி கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு, தென்றல்FM , யாழ் FM, வசந்தம்FM, மற்றும் சக்திFM, சூரியன்FM, வெற்றிFM என்பனவும் குறிப்பிடத்தக்கன.

**நாடுகளும் செய்தி நிறுவனங்களும்.**

இந்தியா -UNI, PTI
பாகிஸ்தான் -APP
இலங்கை - லங்காபுவத்
ஈராக் -I.N.A
ஜப்பான்- கியோடே
பிரான்ஸ் - A.F.P
இத்தாலி - அன்ஸா
ஜேர்மனி - D.P.A, A.D.N
ரஷ்யா - டாஸ்
எகிப்து - மேனா
கியூபா - பெரிலா
அமெரிக்கா -C.N.N , ரொய்ட்டர்
பிரிட்டன் - I.T.N
பிரேஸில் - A.N
ஈரான் - இர்னா
லண்டன் - BBC

- ரூபி

# மகாகவி பாரதியார்



கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்த்த உத்தமரில் ஒருவர் ஆவார். இவர் இலக்கிய வரலாற்றில் மகாகவி என ஏன் எடுத்தாளப்படுகிறார் என நோக்குவோமானால்,

**புதுமைகளைப்படைத்தவர்**

தமிழிலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு வரை மரபுக்கவிதையே செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது. ஆனால் பாரதியினுடைய சொல்புதிது, சுவைபுதிது, பொருள் புதிது எனப் புதுமை படைத்து நவீன கவிதை படைத்துள்ளார். புதுக்கவிதைக்கு வித்திட்டுள்ளார். அந்த வகையில் வரலாற்றுக்கு புதுமை படைத்த மகாகவியாக நிற்கின்றார்.

**பிற்காலத்தவருக்கு வழிகாட்டி ஆகின்றார்**

பாரதி படைத்த நவீன கவிதை இலக்கிய வரலாற்றில் தனியிடம் பிடித்து நிற்கின்றது. பாரதியைத் தொடர்ந்து அவர் வழியில் பாரதிதாசன் முதலாக இன்றுவரை நல்ல கவிஞர்கள் அவருடைய வழியைப் பின்பற்றி நிற்கின்றனர். வள்ளுவர் அறநூல்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது போல் இளங்கோவடிகள் காப்பியங்களுக்கு வழியாக நின்றது போல் பாரதி நவீன கவிதைகளுக்கும் புதுக் கவிதை களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றார்.

**உலகக் கண்ணோட்டத்துடன் கவிதைகளைப் படைத்தவர்**

குறித்த படைப்பானது குறிப்பிட்ட இனத்தையோ, மதத்தையோ, மொழியையோ, மக்களையோ மையமாகக் கொண்டு படைக்கப்பெறின் அது அந்தந்தக் குறிப்பிட்ட இனம், மதம், மொழி, மக்களிடமே வெற்றி பெறும். ஆனால் பாரதியோ உலக கண்ணோட்டத்துடன் உலக மக்கள் யாவருக்கும் பொதுமையான ஓர் இலக்கியத்தைப் படைத்து நிறகின்றார். தற்போது பிரான்ஸ், ஆங்கில மொழி இலக்கியங்கள் வெற்றி பெறக்காரணம் அவர் களுடைய உலகக்கண்ணோட்டமே ஆகும். அந்த வகையில் பாரதியினுடைய விடுதலை கோரிய பாடல்கள் உலகத்தில் அடிமைப்பட்ட தேசங்களில் எல்லாம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கண்டுகொள்ளலாம். உதாரணமாக பலஸ்தீனத்தில் பாரதியின் விடுதலை கோரிய பாடல்கள் ஒலிக்கின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**காலத்தால் அழியாத கவிதைகள் படைத்தவர்**

இன்று புற்றீசல்களாய் ஏராளமான இலக்கியப் படைப்புக்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. ஆனால் அந்தப் படைப்புக்கள் யாவும் கால ஓட்டத்தால் அடித்துச் செல்லப்பட்டு விடும். ஆனால் கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து எந்த ஒரு படைப்பானது நிலைத்து நிற்கிறதோ அந்தக்கவிதையை படைத்தவர் மகாகவி ஆயினார்.

**சமுதாய மாற்றத்தைத் தன் படைப்பால் ஏற்படுத்தியவர்**

குறித்த சமுதாயத்திலிருந்து தோற்றம் பெறுகின்ற இலக்கியங்கள் மற்றோர் சமுதாயத்தை உருவாக்கி நிற்குமாயின் அந்தப் பட்டைப்பு உயிருள்ள படைப்பாகும். பாரதி அடிமைப்பட்ட சமுதாயத்திலிருந்து கொண்டு விடுதலைகோரியும் விடுதலைகொண்ட சமுதாயத்தையும் பாடினான். இந்தக் கவிதைகளின் தாக்கத்தால் விடுதலைகோரிய சமுதாயம் உருவாக்கம் பெற்றது. அந்த வகையில் பாரதி மகாகவி ஆகின்றார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர் காலத்துக்குப் பின்னர் 19ஆம் நூற்றாண்டு வரையான நாநூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி இலக்கிய செழுமை அற்றதாகவே இருந்து வந்துள்ளது. அவ் வாறு நாநூறு ஆண்டுகள் வீழ்ந்த தமிழை வெறும் நாற்பது ஆண்டுகளில் தூக்கி நிமிர்த்திய பெருமை பாரதியையே சாரும்.

பாரதியே முதன்முதலில் மகாகவிகளை வரையறை செய்தார். இவ்வரையறையினுள் வள்ளுவர், இளங்கோ, கம்பர் என்ற முப்பெரும் கவிஞர்களையும் இனங்காட்டி இருக்கின்றார். இவர் இனங்காட்டிய வரையறை பிற்கால இலக்கிய வரலாற்று ஆசிரியர்களாகப் பாரதியாரையும் மகாகவியாக இலக்கிய வரலாற்றில் இனங்காட்டி நிற்கின்றதெனலாம். தமிழானது பழைமைக்கும் பழைமையாய் புதுமைக்கும் புதுமையாய் இரு வழக்கும் பெற்று இன்று சிறப்புற்று நிற்க பாரதியே காரணம் எனலாம்.

வே.சுபேந்திரன்,
தரம்-11, யா/ஹாட்லிக் கல்லூரி.

# மனதில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்கலாம்

வாழ்க்கை வாழ்வதற்கே சாவதற்கு அல்ல. ஒவ்வொரு சோதனைகளையும் வெற்றியோடு தாண்டி முன்னேறிச் செல்வதற்கு முதலில் மனதில் உறுதி வேண்டும். நாம் செல்லும் பாதைகள் எல்லாம் கல்லும் முள்களும் செடிகளும் குப்பைகளும் சேறுமாய் பள்ளங்களுமாய் நிறைந்து இருக்கும்.

இந்தப் பாதையில் நாம் எப்படிப் போக முடியும் என்று யோசிக்கிறோம். அடுத்த பாதையில் செல்வதால் காலமும் நேரமும் தான் நம்மை விட்டு வெகுதூரம் செல்கின்றன. அந்தப் பாதையையும் தாண்டிச் செல்ல முடியும் என்கின்ற மன உறுதி வந்து விட்டால் தாண்டிச்செல்ல முடியும்!

அன்றைய காலத்தைவிட இன்றைய காலம் மாறுபட்டு நிற்கின்றது. உணவு, உடை நடைகள், நோய்கள் எல்லாம் ஒவ்வொரு கோணங்களாக மாறிவிட்ட போது மனதில் சஞ்சலங்களும், வடுக்களும் நிறைந்து போயின.

இதை நாம் சமாளிப்பதற்கு ஒரே மருந்து நம்மை நாம் முதல் சமாதானப்படுத்தி தேவையற்ற விடயங்களைத் தூக்கி எறிந்து நல்ல விடயங்களை மட்டும் சுவாசித்து மனதில் நிலையான உறுதியை எமக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதலில் மனதில் சக்தி இல்லை என்றால் வாழ்க்கையைக் கொண்டு செல்வது கடினம். முக்கியமாக எந்த ஒரு விடயத்திற்காகவும் எம்மை முழுமையாய் அர்ப்பணித்து விடக்கூடாது.

அதுவே முதல் எம்மை நோயில் வீழ்த்தி விடும். மனம் என்ற மாளிகை மாயை என்ற போதைக்குள் புதைக்கப்பட்டு விட்டால் அது மாயையைத்தான் தேடிக்கொண்டே இருக்கும். மாயையிடம் இருந்து மனதைக் காப்பாற்ற உண்மைகளை அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் மாயையிடம் மாட்டிக் கொள்ளாதவாறு கவனமாய் இருக்கவேண்டும்.

எமது மனதை அலைமோத விட்டால் அது எம்மை நாமே அடித்துக் கொள்ள வேண்டிய நிலைதான் வரும். அதன் பின் எந்த மருந்தாலும் எம்மை குணப்படுதிக்கொள்ள முடியாது.

எமது வாழ்க்கை மரணத்தோடு முடிவடைகின்றது தானே என்று நினைத்துக்கொண்டு வாழ்வதை விட இந்த மரணம்



வரையாவது நல்லதாக வாழ்வோம் என்று வாழ்வதே வாழ்க்கையின் சிறப்பு. இதற்கு எமது சிந்தனைகளும் மனதும் ஆரோக்கிய மானதாக இருக்க வேண்டும். வாழ்வதற்கு நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்ப்புக்களையும் துன்பங்களையும் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தினமும் ஏதாவது ஒரு நிலை மாறத்தான் செய்கின்றது. அந்த மாற்றங்களைக் கண்டு வெறுப்பும் சோர்வும் வரத்தான் செய்யும். அதை முறியடிக்கும் நிலைக்கு எமது மனதைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

எந்த ஒரு கொடை வள்ளல்களாலும் சாதிக்க முடியாத எந்த ஒரு விடயத்தையும் மனம் என்பதால் சாதிக்க முடியும். மனது உறுதியாக இருந்தால் ஒரு சாம்ராஜ்யத்தைக்கூட அசைக்க முடியும்.

- ஞானி

# ஆன்மிகம் [...]

காலையில் கடிகாரம் அலறுகிறது. நாம் [...]
விடியவில்லை, நன்றாகத் தூங்கவேயில்லை [...]
எழும்புவம் என்று சாட்டுச் சொல்லி சமாதான[...]
ஆன்மிகத்தை வளர்த்தால் ஆளுமை பிற[...]
செய்துகொள்ளமுடியும். எனவேதான் ஆன்[...]
கொள்ளமுடியும். இன்றைக்கு எமது சமூகத்தி[...]
அவர்களின் வாழ்க்கை நிலைக்கேற்ப ஆன்மி[...]
பயிற்சிகளே பேருதவி புரிகின்றன.

''தாமரை இலை தண்ணீர்போல'' என்பத[...]
கொடுக்கப்படும் ஆன்மிகப் பயிற்சி ஆழத்துக்[...]
ஆன்மீக கருத்துக்களின் ஊடாக மானிடப்பிற[...]
என்னும் நற்பண்புகள் வளரும்.

மனிதன் விண்வெளியை ஆராய்ந்தான். கோ[...]
கண்டறிந்தான். வானவெளியில் பறக்கவழி[...]
இம்மண்ணில் நடக்க, வாழக்கற்றுக் கொள்ளவி[...]
விளக்கை வைத்துக்கொண்டு தீக்குச்சி எங்கே[...]
ஆன்மிகமானது வழி சமைப்பதாக அமைகின்ற[...]
ஏற்படுத்தி அவனது வாழ்வைச் சிறப்புறச் செ[...]
அது கூட்டைப் பதித்துவிடும். இது போன்றது[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...த்தக்கதாகும்.
...படைத்தவர்
... இலக்கியப்
...மே உள்ளன.
... கால ஒட்டத்
...ஆனால் கால,
... ஒரு படைப்
...கவிதையை

...யவர்
...ம் பெறுகின்ற
... உருவாக்கி
...ள்ள படைப்
...திலிருந்து
...லைகொண்ட
...விதைகளின்
...ம் உருவாக்
...தி மகாகவி

...காலத்துக்குப்.
...ான நாநூறு
...கிய செழுமை,
...வாறு நாநூறு
...பது ஆண்டு
...யையே சாரும்.
...களை வரை
... வள்ளுவர்,
...ஞர்களையும்
...னங்காட்டிய
...று ஆசிரியர்
...க இலக்கிய
...னலாம்
... புதுமைக்கும்
...று சிறப்புற்று

...திரன்,
...ட்லிக் கல்லூரி.

# குழந்தைகளிடம் ஏராளமாகக் கற்றுக் கொள்ளலாம்



குழந்தைகள் இல்லாத வீடு செல்வம் இல்லாத வீடுதான். சின்னஞ்சிறு குழந்தைகளுடன் சில நிமிடங்கள் பேசினால் போதும், எமக்குத் தெரியாத பல விடயங்களைக் கற்றுத் தருவார்கள். விட்டுக்கொடுப்பு, குறும்பு, சிரிப்பு, கோபம், சின்னச் சின்ன சண்டைகள் இவை மட்டுமா? அப்பப்பா... அவர்கள் அடம்பிடிக்க ஆரம்பித்தார்கள் என்றால் போதும் அவர்களிடம் எல்லோரும் தோற்றுப் போக வேண்டியதுதான்.

பெரியவர்களுக்கு இல்லாத நல்ல குணங்கள் பல குழந்தைகளிடம் இருக்கின்றன. குழந்தைகள் சண்டை பிடிப்பார்கள் ஆனால் சில நிமிடத்திலேயே அதை மறந்து ஒன்று சேர்ந்து விடுவார்கள். பெரியவர் களிடம் கேள்வி கேட்பதில் குழந்தை களுக்கு அலாதிப்பிரியம். ஆனால் சில நேரத்தில் பெரியவர்கள் அவர்களின் கேள்விக்கு '' அது அப்படித்தான் '' என்று கூறி வாயடைத்து விடுவார்கள். இது தவறானது, குழந்தைகளின் கேள்விக்கு இப்படியொரு பதிலைச் சொன்னால் குழந்தைகள் பயத்தின் காரணமாக மேலும் கேள்விகளைக் கேட்காமல் விட்டு விடுவார்கள். குழந்தைகள் சாப்பிடும் போது பார்த்திருக்கிறீர்களா? எவ்வளவு அழகாகச் சாப்பிடுவார்கள். பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கொடுத்துச் சாப்பிடும் இயல்பும், உணவை ரசித்து ருசித்து மிகவும் ஆறுதலாக சாப்பிடும் இயல்பும் அவர்களிடம் தான் இருக்கிறது. குழந்தைகள் உண்மையைப் பேசுவதில் தயக்கம் காட்ட மாட்டார்கள். நாமாகப் பொய்யைச் சொல்லிக் கொடுத்தாலும் அதை அப்படியே சொல்லி விடுவர். இதனால் தான் ''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று...'' என்று கூறுவார்கள் போலும். குழந்தைகளுக்குப் பெரியவர்கள் போல் உலகியல் கவலைகள் இல்லை. அதனால் தான் அவர்கள் எப்போதும் சந்தோஷமாகவே இருக்கிறார்கள். பெரியவர்களுக்கு அதிகமாகப் பேசிப் பழக்கம். ஆனால் குழந்தைகளுக்கு அழகாகப் பேசித்தான் பழக்கம். குழந்தைகளிடம் இன்னும் ஏராளமான நல்ல குணங்களும் திறமைகளும் இருக்கின்றன. அவர்களிடம் பழகிப் பாருங்கள் உங்களுக்கும் புரியும்.



ஹரிரூபி,
ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்.


## சொர்ப்பனம்தான் வாழ்க்கையா

போரின் எச்சம்
போரிட்ட மிச்சம்
போதையின் கூடு
போகமுடியாத வீடு
பொங்கும் மூளை
பொதியின் காளை
பறக்கும் காகம்
பட்டென்ற வேகம்
வயல் நிறைந்த முல்லை
வாடியதுதான் தொல்லை
ஏதிலாரும் ஏர் பிடித்து
ஒல்லையிலே விதைத்து
ஒண்ணா நன்மையானோம்
புனலிடையே
புல்லுகள் தெரியுது
புனைந்த மணிகளை
புடுங்கத்தான் நிற்குது

அல்லல் மறைந்து
அந்தமாய் இருந்த வயல்
அடி சிலைத்தான் தந்து நின்றது
அயர்வுறா உழைத்த காளைக்கு
ஆரம்போடும் அணங்கைப் பாரு
செய்நன்றி தீர்க்க
செஞ்சோற் கடனுக்காய்
சேற்றிலே உழவன் கால்
சோற்றிலே மனிதன் கை - என்ற
சொர்க்க மகுடத்தை
சொல்லி நிற்கும் காரிகையே...
சொந்த மண்ணில் மீண்டும் ஏர்பிடிக்க
சோடி சேர்ந்து கழனியில் விதைக்கும்
காலம் வரும்வரை
சொர்ப்பனம்தான் வாழ்க்கையா?

ஜெயாஜெகன்
புதுக்குடியிருப்பு.

# தொல்காப்பிய (கால) ஆடல்



(சென்றவாரத் தொடர்ச்சி)

புறத்திணை ஒழுக்கத்தின் ஊடாக பல ஆடல் கலைகளை தொல்காப்பியம் விளக்கியுள்ளது. அதுமட்டுமன்றி பொருளதிகாரம், மெய்ப்பாட்டியலின் கான் எட்டு வகையான உணர்வு நிலைகள் விளக்கப் பெற்றுள்ளன. மனிதரிடத்தே தோன்றும் உணர்வுகளை 8 வகையாக்கிக் கூறுவதுடன் அந்த எட்டு வகையிலும் பல பாகுபாடுகளைத் தொல்காப்பியம் கூறுகிறது.

இந்த 8 மெய்ப்பாடுகளும் பிற்காலத்தில் ரஸம் என்ற கருத்துடன்- சாந்தமும் ஒரு ரஸமாகச் சேர்க்கப்பட்டு 9 ஆக ''நவரஸங்கள்'' என்று அழைக்கப் படுகின்றது. தொல்காப்பியனார் கூறும் மெய்ப்பாட்டியல் ஒரு விரிவான ஆய்வுப்பரப்புடையது. எனினும் இங்கு கூத்துக்கள் பற்றிக் கூறப் பட்டதால் மேலோட்டமாகக் குறிப் பிடப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள் ஒவ் வொன்றும் அக்கால மக்களின் வாழ்க்கை முறைமைகளினூ டாக ஆடல், இசை பற்றிய செய்திகளைத் தந்திருப்பதைக் காண்கிறோம். எனினும் தொல்காப்பியம் கூறும் ஆடல் வடிவங்கள் பற்றிப் பார்த்த வேளை தாண்டி தொல்காப்பிய கூத்துக்களுடன் ஏனைய சங்க இலக்கியங்கள் கூறும் கூத்துக்களை ஒப்பிட்டு ஆராய்வது சுவாரஸ்ய மானது.

அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

(முற்றும்)

# ...ம் சொல்லும் ஆளுமை

(சென்றவாரத் தொடர்ச்சி)

...றது. நாம் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு குளிராக இருக்கிறது. இன்னும் சரியாக ...வேயில்லை. அதற்குள் கடிகாரம் அடித்துவிட்டது. நாளைக்கு வேண்டுமானால் அதிகாலை ...லி சமாதானப்பட்டுக்கொள்கிறோம். இதுதான் பெரும்பாலானவர்களின் நிலை. நாம் அனைவரும் ...ளுமை பிறக்கும், இதனால் அன்றைய சராசரி வேலையையாவது பூரண மகிழ்ச்சியுடன் ...வதான் ஆன்மிகத்தின் ஊடு ஆளுமை வளர்க்கப்படுகிறது என்ற நிஜத்தை நம்மால் புரிந்து ...து சமூகத்தில் ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் என்று இந்த அந்தஸ்தை அவர்கள் பெறுவதற்கும் ...கற்ப ஆன்மிக வளர்ச்சி பெறவும் இறை திருவுளத்தை ஏற்று இறைபணி செய்யவும் ஆன்மிக ...

...ல'' என்பதற்கிணங்க மனிதனிடம் ஒட்டாமல் உள்ள ஆன்மீகத்தால் பயிற்சி, பலன் இல்லை. ...சி ஆழத்துக் நுழைந்து அடிமக்களையும் சென்றடைவதாக அமைதல் வேண்டும். இவ்வாறான ...மானிடப்பிறப்பின் மேன்மைகளான மனிதத்தன்மை, பிறரை மதித்தல், இரக்கம், அன்பு, நேயம் ...

...ந்தான். கோள்களைக் குறித்தான். உலகத்தையே சுற்றி வந்தான் மீன்போல் கடலின் ஆழத்தையும் ... பறக்கவழி செய்தான். இன்னும் பலதுறைகளைக் கண்டுபிடித்தான். ஆனால் மனிதனால் ... கொள்ளவில்லை என்ற உண்மையை ,அறிவை, உணர்வை, ஞாபகத்தைப் பெறத்தவறியதே கையில் ...துச்சி எங்கே? நான் விளக்கைக் கொளுத்தவேண்டும் என்ற வசனத்துக்கு சொந்தக்காரர்களுக்கு ... அமைகின்றது. இந்த ஆன்மிகமானது இவர்களிடத்தே அறிவு, ஆளுமை, அனுபவம் போன்றவற்றை ...றப்புறச் செய்கின்ற ஓர் ஊடகமாகும். அதாவது இரும்பு சூடானால் உடலில் பட்ட இடங்களில் ... போன்றதுதான் ஆன்மாவின் அனுபவம். அவனது வாழ்வை மாற்றிவிடுகின்ற ஒன்றாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசீர்வாதப் பிரார்த்தனை

மணி விழா நாயகன்

**பேராசிரியர் க.தேவராசா**

அவர்கள் நலமெலாம் பெறக் கண்ணகாதேவியின் திருவருளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

**சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்**

உ

அராலியூர், அமரர்

பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்கள் பரமேஸ்வர சர்மா அவர்களது

பத்தாவதாண்டு நினைவுதினத்தை முன்னிட்டு

## "கீர்த்தனாஞ்சலி"

நூல் வெளியீட்டு விழா

காலம்

ஆடித்திங்கள் 29 ஆம் நாள் 14.08.2011 ஞாயிற்றுக்கிழமை

பிற்பகல் 3 மணி

இடம்

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலய மண்டபம்

தலைவர்

வித்தியாபூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா

(கோப்பாய் சிவம்)

அமைப்பாளர், சர்வானந்தமய பீடம்.

### நிகழ்வுகளின் நியமங்கள்

மங்கல விளக்கேற்றல்: பிரம்மஸ்ரீ இ. சோமேஸ்வர சர்மா
ஆதீனகர்த்தா, அருளானந்தப் பிள்ளையார் ஆலயம்

வேத பாராயணம்: சிவஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள்
இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயில்

தேவார பாராயணம்: செல்வி ஜெ. ஐஸ்வர்யா

வரவேற்புரை: பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசர்மா (இளவாலை)

ஆசியுரை: சிவாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்

தலைமையுரை:

நினைவுரை: திரு.நாகலிங்கம் நடராசா
ஓய்வுபெற்ற அதிபர், அராலி

வெளியீட்டுரை: கானவினோதன் சிவஸ்ரீ சோ. வரதராஜக் குருக்கள்
(புளியங்கூடல்)

நன்றியுரை:

நூல் வெளியீடு :

அந்தணப்பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம்

**சிவஸ்ரீ ப. ஜெயகுமாரக் குருக்கள்**

(மருதடி விநாயகர் ஆலயம்)

(6761) (45)

## காணி விற்பனைக்கு

கைதடி நுணாவிலில், 307-308 Km இடையில் A9 வீதியில் 12 பரப்புக் காணியும் A9 வீதியில் இருந்து 100m தூரத்தில் 30 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. சேர்த்தோ பகுதியாகவோ கொடுக்கப்படும்.

தொடர்பு:-021 3008944, 0772395774

## ஆண் விடுதிக்கு பராமரிப்பாளர் தேவை

மானிப்பாய் யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சிறுவர் இல்லத்துக்கு ஆண் பராமரிப்பாளர் மற்றும் தோட்ட உதவியாளர்கள் தேவை. உங்கள் சுயவிவரக் கோவையை பின்வரும் விலாசத்துக்கு உடன் அனுப்பி வைக்கவும். வயது எல்லை 35 இற்கு மேற்பட்டோர். கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது.

Hanna's Relief Swedish Mission,
19/1,Beach Road,Mount Lavinia.
e-mail-elimcvh@gmail.com
Tel:0112724110

## காணி விற்பனைக்கு

நுணாவில் யூனியன் பேக்கறி அருகில் (கண்டி வீதியில் 100 யார் தூரத்தில்) 4 பரப்புக் காணியும் மேல்மாடி வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :0775318120

## வீடு வாடகைக்குண்டு

இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலைக் கருகில் மீள்புனரமைக்கப்பட்ட 07 அறைகள், 2 குளியலறைகள்,1 சமையலறை விசாலமான வரவேற்புக்கூடம் என்பன அமைந்த 4 பக்கமும் சுற்றுமதில் கொண்ட நவீன வடிவிலமைந்த வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0777207260, 0750406396.

## ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்

வெங்கடேஷ் சுவாமிகள்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுநர்.

கைரேகை, ஜாதகம், திருமணயோகம், வியாபாரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி, குழந்தைப் பாக்கியம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்துத் தீர்வு காணுங்கள்.

தொடர்பு: இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
0773741117,0771656527

நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை கட்டணம் 101/-

## கட்டடம் கட்டுவதற்கு

கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட வேலையாள்கள் மூலம் மேசன், தச்சு வேலை, மாபிள் பதித்தல், மின்சார வேலை,plumbing, colour washing,pantry cup board முதலியன மிக அழகான முறையில் நியாயமான கூலிக்கு, குறித்த திகதியில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0777556244

## துளிர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அறிவித்தல்

**உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவ சான்றிதழ் கற்கை நெறி!**

- பிரிவு: 8
- கற்கைக் காலம்: 6 மாதங்கள்
- ஆரம்பம்: 03.09.2011, சனிக்கிழமை
- விரிவுரைகள்: சனி, ஞாயிறு, போயா தினங்கள்
- இக்கற்கை நெறியை தொடர விரும்பும் இருபாலாரும் 23.08.2011 இற்கு முன்பு சுயவிவரத்தை அனுப்பிவைத்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளதால்...முந்துங்கள்! ஆளுமைமிக்கவர்களாய் மாறுங்கள். சவால்களைச் சந்திக்க இது நல்லதோர் சந்தர்ப்பம். உங்களுக்கு வயது ஒரு தடையல்ல!

இல.30 கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

பணிப்பாளர்,
துளிர்கள் நிறுவனம்.



## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

கடந்த 14.07.2011 இல் சிவபத மடைந்த எமது மதிப்புக்குரிய வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என்.இரத்தினசிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியார்

**அமரர் இரத்தினசிங்கம் சித்திரூபா**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினமான இன்று (13.08.2011) சாவகச்சேரி அஞ்சல் சமூகத்தினர் அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!ஓம் சாந்தி!

தபால் அதிபர் மற்றும் உத்தியோகத்தர்கள்,
உப தபால் அதிபர்கள்,
அஞ்சலர்கள் மற்றும் பணியாளர்கள்.

(சி/2809)(39)

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13.08.1927

மறைவு: 13.08.1986

யாழ்ப்பாணம், கோயில் வீதி, நல்லூரைச் சேர்ந்த

## K.V.S. சன்முகநாதன்

(பிரபல சட்டத்தரணியும் சமாதான நீதிவானும்)

ஆண்டுகள் 25 ஐ கடந்தாலும் எம் எல்லோருடைய இதயங்களிலும் உங்கள் நினைவுகள் அழியாமல் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன...
எம் அன்பான அப்பாவின் ஆத்மா சாந்தி பெற இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்

தொடர்புகளுக்கு:
ravi2507@hot mail.co.uk

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலும் 'மர்ம மனிதர்' பீதி; உடன் நடவடிக்கை எடுக்குக

## அரியநேத்திரன் எம்.பி.கோரிக்கை

கொழும்பு, ஓக.13

கிழக்கு மாகாணத்தில் மர்ம மனிதர் தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

புலிகள் காலத்தில் இது போன்ற சம்பவங்கள் ஏதும் நடந்திருந்தால் அந்தப் பழியும் புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும். புலிகள் இல்லாத இந்தக் காலத்தில் மர்ம மனிதன் பின்னணியில் யார், யார் செயற் படுகின்றனர் என்பதைக் கண்டறியும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக கிறீஸ் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதனால், மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பும், பீதியும் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உயர்தரப் பரீட்சைக்கு இக் காலப்பகுதியில் தோற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங்களிலும் மர்ம மனிதர்கள் நடமாடுகின்றனர் என்று மக்கள் என்னிடம் தெரிவித்தனர். பாது காப்புத் தரப்பினரே இதன் பின்னணியில் உள்ளனர் என்றும் சந்தேகிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களால் கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.



இதன் பின்னணியில் யார், செயற்படுகின்றனர் என்பதைக் கண்டறிந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புலிகள் இல்லாத காலப்பகுதியிலேயே அரசு மர்ம மனிதன் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றது. இல்லையேல், இந்தப் பழியும் புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும். எனவே, இந்த மர்ம மனிதன் தொடர்பாக அரசு கவனம் செலுத்தி முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் - என்றார்

(ச)

## மகளிர் போராட்டம்....



திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சேர்ந்த தொண்டர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த புதன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மர்ம ஆசாமிகள் வதந்தி: ஹற்றன் பொலிஸார் அறிவிப்பு

நோர்வூட், ஓக.13

மலையகத்தில் கிறிஸ் பூசிய மர்ம மனிதர்களின் நடமாட்டம் என்பது வெறும் வதந்தி என்றும், பொதுமக்கள் இதனால் அச்சமடையத் தேவையில்லை என்றும் ஹற்றன் பொலிஸார் நேற்று முன்தினம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

இந்த அறிவித்தலில், மேற்படி செயற்பாடுகளில் எவரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், இவ்வாறான வதந்திகளைப் பரப்புவோர் குறித்துப் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அவ்வாறானவர்களை இனங்கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

(ச)

# வெலிமடையில் மர்ம ஆசாமிகள் பிடிக்கப்பட்டு நையப்புடைப்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

தியத்தலாவை, ஓக.13

வெலிமடை - குருத்தலாவைப் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை 'கிறீஸ்' மர்ம ஆசாமியின் நடமாட்டத்தை அவதானித்த மக்கள் வீதிகளில் இறங்கி அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது வீதியெங்கும் டயர்கள் எரிக்கப்பட்டதுடன் பல மணி நேரத்தின் பின்னர் இரு சந்தேக நபர்களைப் பிடித்த பொது மக்கள் நையப்புடைத்து வெலிமடை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அன்றையதினம் பீல்லகொடை, குருத்தலாவை பகுதிகளில் வீடு ஒன்று உடைக்கப்பட்டுப் பல பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன என வெலிமடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர ஹப்புத்தளை சர்வெட்டித் தோட்டத்தில் உட்புகுந்த இரு மர்ம மனிதர்களை தோட்ட மக்கள் விரட்டியடித்ததால் அவ்விருவரும் ஹப்புத்தளை நகரப் பகுதி வீட்டுக்குள் புகுந்தனர் எனவும், அவ்விருவரையும் மடக்கிப் பிடித்த ஹப்புத்தளை பொது மக்கள் நையப்புடைத்து ஹப்புத்தளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்விருவர் தவிர மேலும் இருவர் சந்தேக நபர்களுக்கு ஓட்டோவை வழங்கினர் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மர்ம மனிதர் தொடர்பாக மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ச)

# வீட்டுக்குள் மறைத்து வைத்திருந்த 7| கிலோ கஞ்சாவுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, ஓக.13

71 கிலோ கஞ்சாவை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த வர்த்தகர் ஒருவரைத் தனமல்வில பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளனர்.

தனமல்வில உடவெல பிரதேசத்தில் கஞ்சா விற்பனை செய்து வருவதாகத் தனமல்வில பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றினையடுத்து இந்த நபரின் வீட்டையும் கடையையும் பொலிஸார் சோத்னை செய்துள்ளனர்.

இதன்போது அங்கு 71 கிலோ கஞ்சா பொதிசெய்யப்பட்டு வெளியிடமொன்றுக்குக் கொண்டு செல்லத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார் இவரை வெள்ளவாய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(ச)

# முன்பள்ளி ஆசிரியைகளுக்கு விசேட வலைப்பின்னல் ஆரம்பம்

## அம்பாறை இணைப்பாளர் கூறுகிறார்

பெரியநீலாவணை, ஓக.13

மனித அபிவிருத்தி ஸ்தாபனமும் கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவும் இணைந்து அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக்கான வலைப்பின்னலொன்றை உருவாக்கியுள்ளன என மனித அபிவிருத்தித் தாபன அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பீ.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய நான்கு கல்வி வலயங்களின் கீழுள்ள சுமார் ஆயிரம் முன்பள்ளி ஆசிரியைகளைக் கொண்டு இந்த வலைப்பின்னல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் முன்பள்ளி ஆசிரியைகள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மிகக் குறைந்த வருமானத்தின் கீழ் கடமையாற்றும் ஆசிரியைகளின் சம்பள மட்டத்தை உயர்த்துதல், மாகாண அமைச் சின் கீழ் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுத்தல், ஆசிரியைகளின் கல்வி மேம்பாட்டை உயர்த்தக் கூட்டிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராகப் போராடுதல் முதலியவை இவ்வலைப்பின்னலூடாக மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# மலையகத்தில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஏற்பாடு மக்களின் சுதந்திரத்துக்குத் தடையாக இருக்கக் கூடாது

## திகாம்பரம் எம்.பி.வலியுறுத்து

நுவரெலியா, ஓக.13

மலையகத்தில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் நம்பகத்தன்மையாக இடம்பெறுகின்ற பட்சத்திலேயே மலையக மக்களின் பீதி நிலையைப் போக்க முடியும் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகத்தில் மர்ம மனிதர்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாடுகள் லிந்துலை, பத்தனை, நாவலப்பிட்டி, ராகலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பான உண்மை நிலைவரங்களை பொலிஸார் பொதுமக்களுக்கு உரியவகையில் வெளிப்படுத்தி வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மலையகத் தமிழ் மக்களைத் தொடர்ந்து பீதிநிலைக்கு உள்ளாக்கும் வகையிலான பாதுகாப்பு நடவடிக்கைகளானது மக்களின் சுதந்திர செயற்பாடுகளுக்குத் தடையாகவே இருக்கும்.

ஏற்கனவே தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களாக உள்ளனர். அத்துடன் தோட்டத் தொழிலாளர் களின் உழைப்புக்கேற்ற சம்பளத்தையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

மர்ம மனிதர்களின் நடமாட்டம் தொடர்பில் வதந்திகளைப் பரப்புகின்றவர்கள் குறித்து பாதுகாப்புத் தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மலையகத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக சிலர் தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே இந்த விடயம் தொடர்பில் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் - என்றார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா எல்லைக்குள் அமைந்துள்ள ஆலைகளை அகற்றக் கோரிக்கை

வவுனியா, ஓக.13

வவுனியா நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் அரிசி ஆலைகள், கல் உடைக்கும் ஆலைகள் மற்றும் சிமெந்துக் களஞ்சியம் என்பனவற்றை நகரிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது தூசிகள் வெளியேறாமல் அவற்றை நவீன முறையில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஒற்றுமைக்கான மக்கள் பேரவை வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த ஆலைகள் தொடர்பில் பேரவை அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது:-

பல வருடங்களுக்கு முன்னர் வவுனியாவில் மக்கள் அதிகமாகக் குடியிருக்கவில்லை. காலப்போக்கில் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும் மக்கள் நகரை அண்மித்த வாழ்வைத்தேட முன்வந்ததன் காரணமாகவும் இன்று மக்கள் தொகை வெகுவாக அதிகரித்துவிட்டது.

இப்படியான நிலையிலும் ஆலைகள் நகருக்கு மிக அண்மையாக இருப்பதினால் இவைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், தூசி, சத்தம் ஆகியவைகளினால் தொற்று நோய்கள், சுவாசச் கோளாறுகள், பிள்ளைகள் படிக்க முடியாமை, வீதிகள் விரைவாகப் பழுதடைதல், மின்சாரத் தடங்கல்கள் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

வீதியால் பயணிப்போர் அரிசி ஆலை தூசியினால் பல விதத்திலும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். எனவே, குடியிருக்கும் மக்களைப் பாதிக்காத வண்ணம் இந்த ஆலைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது அல்லது நவீனமயப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# சிமெந்து விற்பனை நிலையங்களில் வர்த்தகர்கள் இருவர் கைதாகினர்

புத்தளம், ஓக.13

நாத்தாண்டி நகரில் சிமெந்து விற்பனை செய்யும் இரு வர்த்தக நிலையங்களை புத்தளம் மாவட்ட செயலக நுகர்வோர் சேவை அதிகாரசபையின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்றுகையிட்டபோது, சிமெந்தை பதுக்கி வைத்திருந்தமை, அதிக விலைக்கு சிமெந்தை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வர்த்தகர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இந்த முற்றுகை நடவடிக்கையின் போது 32 சிமெந்துப் பைக்கற்றுக்களையும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் முற்றுகை மேற்கொண்ட வேளையில் ஒரு வர்த்தக நிலையத்தில் சிமெந்து பைக்கற்றுக்கள் எதுவும் இல்லாதிருந்த போதும், அந்த வர்த்தக நிலைய உரிமையாளரின் வீட்டில் சிமெந்து பைக்கற்றுக்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டிய ஒரு பைக்கற் சிமெந்தை 790 ரூபாவுக்கு இந்த வர்த்தக நிலைய உரிமையாளர் விற்பனை செய்துள்ளார்.

மற்றைய வர்த்தக நிலையத்தில் 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டிய ஒரு பைக்கற் சிமெந்தை 790 ரூபாவுக்கு கடை உரிமையாளர் விற்பனை செய்துள்ளார்.

இந்த இரு வர்த்தகர்களுக்கும் எதிராக மாரவில நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகப் புத்தளம் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

# குறைந்த தண்டனை விதிக்குமாறு கோருகின்றார் ராஜ் ராஜரட்ணம்

நிறுவனங்களின் உட்தகவல்களைப் பெற்று பங்குச்சந்தை வர்த்தகத்தில் சட்டவிரோதமான முறையில் 63.8 மில்லியன் டொலர் லாபமீட்டியமை தொடர்பான வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டுள்ள இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமெரிக்கக் கோடீஸ்வரர் ராஜ் ராஜரட்ணம், அமெரிக்க சமஷ்டி விதிமுறைகளைவிட குறைந்த தண்டனையை வழங்குமாறு நீதிபதியிடம் கோரியுள்ளார்.

நீண்டகால சிறைத்தண்டனையானது மரணதண்டனைக்கு நிகராக அமையும் எனவும், இது குற்றத்தின் தீவிரத்தன்மையை மிகைப்படுத்துவதாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். உலகின் மிகப்பெரும் கோடீஸ்வரர்களில் ஒருவராக விளங்கிய அவர் அமெரிக்க சமஷ்டி விதிமுறைகளின்படி பதினைந்தரை முதல் பத்தொன்பதரை வருடகால சிறைத்தண்டனையை எதிர்நோக்குகிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

நியூயோர்க்கிலுள்ள மாவட்ட நீதிமன்றமொன்றின் நீதிபதி ரிச்சர்ட் ஹோல்வெல் எதிர்வரும் செப்ரெம்பர் 27 ஆம் திகதி ராஜரட்ணத்திற்கான தண்டனையை அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# இறைச்சிக்காக எருமைகளை கடத்திய பெண் உட்பட ஐவர் கைது

கொழும்பு, ஓக.13

எருமை மாடுகளை சட்டவிரோதமாக கடத்திச் சென்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவர் உட்பட ஐந்து பேர் கடந்த புதன்கிழமை கந்தானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 28 எருமை மாடுகளை லொறியொன்றில் கடத்த முயற்சித்துள்ளனர்.

இதற்குமுன் 12 மாடுகளை இவர்கள் அறுத்துக் கொன்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எருமை மாடுகள் தனமல்வில பகுதியில் இருந்து ஜா-எல தண்டுகம பிரதேசத்துக்கு இறைச்சிக்காக அனுமதியின்றி கடத்திச் செல்லப்படவிருந்தன என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# குதிரைஏல விற்பனை

பொலிஸ் குதிரைப்படையில் உள்ள அங்கவீனமான குதிரைகளை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஏற்கனவே இரண்டு குதிரைகள் தலா 25,000 ஆயிரம் ரூபா மற்றும் 2,500 ரூபா என்ற அடிப்படையில் விற்கப்பட்டுள்ளன. இந்தக் குதிரைகளை வாங்கும் செல்வந்தர்கள் அவற்றை தமது வீட்டுத் தோட்டங்களிலும், வளவுகளிலும் அலங்காரமாக உலாவ விடுகின்றனர் என பொலிஸ் குதிரைப்படையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.





சீட்டிழுப்பு இலக்கம் 775 திகதி 11-08-2011

வெற்றி எண்கள்

35 40 49 52 O (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 11,968,340/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,968,340/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | 750,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 314 | 1,000/= | 314,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 573 | 1,000/= | 573,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14573 | 60/= | 874,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7535 | 40/= | 301,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 190537 | 20/= | 3,810,740/= |
| ஆங்கில எழுத்து | 27698 | 20/= | 553,960/= |
| | | மொத்தம் ரூ. 7,977,480/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 700533031-6-36 |
| புத்தளம் | 700533878-3-13 |
| அநுராதபுரம் | 700535527-0-10 |
| கொழும்பு | 700534180-1-21 |
| பதுளை | 700533215-3-23 |
| கண்டி | 700530335-9-29 |
| கம்பஹா | 700536306-9-19 |
| பொலன்னறுவை | 700524841-4-14 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,377,480/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 12,340,980/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஓகஸ்ட் 15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY



**காணி விற்பனைக்கு உண்டு**

கோண்டாவில், இருபாலை வீதியில் பழனியாண்டவர் கோயிலுக்கும் வன்னிய சிங்கம் வீதிக்கும் இடையில் 4 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0778564917

**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**



இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி (ஞாயிற்றுக்கிழமை)

பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதிச் சமூகம் தரவும்.

சீரோங்கிக் கல்வி கலையோங்கு மினுவைப் புகழ்மேலோங்கி
வாழச் சமூகப் பணி கல்விப் பணி தெய்வப் பணிகள் பல புரிந்து
சீரோங்கி வாழ்தனை நின் செயற்கரிய சேவைதனை மனமாரக்
கண்டோம் புகழ்ந்து நாம் வாழ்த்துகின்றோம்
பேரோங்கி நின்றனை தேவராசா செம்மலே நின் கண்ணியமும் கடமையும்
நற்பண்பும் நிறை குணமும் நேர்மையும் வாழி
ஊரோங்கி வாழ்த்த உவந்து உன் துணைவி, மக்கள், மருமக்கள், பேரனுடன்
உயர்வுகள் பல கண்டு வாழி நற்பணிகள் பல செய்து
நலமாகப் பல்லாண்டு வாழி! வாழி!!

- தேவா மணிவிழாச் சபை

வாழ்த்துவோர்: V.S.மகேந்திரன் (அதிபர்), நவீனர் பாடசாலை, நைநடி.




220 இற்கு மேற்பட்ட உலக நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

DHL

உங்களுக்குத் தேவையான அனைத்து பொருள்களையும் உலக நாடுகளுக்கு அனுப்பி DHL மூலம் பெற்றுக்கொள்ளச் சிறந்த சேவையை வழங்குகிறது

திருமுருகன் கொம் நெற்

வெளிநாட்டு கடவுச்சீட்டு உடைய ஒருவருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

வட மாகாணத்திற்கான உங்கள் DHL முகவர்

திருமுருகன் கொம் நெற் மட்டுமே...!

★ போலி முகவர்களிடம் ஏமாறவேண்டாம்
★ விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது

Cool line: 021 222 7835

| | |
|---|---|
| இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. |
| இல.18, பிரதான வீதி, நெல்லியடி. | இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. |

TCN Express 2 B, Nelson Place, Colombo - 06.

**கணினி விற்பனைக்கு**

P(IV) கணினி LCD Monitor மற்றும் அனைத்துப் பொருள்களுடனும்ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
Internet, Skype, V/call பாவிக்கலாம்.
Free - 4GB Pen Drive/ Web Camara
17750/= மட்டுமே.

Sky Computer
162, main street, Jaffna.
021 222 1417, 0750698608

**வீடு காணி விற்பனைக்கு**

கைலாச பிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 1 ¾ பரப்புக்காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும்கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.சி.நாதன் 16/3 விதானையார் வீதி,கண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0776146434

**விற்பனைக்கு**

211, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் கடையும் நிலமும் குளி 15.99 விசாலமுள்ளது.
விற்பனைக் குண்டு.
தொடர்பு:- 075 7463938
(5624)

**ஆடு விற்பனைக்கு**

பால் கறக்கக் கூடிய சணான் ஆடு கடாய் குட்டியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771350082

**விற்பனைக்கு**

கிளிநொச்சி மாவட்டத்தில் கணினி கல்வி நிலையம் நடத்துவதற்குத் தேவையான சகல உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் 5 KV டீசல் ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778889232


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியர்களை தாழ்த்திப் பேச மஹிந்தவுக்கு என்ன அருகதை

## பா.ஜ.மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்

இராமேஸ்வரம், ஓக. 13

இந்தியர்கள் எவரையும் தாழ்த்திப் பேசுவதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு என்ன அருகதை உண்டு? சீனாவோடு சேர்ந்து இலங்கை செய்யும் துரோகத்துக்கு இந்தியாவும் துணை போய்விடக் கூடாது.

- இவ்வாறு பா.ஜ.கவின் தமிழ் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் கங்கை பாதுகாப்புக் குழு சார்பில் கடந்த புதன்கிழமை இராமநாதசுவாமி கோயிலில் ருத்ரஜப வேள்வியில் கலந்துகொண்ட அவர் மேலும் கூறியதாவது:

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவது தொடர்ந்தால் ஏற்கனவே அறிவித்தது போல் கச்சதீவில் தேசியக் கொடியேற்றும் போராட்டம் நடத்தப்படும். இந்தியர்கள் எவரையும் தாழ்த்திப் பேசுவதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அருகதை இல்லை. சீனாவோடு சேர்ந்து இலங்கை செய்யும் துரோகத்துக்கு இந்தியாவும் துணை போய்விடக்கூடாது.

அருணாச்சலம், சிக்கிம், கச்சதீவு, இலங்கையில் ஆளுமையை செலுத்தி வரும் சீனா அடுத்து தமிழகத்தையும் தனக்குச் சொந்தமானது என்று கூறுவதற்கு இடம் தந்துவிடக்கூடாது. கடலில் 6 மணிநேரம் படகில் தங்கி முற்றுகைப் போராட்டம் நடத்திய என்மீது இராமேஸ்வரம் பொலிஸார் பொய் வழக்கு ஜோடித்துள்ளனர்.

தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிடும். பெருவாரியான இடங்களில் பதவிக்கு வருவோம். தற்போது ஊழல் வழக்கில் கைதாகி வரும் காங்கிரஸ் கட்சியினரைத் தொடர்ந்து விரைவில் சோனியாவும் சிக்குவார்.- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அகிம்சையை போதித்த இந்தியாவில் ஊழல் தலைவிரித்தாடுகின்றது

## தலாய்லாமா கவலை



அகிம்சையை போதித்த இந்தியநாட்டில் ஊழல் தலைவிரித்தாடுவது மிகுந்த கவலையளிப்பதாக திபெத் புத்தமத தலைவர் தலாய் லாமா தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினருக்கான தேசிய குழுவின 4ஆவது ஆண்டு சொற்பொழிவு நிகழ்வு டில்லியில் நடந்தது. இதில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு பேசினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

உலகுக்கு அகிம்சை, மத ஒற்றுமை, சகிப்புத்தன்மை, பரந்த மனபான்மை ஆகியவற்றை போதித்தது இந்திய நாடுதான்.

அகிம்சையால் வெல்ல முடியும் என்று உலகுக்கு நிரூபித்த நாடு இந்தியா. அப்படிப்பட்ட நாட்டில் இன்று லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுவது மிகுந்த கவலையளிக்கிறது. நாட்டில் இன்று ஊழல் பெருகியமைக்கு தார்மீக நெறிகளின் மதிப்பு குறைந்தது தான் காரணம்.ஒழுக்கம் இல்லாத மனிதனிடம் சுய கட்டுப்பாடு இருக்காது. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தவறு செய்கிறான். மனிதன் தன்னைதானே சுய பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். மனித நேயத்துக்குதான் இந்த உலகம் சொந்தம். அதேபோல் ஒரு நாடு தனிப்பட்ட கட்சிக்கோ, மனிதனுக்கோ சொந்தமல்ல. மக்களுக்குதான் சொந்தம்- என்றார். (வ)

# கலைஞர் தொலைக் காட்சிக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை - கனிமொழி

டில்லி, ஓக்.13

கலைஞர் தொலைக்காட்சியுடன் தமக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று 2ஜி சிறப்பு நீதிமன்றத்தில் தி.மு.க.மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் வேலைநிறுத்தம் காரணமாக சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாதம் நடைபெறவில்லை. இதனால் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீதிபதியுடன் அதிகாரப்பூர்வமற்ற முறையில் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது மத்திய தொலைத்தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமார் உள்ளிட்டோர் தங்கள் தரப்பு கருத்துகள் தொடர்பாக நீதிபதியிடம் பேசினர். இதன்போதே கனிமொழி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாஹித் உஸ்மான் பல்வாவின் டி.பி.ரியால்டி நிறுவனத்திடமிருந்து கலைஞர் தொலைக்காட்சிக்கு ரூ.200 கோடி கைமாறியது தொடர்பாக கனிமொழி மீது குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது.

நீதிபதியிடம் பேசும்போது இந்தக் குற்றச்சாட்டை கனிமொழி மறுத்தார். ''கலைஞர் தொலைக்காட்சிக்கும் எனக்கும் ஒருபோதும் தொடர்பு இல்லை. அந்த நிறுவனம் எப்படி இயங்குகிறது, அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பது பற்றி எனக்கு ஏதும் தெரியாது' என்று அவர் கூறினார்.

கலைஞர் தொலைக்காட்சி பங்குதாரர்களான கனிமொழி, சரத்குமார் ஆகியோர் கடந்த மே 21ஆம் திகதி கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டனர். இருவரது பிணை மனுக்களும், அவை தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களும் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

## வளமான ஆட்சிக்கு.....



கர்நாடக மாநிலம் ஆளுநர் மாளிகையில் ஆளுநர் பரத்வாஜ் புதிய அமைச்சர்கள் ஐந்து பேருக்கு பதவிப் பிரமாணம் செய்தார். பதவியேற்பு நிகழ்வில் மாநில முதல்வர் சதானந்த கவுடா கலந்து கொண்டார். (வ)

# கோத்தபாய மீது நடவடிக்கை; மத்திய அரசுக்கு வீரமணி கோரிக்கை

தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த தீர்மானத்தை இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய விமர்சனம் செய்தது குறித்து மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட முக்கிய அரசியல் தீர்மானம் குறித்து இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு முதல் வரையும், அதன்மூலம் தமிழக சட்டப் பேரவையையும் கொச்சைப் படுத்திப் பேசியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறனவர்களை சட்டமன்றத்துக்குள் கொண்டுவந்து விசாரணை நடத்தி தண்டனைகூட கொடுக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (வ)

# இந்தியாவின் மிகப்பெரிய மசூதி விரைவில் கேரளாவில்

இந்தியாவின் மிகப் பெரியளவிலான மசூதி ஒன்று கேரளாவில் கட்டப்பட உள்ளது. ஐக்கிய அரசு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களின் பங்களிப்புடன் இந்த மசூதி கட்டப்பட உள்ளது. ரூ.12 பில்லியன் மதிப்பீட்டில் அமைய உள்ள இந்த மசூதி முபாரக் மசூதி என்று அழைக்கப்படும்.

250,000 சதுர அடி பரப்பில் ஒரே நேரத்தில் 30 ஆயிரம் பேர் வழிபாடு செய்வதற்கு ஏற்ற வகையில் இந்த மசூதி கட்டப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் மிகப்பெரிய மசூதியாக டில்லியில் உள்ள ஜும்மா மசூதி விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# தமிழகம் வழியாக இலங்கைக்கான மின்சார விநியோகம் ரத்தானது

தமிழகம் வழியாக இலங்கைக்கு கடல் மார்க்கமாக வழங்கப்பட இருந்த மின் விநியோகப்பணி சட்டசபை தேர்தலுடன் ஆட்சி மாறியவுடன் ரத்து செய்யப்பட்டு, ஆந்திரா வழியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பவர் கிரிட் கொர்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனம், பாக் ஜலசந்தி கடல் பகுதியில் மின் விநியோகத்துக்காக மண் ஆய்வுப் [illegible] 16.12.2010 இல் [illegible] பகுதியில் ஆரம்பித்தது.

ஆய்வு முடிந்த பின்னர், திட்ட மதிப்பீடு ஒதுக்கப்பட்ட உடன் இந்தியாவிலிருந்து தமிழகம் வழியாக இலங்கைக்கு மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட இருந்தது. இந்தநிலையில், சட்டசபைத் தேர்தலுக்குப் பின் ஆட்சி மாறிய பின் தற்போது இலங் கைக்கு மின் விநியோகத் திட்டம் நிறுத்தப்பட்டு, தற்போது, ஆந்திரா மாநிலம் கடல் வழியாக இலங்கைக்கு மின்விநியோகம் செய்ய உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

# ராஜிவ்காந்தி கொலைவழக்கு தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

ராஜிவ்காந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 3 பேரின் கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரிப்புச் செய்த விவகாரத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம் என்று பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் கருணை மனுக்களை ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் நிராகரிப்புச் செய்துவிட்டதாகச் தகவல்கள் வெளியாகியுள்ளன.

21 ஆண்டுகள் சிறையில் வாடிய பின்பும் ஜனாதிபதியிடம் கருணை மனுத் தாக்கல் செய்து 11 ஆண்டுகளுக்குப் பின்னரும் இந்த மனுக்கள் நிராகரிப்புச் செய்யப்பட்டிருப்பது இயற்கை நீதிக்குப் புறம்பானதாகும்.

1992ஆம் ஆண்டு சிறப்பு நீதிமன்றம் 26 பேருக்கும் ஒட்டுமொத்தமாக மரண தண்டனை விதித்தபோது அதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்காடி 18 பேர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்படவும் மூவருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படவும், இந்தக்குழு வழி செய்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வருக்காக அப்போதைய ஆளுநரிடம் கருணை மனு தாக்கல் செய்து அவர் அதை நிராகரிப்புச் செய்தவுடன் அது செல்லாது என உயர்நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றிபெற்றது இந்தக்குழுவே ஆகும்.

அதைப் போல இப்போதும் மூவரின் கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரிப்புச் செய்திருப்பதை எதிர்த்து சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்படி குழு மேற்கொள்ளும். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 ஓகஸ்ட் 2011 சனிக்கிழமை

# சிறுமிகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய நான்கு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது

## சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தகவல்

கொழும்பு, ஓக.13

சிறுமிகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

1929 என்ற தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாக, அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய, இராஜகிரிய, மற்றும் கொடக்கவளை ஆகிய பகுதிகளிலேயே இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெற்றோர் சிறுவர்கள் மீது போதிய கவனம் செலுத்தாமையே அவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான காரணம் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# யானைகள் கணக்கெடுப்புக்குச் சென்ற அதிகாரிகள் மக்களால் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிப்பு

அம்பாறை, ஓக.13

அம்பாறை பகுதியில் யானைகள் கணக்கெடுப்புக்குச் சென்றிருந்த போது மக்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு அதிகாரிகள் பொலிஸாரின் தலையீட்டைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். யானைகள் கணக்கெடுப்புக்காக நேற்றுமுன்தினம் மாலை அம்பாறை மாணிக்கமடுவனப் பகுதிக்கு சிவில் உடையில் சென்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பிரதேச மக்களால் தடுத்து வைக்கப்பட்டார்.

இந்நிலையில் அம்பாறை தமண இறக்காமம் பகுதியில் யானைகள் கணக்கெடுப்புக்காகச் சென்ற அதிகாரியொருவரும் பொது மக்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த இருவருமே விடுவிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திடம் வினவிய போது அதனை உறுதிப்படுத்தியுள்ளார். (ற)


### சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஓக.13

ஊர்காவற்றுறை பரலோகமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ந-135)

## நன்றி நவிலல்



சங்கத்தானை கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு.கந்தையா வேலாயுதபிள்ளை அவர்களுக்கு கடந்த 06.08.2011 இல் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற பிரிவுபசார விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் அவர்களுக்கும் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் திரு. க.கார்த்திகேசு அவர்களுக்கும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்ட அனைத்துக் கிராம அலுவலர்களுக்கும் விழாவைச் சிறப்பித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சங்கத்தானை பிரிவு மக்கள்

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 881 திகதி: 11.08.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| R | 08 | 22 | 28 | 54 | 21 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 13,685,183.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 06 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 334 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 16401 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 229471 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 34101 |

வெற்றியீட்டிய பார்கோர்ட் இலக்கங்கள்
08810193432 08810788359
08810511703 08810147930

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 9,179,540.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 14,058,794.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk

## இலங்கை வங்கி

### கட்டிடங்கள் தேவை

வடமாகாணத்தில் கீழ்காணும் இடங்களில் வங்கிக் கிளைகள் / விரிவாக்கற் காரியாலயங்களுக்காக ஏற்ற கட்டிடங்கள் இலங்கை வங்கிக்கு தேவைப்படுகின்றது.

| இடம் | தேவையான தளப்பரப்பு |
|---|---|
| திருநெல்வேலி | 2,000 - 2,500 சதுர அடி |
| மானிப்பாய் | 2,500 - 3,000 சதுர அடி |
| சாவகச்சேரி | 2,000 - 2,500 சதுர அடி |
| சுன்னாகம் | 2,500 - 3,000 சதுர அடி |
| முருங்கன் | 750 - 1,000 சதுர அடி |
| செட்டிகுளம் | 750 - 1,000 சதுர அடி |
| நெடுங்கேணி | 750 - 1,000 சதுர அடி |
| வவுனியா கடை வீதி | 750 - 1,000 சதுர அடி |
| ஒட்டுசுட்டான் | 750 - 1,000 சதுர அடி |
| பரந்தன் | 750 - 1,000 சதுர அடி |
| முல்லைத்தீவு | 2,000 - 2,500 சதுர அடி |
| சங்கானை | 750 - 1,000 சதுர அடி |
| காரைநகர் | 1,000 - 1,500 சதுர அடி |
| கோப்பாய் | 1,000 - 1,500 சதுர அடி |
| மடு | 750 - 1,000 சதுர அடி |
| ஆண்டான் குளம் | 750 - 1,000 சதுர அடி |

உத்தேச கட்டிடம் கீழே குறிப்பிடப்பட்ட வசதிகளை உடையதாக இருத்தல் வேண்டும்.

- ஜெனரேட்டர் அறை 09 அடி - 10 அடிக்கு இடைப்பட்டது.
- நீர் வழங்கல் மற்றும் சேமிப்பு தாங்கி வசதி
- 03 கட்ட மின்சாரம்
- மாபிள் தரை
- கழிவறை மற்றும் குளியலறை வசதிகள்
- வாகன தரிப்பிட வசதி
- அவசரகால வெளியேற்றத்துக்கான வெளிக்கதவு
- தீவிபத்து காப்புறுதி வசதி

ஆர்வமுள்ளோர் கட்டிட வரைப்பட பிரதிகள் மற்றும் விதிக்கும் நிபந்தனைகள் (ஏதாவது இருப்பின்) ஆகியன உட்பட அனைத்து விபரங்களையும் இந்த விளம்பரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
இலங்கை வங்கி
வடமாகாண காரியாலயம்,
இல.476, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# 1st Year Remembrance of

## Late Mrs. Thangaratnam Kandasamy

*(Beloved wife of late Mr.A.K.Kandasamy-former Principal and Former Registrar of Births, Marriages and Deaths, Uduvil Division)*





**Attained Eternal Bliss at the feet of God on 13.08.2010**

August comes with deep regret and gloom. The day, the Month, I will never forget. The voice I loved to hear calling "Thambi Thambi" is still ringing in my ears. Ever since you closed your eyes, mine never ceased crying. God had endowed you with a mystical awareness- a power which only sages and mystics possess to see into the future and sense the unfolding events. A life of blemishless virtue and unwavering piety had given you that power to sense your approaching death even before it occurred. A life filled with meaning ended on this very day in a peaceful death leaving me in a vale of tears and prolonged grief. I pray for your soul's repose in heavenly bliss.

*Theiveekam*
*Uduvil West,*
*Chunnakam.*

*Fondly remembered by*
*Your grieving son K.Sivaji - Former Principal,*
*(Skandavarodaya College)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயக ஆட்சிக்கு வழியேற்படுத்தப்படும்

## சிரியா அதிபர் உறுதி

டமாஸ்கஸ், ஓக.13

இந்த ஆண்டு இறுதிக்குள் சிரியா நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடத்தப்படும் என்றும். அதன்மூலம் பன்முகக் கட்சி ஜனநாயக ஆட்சிக்கு வழியேற்படுத்தப்படும் என்றும் அந்த நாட்டு அதிபர் பஷரல்-ஆசாத் உறுதியளித்தார்.

இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுக்குழுவினர் சிரியாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளனர்.

சிரியாவில் மேற் கொள்ள வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து இக் குழுவினர் ஆராய்ந்து கருத்துத் தெரிவித்துள்ளனர். இவர்களிடம் பேசுகையில் அதிபர் பஷார் அல் ஆசாத் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

முன்னதாக, தூதுக் குழுவினரிடம் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்டனர். இதனால் கடும் சர்ச்சை எழுந்தது. இந்தச் சம்பவத்துக்கு தான் வருந்துவதாகக் கூறிய அதிபர், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று உறுதி அளித்தார்.

இந்தியக் குழுவில் கூடுதல் செயலர் திலீப் சின்ஹா, தென்னாபிரிக்காவின் வெளியுறவு அமைச்சர் இப்ரஹிம், மத்திய கிழக்கு நாடுகளுக்கான பிரேஸில் துணைச் செயலர் பாலோ கோர்டிரோ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சிரியாவில் இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நியாயமாகவும், வெளிப்படையாகவும் நடத்தப்படும் என்று சிரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாலித் அல்-மெலாம், தூதுக் குழுவிடம் கூறினார்.

நாட்டின் பன்முகக் கட்சி ஜனநாயக ஆட்சிக்கு வழியேற்படுத்தப்படும் என்று உறுதியளித்த அதிபர் ஆசாத், மக்கள் ஒத்துழைப்புடன் அரசியல் சாசனத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்தார்.

அரசியல் சீர்திருத்தம் அனைத்தும் மக்களிடம் கலந்து பேசி மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்ட அதிபர், இப்பணிகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் நிறைவடையும் என்றார்.

## நாடு திரும்பிய சர்கோசி

ஐரோப்பிய நாடுகள் நிதிப் பிரச்சனையில் தள்ளாடுகின்றன. சிறிய கிரீஸ் முதல் பிரிட்டன் வரை நிதி தட்டுப்பாட்டில் தவிக்கின்றன. பிரான்ஸின் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்ற நம்பிக்கை இருந்தது. இந்த நிலையில் புதன் கிழமை நிதி தடுமாற்றம் குறித்த பிரச்சினை பாரிசில் எட்டிப் பார்த்தது.

இந்த நிலையில் பிரான்ஸ் ஜனா திபதி நிகோலஸ் சர்கோசி தனது சுற்றுலாப் பயணத்தைப் பாதியில் கைவிட்டு அவசரமாகத் திரும்பி அமைச்சர்களுடன்முக்கிய ஆலோசனை நடத்தினார்.

பிரான்ஸ் நிதிப் பிரச்சினை குறித்து கவலைப்பட வேண்டாம் என சர்கோசி தனது கபினட்டில் உறுதியளித்தார்.

# இந்திய நடனப் பெண் விபசார வழக்கில் கைது

துபாய், ஓக. 13

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இந்தியப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். 23 வயதான இவர் நடனம் ஆடுவதற்காக வந்திருந்தார்.

இவர் பெயர் வை.ஆர். என்று மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு துபாயிலுள்ள ஒரு பங்களாவில் இவர் அடைத்து வைத்து விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டார். இங்கு இவருடன் 8 பெண்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை 39 வயதான இந்திய டிஸ்கோ டான்ஸ் சூப்பர் வைசர் என்பவர் அடைத்து வைத்து விபசாரத்தில் ஈடுபடுத்தினார். நடனப்பெண் அங்கிருந்தபடி பொலிஸுக்குத் தொலைபேசி மூலம் தங்களை மீட்கும்படி கேட்டுக்கொண்டார்.

பொலிஸார் அங்கு சென்று அவரையும் மற்ற 8 பெண்களையும் மீட்டு கைதுசெய்தனர். இவர்கள் மீது நீதிமன்றத்தில் விபசார வழக்குத் தொடரப்பட்டது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வை.ஆர். முகத்தை மூடிக்கொண்டு அழுதார். தான் விபசாரப்பெண் இல்லை என்றும் தான்தான் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தார் என்றும் தான் விபசாரப் பெண்ணாக இருந்தால் ஏன் பொலிஸுக்குத் தகவல் கொடுக்கப்போகிறேன் என்றும் அவர் கேட்டார்.

அவர் மீதான வழக்கில் தீர்ப்பு எதிர்வரும் 16ஆம் திகதி அறிவிக்கப்படவிருக்கிறது.



இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள சைகி மாளிகையில், பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி தலைமையிலான அமைச்சர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

# சிரியாவின் பிரதான வங்கியின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

வாஷிங்டன்,ஓக.13

சிரியாவின் பிரதான சிரியா வங்கி, அதிபர் அல் அசாத், வடகொரியாவிடமிருந்து மரபுசாரா ஆயுதங்களை வாங்குவதற்கு நிதியுதவி செய்ததால், அந்த வங்கியின் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது.

சிரியாவில், அதிபர் பஷார் அல் அசாத்துக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டங்கள், அரசு மூலம் அடக்கப்பட்டு வருகின்றன. அல் அசாத்தின் 41 ஆண்டு கால குடும்ப ஆட்சியை எதிர்த்து, கடந்த மார்ச் மாதம் முதல் போராட்டம் நடத்திய 1,400 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிரியா அரசின் இந்த நடவடிக்கையை ஐ.நா., பாதுகாப்பு சபை கண்டித்துள்ள துடன் பொருளாதார தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிரியாவின் பிரதான வங்கியான சிரியா வங்கி, அதிபர் அல் அசாத், வட கொரியாவிடமிருந்து மரபுசாரா ஆயுதங்களை வாங்குவதற்கு நிதியுதவி செய்ததால், அந்த வங்கியின் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித் துள்ளது. அத்துடன் சிரியாவின் தொலைபேசி நிறுவனமான சிரியா டெல் மீதும் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

# வடகொரியா- தென் கொரியா பரஸ்பர குண்டு வீச்சு

சியோல்,ஓக.13

வடகொரியா மற்றும் தென் கொரியா நாடுகள் நேற்று முன்தினம் பதிலுக்குப் பதில் குண்டு வீசியதால், அக்தப் பிராந்தியத்தில் பதற்றம் நிலவியது. தென் கொரிய எல்லைக்குள் நேற்று முன்தினம், வடகொரியா மூன்று குண்டுகளை வீசியது. இதனையடுத்து தென் கொரியாவும் மூன்று குண்டுகளை, வட கொரிய கடற்பகுதிக்குள் வீசியது. இச் சம்பவத்தால், கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவியது. வட கொரியா எதற்காக குண்டுகளை வீசி பரபரப்பைக் கிளப் பியது எனத் தெரியவில்லை. கடந்தாண்டு நவம்பரில் இதேபோல், வடகொரியா வீசிய குண்டுகளால் தான், இரு நாடுகளுக்கும் இடையில் கொந்தளிப்பு உருவானது.

# லண்டனில் கலவரம் ஓய்ந்தது; இனிமேல் அமைதிதான்

## பிரதமர் கமரூன் தெரிவிப்பு

லண்டன்,ஓக.13

லண்டனில் இனி கலவரம் ஏற்படாமல் தடுக்கப்படும். முழு அமைதி பாதுகாக்கப்படும் என்று இங்கிலாந்து மக்களுக்கு அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூன் நேற்று முன்தினம் மீண்டும் உறுதி அளித்துள்ளார். லண்டனில் கடந்த வாரம் நடந்த போராட்டம் ஒன்றில் பொலிஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மார்க் டக்கன் என்ற இளைஞர் பலியானார். இதையடுத்து டாட்டன்ஹாம் நகரில் கடந்த சனியன்று தொடங்கிய கலவரம், வடக்கு லண்டன் உட்பட பல்வேறு நகரங்களுக்கு பரவியது.இதையடுத்து அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டிய கமரூன் இதை திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இப்போது கலவரம் கட்டுக்குள் வந்துள்ளது. வீதிகளை சுத்தப்படுத்தும் பணி நடக்கிறது. பொலிஸார் தீவிரமாக கண்காணிக்கின்றனர். இனி இதுபோன்ற ஒரு நிலை ஏற்படாது. வன்முறையை தடுக்க அரசு திறமையான வழிகளை நடைமுறைப்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம்களுக்கான கண்ணியத்தை காப்பாற்றுங்கள்: தலிபான்களுக்கு ஹமீத் கர்சாய் வேண்டுகோள்

ஆப்கனைச் சேர்ந்த முஸ்லிம்கள் பெருமையோடு அணியும் டர்பன் எனப்படும் தலைக் குல்லாய்களுக்கு உரிய கண்ணியத்தைக் குலைத்து விடாதீர்கள் எனத் தலிபான்களுக்கு அதிபர் ஹமீத் கர்சாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆள்களை சோதனையிடும் பாதுகாப்புப் படையினர் இதுவரை ஆடவர்களின் தலைக் குல்லாய்களையும் மகளிரின் பர்கா என்று அழைக்கப்படும் பர்தாவையும் அகற்றுமாறு கோருவதில்லை.

ஆனால் கடந்த மாதத்தில் நடந்த இரண்டு பெரிய தாக்குதல்களை நடத்திய மனித வெடிகுண்டுகள் 'டர்பன்' என்று அழைக்கப்படும் தலைக் குல்லாய்க்குள் தான் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை மறைத்துக் கொண்டுவந்து வெடிக்க வைத்து பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். சமீபகாலமாக ஏராளமான பெண்களைப் பெண் காவலர்கள் மூலமாக சோதனை செய்த போதுதான் அவர்கள் பெண்கள் அல்ல என்பதும் பர்தாவுக்குள் மறைந்துவந்த தலிபான்கள் என் பதும் அவர்கள் உடலில் வெடி குண்டுகளைக் கட்டியிருந்ததும் தெரியவந்தது.

தலிபான்களின் கட்டளைகளுக்கு மதப் பூச்சு பூசப்படுவதால் ஆப்கானிஸ்தான் ராணுவம், பொலிஸ் ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள்கூட அவற்றுக்குக் கட்டுப்படுகின்றனர்.

பொது இடங்களில் முஸ்லிம் மகளிர் பர்தா அணியாமல் வரக் கூடாது, அவர்களுடைய முகத்திரையை மற்றொரு ஆண் விலக்கிப் பார்க்கக்கூடாது என்பதால் முஸ்லிம் பெண்களைப் போல பர்தா அணியும் தலிபான்களைப் பிடிப்பதும் சோதிப்பதும் இடராக இருக்கிறது.

அதற்காக போகிற எல்லா பெண்களையும் சோதனைபோடுவதும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்திவிடும் என்று கர்சாய் உணர்ந்திருக்கிறார்.

தலிபான் தீவிரவாதிகள் புனிதமான இந்த முஸ்லிம் மாதத்தில்கூட ஆப்கானிஸ்தான் ராணுவத்தையும் நேட்டோ படைகளையும் குறிவைத்து தாக்கி வருகின்றனர்.

எனவே ஹமீத் கர்சாய் தன்னுடைய உதவியாளர் ஹமீத் எல்மி மூலம் உலேமா ஷூரா என்கிற உலமாக்களின் பேரவைக்கு இந்த வேண்டு கோளை விடுத்திருக்கிறார்.

ஹமீத் கர்சாயின் சகோதரர் அகமது வாலி கர்சாய் அவருடைய உதவியாளராலேயே படுகொலை செய்யப்பட்டார். இதற்காக துக்கம் விசாரிக்க வந்தவர்களுடன் தலிபான் தீவிரவாதி ஒருவரும் வந்துவிட்டார். அவர் குல்லாயில் மறைத்து வைத்திருந்த வெடி குண்டை திடீரென வெடிக்கச் செய்தார். அதில் ஏராளமானோர் இறந்தனர், படுகாயம் அடைந்தனர். அதே போன்ற சம்பவம் காந்தஹார் நகர மேயர் இறந்த போதும் நடந்தது. அப்போதும் துக்கம் கேட்க வந்தவர்கள் தலையிலிருந்த குல்லாயில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துதான் கொன்றுள்ளனர்.

பெண்கள் மீது கட்டுப்பாடு விதிக்கும் தலிபான்கள் அவர்களை மனித வெடிகுண்டுகளாகப் பயன்படுத்தத் தவறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னொளி வி.கவின் கரபந்தாட்டம்; ஆவரங்கால் மத்தி வி.க. சம்பியன்

வலி வடக்கு, ஓக.13

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கரப் பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் பலத்த போராட்டத்தின் பின்னர் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளை யாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி இறுதிவரை எந்த அணி வெற்றி பெறும் என்று கூற முடியாத அளவுக்கு இரு அணிகளும் கடுமையாகவும் உற்சாகத்துடனும் விளையாடியமை பார்வையாளர்களை பரவசப்படுத்துவதாக அமைந்திருந்தது.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளை யாட்டுக்கழகம் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

முதல் சுற்றை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற போதிலும் அடுத்த இரண்டு சுற்றுக் களையும் ஆவரங்கால் இந்து விளை யாட்டுக்கழகம் 25:21 என்ற அடிப் படையில் வெற்றி பெற்று முன்னிலை யில் காணப்பட்டது.

நான்காவது சுற்றையும் கூட இந்த விளையாட்டுக்கழகம் வெற்றி பெறும் என்ற நிலையில் 16:6 புள்ளிகளாகக் காணப்பட்ட நிலையில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக வீரர்கள் புத்துணர்வுடன் விளையாடி போட்டி யில் மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.

நான்காவது சுற்றை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் 27:25 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று போட்டியைச் சமநிலைப்படுத் திக்கொண்டது. வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் வகையில் ஐந்தாவது சுற்றில் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது.

இரு அணிகளும் கடும் பிரயத்தனம் எடுத்துக்கொண்டு விளையாடிய போதி லும் ஆட்ட நிறைவில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 15:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது.

(ம-86-288)

## கிரிக்கெட் சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் இன்று சனிக் கிழமை மாலை 5 மணிக்கு இல.130 நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக் கெட் அக்கடமியில் நடைபெறவுள்ளது.

முக்கியமான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அங்கத்தவர் களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (த)

## இளையோர் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.13

கிளிநொச்சி மாவட்ட தேசிய இளை ஞர் சேவைகள் மன்றத்தால் இளைஞர் கழகங்களுக்கு இடையே மெய்வன்மை போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ம-23)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந் துக்கல்லூரி சம்பியனானது. இதில் பங்குபற்றிய அணி வீரர்கள் பாட சாலை அதிபர், பயிற்றுவிப்பாளர் ஆகியோருடன். (ம-313)

## ருவென்ரி -20 கிரிக்கெட் சுற்று யாழ்.இந்துவில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.13

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் பி.எஸ். குமாரசாமி ஞாப கார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ருவென்ரி -20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்ப மாகிறது.

இன்று காலை 8.30 மணி பற்றீ சீயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணி ஸ்ரான்லி விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து கழுகு கள் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. பிற்பகல் 2 மணி; நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)



மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவுகளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப்போட் டிக்குத் தெரிவாகிய மானிப்பாய் மகளிர் கல்லூரி உடற்பயிற்சி அணியினர் அதி பர், பொறுப்பாசிரியர்களுடன். (ம-23)


## மாவட்ட மட்ட அணிகளிடையே ஹொக்கிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ். பல்கலைக்கழக விளை யாட்டு அவை 11 வீரர்களைக் கொண்ட ஆண்கள் அணிகளுக்கிடையே யாழ். மாவட்ட மட்டத்தில் ஹொக்கிச் சுற்றுப் போட்டியை இந்த மாத இறுதிப் பகுதியில் நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டக் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப் பங்களை யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி அலகில் பெற்று அதனை 17 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்ன தாக பூரணப்படுத்தி சமர்ப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

மேற்படி போட்டிக்கான அணி ஒழுங்குத்தெரிவு 17 ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி அலகில் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)



ஜேர்மன் நாட்டின் உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர்களான பிறம்ஸ் பெக்கன் வபர் மற்றும் கொல்கர் அபெர்மான் ஆகியோரால் வட மாகாணத்துக்கென வருடாந்தம் வழங்கப்படும் உதைபந்தாட்ட உபகரணம் வழங்குதலும் மற்றும் பயிற்சி முகாமும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் கலந்து கொண்டார். இந்தப் பயிற்சி முகாமில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை வீரர்கள் ஆறுபேர் உட்பட யாழ் மாவட்டப் பாடசாலைகளின் வீரர்களுமாக மொத்தம் 30 பேர் கலந்து கொண்டனர். பயிற்சி நிறைவில் வீரர்களுக்கு காலணிகள் மற்றும் பந்துகளும் வழங்கப்பட்டன. (ம-86)

## முன்பள்ளி விளையாட்டு விழா

காரைநகர், ஓக.13

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் வருடாந்த விளை யாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு பாட சாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காரை கிட்ஸ் பார்க் அமைப்பின் தலைவரும் ஆசிரியருமான க.நேர்த்திரா நந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செய லக உதவிப் பிரதேச செயலர் அ.சோதி நாதனும் கலந்து கொள்வார். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இந்தியா தவிப்புடன் போராட்டம்

## - அடித்தார் இரட்டைச் சதம் குக் -



பிறிமின்ஹாம், ஒக. 13

அலிஸ்ரர் குக் அபாரமாக ஆடி 294 ஓட்டங்களைக் குவிக்க இங்கிலாந்து அணி, இந்திய அணியை விட 486 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 7 விக்கெட்டுக்களை இழந்து 710 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸ்ஸை தொடங்கிய இந்திய அணி 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது. கம்பீர் 14 ஓட்டங்களுடனும் டிராவிட் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. முன்னதாக நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பிறிமின்ஹாமில் 10 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

அதன் படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணி சார்பில் அதிக பட்சமாக டோனி 77 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் புரோட், பிறஸ்னன் தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கியது இங்கிலாந்து அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அலெஸ்ரர் குக் மற்றும் அணித்தலைவர் ஸ்ரோரஸ் இருவரும் களமிறங்கினர். இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி முதலாவது விக்கெட்டுக்காக 186 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். அமித் மிஷ்ராவின் பந்து வீச்சில் அணித்தலைவர் ஸ்ரோரஸ் 13 பவுண்டரிகள் அடங்கலாக 87 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய குக் தனது 19 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். பெல் 34 ஓட்டங்களுடன் பிரவீன் குமாரின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார்.

பெல்லை தொடர்ந்து களமிறங்கிய பீற்றர்ஸன் அதிரடியாகக் ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். குக் 150 ஓட்டங்களைப் புர்த்தி செய்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக பீற்றர்ஸன் - குக் இருவரும் 122 ஓட்டங்களைப் பகிரந்து கொண்டனர். பீற்றர்ஸன் 78 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 63 ஓட்டங்களுடன் பிரவீனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன் பின்னர் களமிறங்கிய மோர்கன் - குக் இருவரும் நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவு வரை 4 ஆவது விக்கெட்டுக்காக 82 ஓட்டங்களை ஆட்ட மிழக்காமல் சிறப்பாக பகிர்ந்து கொண்டனர். மோர்கன் 44 ஓட்டங்களையும், குக் 182 ஓட்டங்களையும் பெற்றுக் களத்தில் இருந்தனர். நேற்றைய ஆட்டத்தை தொடங்கிய இங்கிலாந்து அணி இந்திய பந்து வீச்சாளர்களுக்கு தொடர்ந்து தலையிடி கொடுத்தது.

ஆட்டம் ஆரம்பமாகிய சிறிது நேரத்திலேயே மோர்கன் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறு முனையில் குக் தனது இரட்டைச் சதத்தை பூர்த்தி செய்தார். வேகமாக ஓட்டங்களைக் குவித்த மோர்கன் டெஸ்ட் அரங்கில் இரண்டாவது சதத்தை பூர்த்தி செய்தார். 4 ஆவது விக்கெட்டுக்காக 212 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்ற போது மோர்கன் 104 ஓட்டங்களுடன் ரெய்னாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து நுழைந்த போப்ரா மற்றும் பிரியர் இருவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் மிஷ்ராவின் பந்து வீச்சில் வெளியேறினார். பின்னர் குக்குடன் ஜோடி சேர்ந்த பிறஸ்னன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய குக் 250 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் பிறஸ்னன் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் 7 ஆவது விக்கெட்டுக்காக 97 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற போது குக் ஆட்டமிழந்தார். 545 பந்துகளைச் சந்தித்து 33 பவுண்டரிகளுடன் 294 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இசாந்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி குக்கின் ஆட்டமிழப்பை தொடர்ந்து 710 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் தனது ஆட்டத்தை இடை நிறுத்தியது.


பந்து வீச்சில் அமித் மிஷ்ரா 3 விக்கெட்டுக்களையும், பிரவீன் 2 விக்கெட்டுக்களையும், இசாந் சர்மா மற்றும் ரெய்னா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

486 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது இங்கிலாந்து. முதலிரண்டு டெஸ்டிலும் விளையாடாமல் இந்த ஆட்டத்துக்கு அழைக்கப்பட்ட சேவாக் முதல் இன்னிங்ஸில் எவ்வாறு ஓட்டமெதனையும் பெறாமல் முதல் பந்தில் வெளியேறினாரோ அதே போன்று இரண்டாவது இன்னிங்ஸிலும் முதலாவது பந்திலேயே வெளியேறினார். சேவாக்கின் விக்கெட்டை அன்டர்ஸன் கைப்பற்றினார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது டிராவிட் 18 ஓட்டங்களுடனும், கம்பீர் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும். இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இந்திய அணி இன்னும் 451 ஓட்டங்களைப் பெற வேண்டும். கைவசம் 9 விக்கெட்டுக்களே இந்திய அணியிடம் உண்டு.

(15)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1944 : 10 : 16

மறைவு 2011 : 07 : 14



### அமரர் விசுவலிங்கம் கனகராசா

[முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்-நெடுந்தீவு]

ஆலமரம் ஒன்று அடியோடு சாய்ந்ததுவோ
தீபம் அணைந்ததுவோ திசைகள் இருண்டதுவோ
கண் மூடித் திறக்கு முன்பே காலன் உன்னைக் கவர்ந்தது ஏன்?
கனிவான உங்கள் பேச்சும் கண் கொள்ளாப் புன்னகையும்,
உறுதியான புத்திமதிகளும் இனியெப்போ கேட்போம்-நாம்
யாவும் முடிந்ததுவோ எமக்கு யாருமற்றுப் போனதுவோ?
எமக்காக சிரித்து எமக்காக அழுது எமக்காய் வாழ்ந்து
உறவுகளை அணைத்து, உத்தமனாய் வாழ்ந்து
தெய்வத்திடம் சங்கமமான எம் அன்புத் தந்தையே!
எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவு நீங்காது
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

32/11, ஒட்டுமடம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [6816]

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## காணி விற்பனைக்கு

தாவடி பத்திரகாளி அம்மன் கோயில் முன்பாக 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு-0779015896

## தவறிவிட்டது

750ஆம் இலக்க பாதையில் கறுப்பு நிற Pendrive(2GB) மோட்டார் சைக்கிள் பயணத்தின்போது தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவித்து Pendrive இனை கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே-0776648750, 0785020535

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள STELLAR GSL கையுண்டா 14 சிறி கார் விற்பனைக்குண்டு

தொடர்பு-0772964946

## விற்பனைக்குண்டு

எம்மிடம் கோழி இறைச்சி, முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் தரமான கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
517, ஸ்ரான்லி பாம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே-0776144030

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 07 : 08 : 1958

மறைவு 14 : 07 : 2011



### திருமதி இரத்தினசிங்கம் சித்திரரூபா

கடந்த 14.07.2011 வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி திருமதி இரத்தினசிங்கம் சித்திரரூபா அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியையின் போது அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்து வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையங்களை வைத்தோருக்கும் மற்றும் எம்முடன் துயரத்தில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதுடன்-

இன்று [13.08.2011] சனிக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.28, அத்தியடி,
புதுவீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கலை வகுப்புக்கள் ஆரம்பம்- 25.09.2011

### FLOWER GARDEN

- ★ சிற்பங்கள் தயாரித்தல்
- ★ செயற்கை பூக்கள் தயாரித்தல்
- ★ சுவர் அலங்கார பொருள்கள் தயாரித்தல்
- ★ GOLD பிறேம் தயாரித்தல்

முழுமையான கற்கை நெறிக்கு 7,500 ரூபா, செயற்கை பூக்கள் தயாரித்தல் 4,500 ரூபா திருவிழாக் காலங்களிலும் பணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தில் கண்கவர் பூ வகைகள், பூக்கூடைகள், சுவர் அலங்காரப் பொருள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

114, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் சிவன் கோயில் முன்பாக) T.P-0770229729

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
10.08.1928



உதிர்வு
21.07.2005

### திருமதி முருகேசு மீனாட்சி (சரஸ்)

கரம்பன் மேற்கு

ஆனதோ ஆண்டுகள் ஆறு
அம்மா என்ற உறவு மடிந்து
அன்று முதல் அலைகின்றோம்
அன்பெனும் ஆலயம் தேடி
ஆறிவிட்டதம்மா உன் உடலின் ஈரம்
ஆறவில்லையம்மா எம் இதயத்தின் பாரம்
அன்பு தவழும் உங்கள் முகம்
அதை நினைக்கையில் துடிக்குது எங்கள் மனம்
ஆண்டவன் அடி சேரும் வரை
அழிவின்றி நடந்திருவோம்
அன்னை நீ காட்டிய வழியில்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

134, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

பற்குணராஜா அம்பிகாதேவி
(மகள்,குடும்பத்தினர்)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

"பிறவி ஒன்றிருப்பின்
நாம் உங்களுடன்
பிறக்க
உறவுகள் கூடிப்
பிரார்த்திக்கின்றோம்"



அமரர்

### திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

[illegible] வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

-குடும்பத்தினர்-

## மரண அறிவித்தல்

### திருமதி திருநாவுக்கரசு பொன்னம்மா
(பூரணம்)



வரணி, குருக்கன் குடியிருப்பு, கரம்பைக் குறிச்சியை பிறப்பிடமாகவும், கரவெட்டி மத்தி, பெரிய தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு பொன்னம்மா கடந்த 10.08.2011 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருநாவுக்கரசு (திருநாமம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சட்டநாதர்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், செந்தூரன்,சர்மிளா(ஜேர்மனி), சரண்யா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், சிறிதரன்(ஜேர்மனி), பிரகலாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், செவ்வந்திநாதர், யாழைப்பழித்த மொழியம்மை(யோகம்), கருணேஸ்வரி(கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சங்கீத், அபிரா, அனுராஜ், பிரணவன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, கரவெட்டி. தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் தந்த எமது மொழியின் பெயரான தமிழ் தமிழர்களை உயர்த்தியது

12.08.2011 உதயனின் (IV) விளம்பரப் பக்கத்தில் பிரசுரமான மேற்படி தலைப்பில் வெளியான கட்டுரையில் தருமலிங்கம் பூபாலசிங்கம் எனும் பெயரை **தருமலிங்கம் சபாலிங்கம்** எனத் திருத்தி வாசிக்கவும்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### கணபதிப்பிள்ளை தம்பையா

தாயின் மடியில்
08.03.1921
இறைவன் அடியில்
05.08.2009

திதி - பூரணை

ஆண்டு இரண்டு மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
நல்லூர் மஞ்சம் அன்று மறைந்தாய் ஐயா
நல்லூரான் பிரசங்கத்தில் துணையா நின்று
பல பணிகள் புரிந்து
இறைவனடி சேர்ந்தாய் - ஐயா
இன்று உங்கள் ஆத்ம சாந்திக்காக
இவ்வஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

122/15, ஆனைப்பந்தி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா செல்வராசர்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - செல்வராசர் நேற்று(12.08.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா (முன்னாள் இருதயக் கல்லூரி உப அதிபர்) - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் திலகவதி (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் திருமதி இராஜவதி சிவயோகசுந்தரம் (லண்டன்), திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரன் (கனடா), செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடராஜாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசிரியர், வேலாயுதம் மகாவித்தியாலயம்), இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தும்பளை வீதி,**
**பருத்தித்துறை**

தகவல்:
**மனைவி.**

### செசிலியூஸ் அல்பிறேட் (துரை)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செசிலியூஸ் அல்பிறேட் நேற்று(12.08.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் லூர்த்து ஜேட்றூட் ராணியின் அன்புக் கணவரும் நிமலராணி, பப்ரீஸியா, செபஸ்ரியன்ராஜ், காலஞ் சென்றவர்களான றாஜினி(சுகி), யோகராணி (ஜெயவதி) ஆகியோரின் அன்புத் தந்தையும் எமறன் (ஜெறோம்), யாழினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(13.08.2011) சனிக்கிழமை புனிததோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கானல் வீதி,**
**மாதகல்**

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வன் நடராஜா கஜமுகன் (கஜன்)

(A/L 2011 **மாணவன்-கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)**



பலாலியை சொந்த இடமாகவும் சாமியன், அரசடி, நெல்லியடி கிழக்கை வதிவிடமாகக் கொண்டவருமான செல்வன் நடராஜா கஜமுகன் (கஜன்) நேற்று (12.08.2011) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கனகர் நடராஜா - நடராஜா இரத்தினேஸ்வரி (ரஞ்சனி) தம்பதியரின் அன்பு மகனும் அம்பிகை (உமா) - பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணசபை), கவிதா (உதயா), ரேணுகா (உசி), துர்க்காதிலீபன் (உசாந்தன் -சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெல்லியடி கிழக்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாமியன்,**
**அரசடி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி**

தகவல்:
**க.நடராஜா (தந்தை).**

## நாட்டைக் கலக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மவ்ஜூம் என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

'கிறீஸ் பூதம்' அச்சம் காரணமாக, யானைக் கணக்கெடுப்புக்குச் சென்ற படையினருக்கும் மக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தகறாரே இன்றைய அமைதியின்மைக்குக் காரணம் என்று பொலிஸார் கூறினர்.

'கிறீஸ் பூத' சந்தேகத்தில் நேற்று முன்தினம் இரவு பொதுமக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்ட மூவரைப் பார்வையிடச் சென்றவர்கள் மீது படையினர் தாக்கினர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதனைக் கண்டித்து நேற்றுக் காலை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலதிக பொலிஸாரும் அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் களேபரத்தில் துப்பாக்கிக் குண்டு தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

ஏற்கனவே அப்புத்தளையில் 'கிறிஸ் பூத' அச்சம் காரணமாக தமிழ் இளைஞர்கள் இருவர் மக்களால் அடித்துக் கொல்லப்பட்டிருந்தனர்.

பொத்துவில் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அங்கு நேற்றிரவு முதல் இன்று காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

### சம்மாந்துறை சம்பவம்

கிறீஸ் பூத அச்சம் காரணமாக நேற்று முன்தினம் இரவு சம்மாந்துறையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கோரக்கோயில் பகுதியில் இரவு 8 மணியளவில் பெண் ஒருவர் குளித்துக் கொண்டிருந்துள்ளார். அப்போது அந்த இடத்துக்கு வந்த அடையாளம் தெரியாத இருவர் அந்தப் பெண்ணுடன் சேஷ்டை விட்டுள்ளனர்.

பெண் கூச்சலிட்டதைத் தொடர்ந்து உதவிக்கு ஓடிவந்தவர்களைக் கண்ட இரு சந்தேகநபர்களும் பொலிஸ் நிலையத்துக்குள் ஓடிமறைந்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு கற்களை வீசித் தாக்கினர்.

### ஹக்கீம் கோரிக்கை

நாட்டின் பல மாவட்டங்களிலும் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காரணமாக சிறுபான்மை மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் பீதியடைந்திருக்கின்றனர் என்று தெரிவித்துள்ள நீதி அமைச்சர் ஹக்கீம், 'கிறீஸ் பூத' அச்சத்தைக் தவிர்க்க நடவடிக்கை எடுக்கும்படி அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கட்சியின் செயலாளர் நாயகமான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரி.ஹசன்அலி விடுத்த அறிக்கையில், இந்த விவகாரம் தொடர்பில் பாகாப்புச் செயலாளருடன் தொடர்பு கொள்ள நீதி அமைச்சர் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லைஎன்று தெரிவித்துள்ளார்.

"இந்தச் செய்தி தயாரிக்கப்படும்போது, பொத்துவில் பிர தேச சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர், மவ்ஜூம் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார் என்று செய்தி கிடைத்துள்ளது. இதனைக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது'' - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோத்தபாய எச்சரிக்கை

இதேவேளை, பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பொலிஸ் நிலையங்களைத் தாக்கினால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றிரவு அறி வித்தார். (உ)

**படிவம்**

G.C. E. (O/ L) தராதரத்துடன் தேர்தல் திணைக்களத்தில் அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனைக்கு உண்டு.

பாரதி பதிப்பகம்,
480, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**SHAMROCK யாழ்.**
**A/L 2012 PHYSICS**
ஒளியியல்- Tue, Thu-6.30 pm
**S.சசி.B.Sc**
C/ma-G.கண்ணன்.B.Sc
CHE-M.நிரோஜன்.B.Sc
Bio-R.குகானந்தன்.B.Sc
**2013 நடைபெறுகின்றது.**

**வாடகைக்குத் தேவை**

நல்லூர் அல்லது யாழ். நகரை அண்டிய பிரதேசத்துக்குள் எமது [illegible]
இரு அறைகள் [illegible] தேவை.
தொடர்பு-0771307185,0778501013

## பெற்றோர் அன்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் ரி.தற்பரன், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகேந்திரம், யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ். சிவகரன் ஆகியோரின் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இரண்டு முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. குடும்பங்களை விட்டு பிரிந்த சிறுவர்களை மீண்டும் அவர்களது குடும்பங்களுடன் இணைப்பது, சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை அனுமதிப்பதை தடுத்தல் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன் பின்னர் 'உதயனுக்கு' விஜயம் செய்த அனோமா அளித்த சிறப்புச் செவ்வியில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களில் பாடசாலை மாணவிகள் 75 பேர் கர்ப்பமாகியுள்ளனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பெற்றோரே முதல் காரணி. பெற்றோருக்கும் சிறுவர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துள்ளது. பிள்ளைகள் எதிர்பார்க்கின்ற அன்பை பெற்றோரிடமிருந்து பெறமுடியாமல் தவிக்கின்றனர். இந்த அன்பு வேறு ஒருவர் மூலம் தவறாக கிடைப்பதாலேயே இவ்வாறான நிலைமை ஏற்படுகிறது.

இதனை தடுப்பதற்கான செயற்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைககள் தோறும் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமைத்து அவர்களூடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். (ஓ-15)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியீட்டிய நகரசபைகள், பிரதேச சபைகளின் தலைவர் கள் மற்றும் உறுப்பினர்களின் பதவி ஏற்பு நிகழ்வில் பங்குபற்றுவார் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனின் இந்திய விஜயம் பற்றிய விவரங்களை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை. எனினும், இராஜதந்திர சந்திப்புகள் சிலவற்றில் பங்குபற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கிறார் எனத் தெரியவருகிறது.

இலங்கை அரச தரப்பு அரசியல் தீர்வுத் திட்டம் தொடர் பாகவும், இதுவரை நடத்தப்பட்ட பேச்சுகள் தொடர்பாகவும், உத்தியோக பூர்வமாக பதில் அளிக்கும் பட்சத்திலேயே இனி மேல் பேச்சுகளில் தாம் பங்குபற்ற முடியும் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அறிவித்திருக்கும் நிலையில் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய அரச மட்டம் சம்பந்தனுடன் பேச உள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**ON THE OCCASION OF THE INDEPENDENCE DAY OF INDIA**

A FLAG - HOISTING CEREMONY WILL BE HELD ON MONDAY, 15 AUGUST 2011 AT 9 AM AT THE PREMISES OF THE CONSULATE GENERAL OF INDIA, 280, PALALY ROAD, JAFFNA.

**ALL INDIANS ARE CORDIALLY INVITED TO ATTEND.**

**Vice Consul.**

## பிற்போடப்பட்டுள்ளது

15.08.2011 அன்று இடம்பெறவிருந்த விசுவமடு றெட்பானா புனித பேதுருவானவர் ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 25.09.2011 அன்று இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**ஆலய நிர்வாகத்தினர்.**

## அமரர் சிவஸ்ரீ பிரபாகரேஸ்வரக் குருக்கள் அறக்கொடை நிதிய அனுசரணையில் நடைபெறும் கருத்தரங்க நிகழ்வு

காலம்: 14.08.2011 ஞாயிறு பிற்பகல் 2 மணி
இடம்: யாழ். வடமராட்சி அல்லையம்பதி முருகன் ஆலயத் திருமண மண்டபம்
தலைவர்: சிவஸ்ரீ.ராம். சபாநாதக் குருக்கள். பிரதம குரு முருகன் ஆலயம், அல்லையம்பதி
ஆசியுரை: சிவஸ்ரீ. பரம சண்முக ராஜக்குருக்கள், பிரதம குரு கண்ணகை அம்மன் ஆலயம் (கோவை)
சிறப்புரை: சிவஸ்ரீ .பரமேஸ்வர மனோகரக் குருக்கள் (வல்வை)
கருத்துரை: வழங்குபவர்: பிரம்மஸ்ரீ.ப. ராஜகோபால சர்மா நல்லூர்.
விடயம் குருகுலக் கல்வி.

வல்வெட்டித்துறை இலங்கை வங்கி கிளை முகாமையாளரும் பங்குபற்றுவார்.

*தொடர்ந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

**செயலாளர்: அறக்கொடை நிதியம்.**

## யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்(வ-து)

மேற்படி சமாசத்தில் கணக்கு எழுதுநராகக் கடமையாற்றிய திரு. நமசிவாயம் ஜெனார்த்தனன் என்பவர் 01.04.2011ஆம் திகதியில் இருந்து மேற்படி பதவியிலிருந்து விலகிவிட்டார். எனவே எமது சமாசத்தின் வியாபார நடவடிக்கைகளில் அவருக்கும் சமாசத்துக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

இல.87, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தலைவர், யாழ். மாவட்ட
கால்நடை வளர்ப்போர்
கூ.சங்கங்களின் சமாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தையா பூமணி

காரைநகரைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பூமணி நேற்று (12.08.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சாந்தகுமாரன் (ஹொலன்ட்), ஜெயகுமாரன்(ஜேர்மனி), நந்தகுமாரன் (ரஜீவன் மோடோர்ஸ்), தேனுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தர்சினி, வசந்தனா, மாலதி, விபுலானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், சுபாசினி, சுதேசினி, தர்ஷிகா, கௌசிகா, டினேஸ், உமேஷ், மெலானி, ரஜீவன், கிருத்திகா, கிருஜன், மோனிஷா, மதுஷா, மகிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கனகலிங்கம், காலஞ்சென்ற அன்னலெட்சுமி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, சுந்தரலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் இறுதிக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிச்சோலை
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# சுற்றுலா செல்லும் மாணவர் இன்று ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக.13

புலமைப்பரிசில் அடிப்படையில் இந்தியா செல்வதற்கு ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 40 மாணவர்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆளுநரை அவரது செயலகத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது.

எனினும் இந்த நிகழ்வு தற்போது யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூட மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## லியோனியின் பட்டிமன்றம்

காலம்: நாளை [14.08.2011] ஞாயிறு
நேரம்: காலை 10.30 மணிக்கு
இடம்: இளங்கலைஞர் மன்ற மண்டபம், நல்லூர்.

டிக்கெட் கிடைக்கும் இடங்கள்:
சபேஸ் டிறேடர்ஸ், புத்தூர், யாழ்ப்பாணம்.
மற்றும் மண்டப வாயிலில்,
சிவா மல்ரி சென்ரர், புத்தூர், யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
மலாயன் கபே, யாழ்ப்பாணம்.

நன்றி விழா ஏற்பாட்டாளர்கள்.

## வெற்றி நிச்சயம்

தரம் 5 புலமைப் பரிசில் வெற்றித் தேர்வு ஆசிரியர்களின் மாபெரும் இறுதிக்கருத்தரங்கு.
இடம் - SUBRA (14) கல்வி நிறுவனம் சித்தன்கேணி.
காலம் - 15.08.2011 காலை 8.00
அனுமதிக்கு முந்துங்கள்.

## காணி விற்பனைக்கு

நெல்லியடிச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் நெல்லியடி- பருத்தித்துறை பிரதான வீதியில், வீதிக்குக் கிழக்குப் பக்கமாக 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0714720177/0776145305

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

## Quick Learning Course

## Spoken English with Grammar

Duration
1 Month
Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

15 -08- 2011
Batch I :09.00 AM - 12.00 PM
Batch II :02.00 PM - 05.00 PM

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்தும் சந்திக்கருகில் கொசி Hotel லேக்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

# மரண அறிவித்தல்

## சின்னையா கணேசு

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கணேசு நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும் மற்றும் இரத்தினம்.சிவபாக்கியத்தின் மருமகனும் வரதலட்சுமியின் அன்புக் கணவரும், சுகந்தினி (ஆசிரியர் யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தி), சுபாசினி, மணிவண்ணன், விமல்ராஜ் ஆகியோரின் தந்தையும் செந்தூரனின் (ஆசிரியர் யா/பெரி புலம் ம.வி) மாமனும் வைஷாலியின் பேரனும், பராசக்தி, இராசமணி, நவநீதம் தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.08.2011) வெள்ளிக் கிழமை இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10/6, 3 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதல் தடவையாக யாழ். மண்ணில் ஆங்கிலக் கல்வியின் புதிய பரிமாணம்!



# NALRAVI
# SPOKEN ENGLISH



தலைநகரில் 20 வருடங்களுக்கு மேலாக தலைசிறந்து விளங்கும் பிரபல ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவி அவர்களால் நடாத்தப்படும் மாபெரும் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை.

செப்டெம்பர் 5ஆம் திகதியன்றிலிருந்தே (1ஆம் நாள்) ஆங்கிலம் பேச ஆரம்பித்து பயிற்சிப் பட்டறை இறுதியில் சரளமாக ஆங்கிலம் பேசுவீர்கள் என்ற தன்னம்பிக்கையை முதல் நாளிலேயே பெறுங்கள்.

முதல் நாள் பயிற்சி
(செப்டெம்பர் 5ஆம் திகதி அன்று)
இலவசம்

A/L நிறைவு செய்த மாணவர்களுக்காக
குறிப்பு:- எங்கள் கல்வி நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் நோக்கோடு முதல் நாளன்று மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து கொள்ளலாம்.

மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள்,வெளிநாடு செல்ல இருப்போர், KET மற்றும் IELTS பரீட்சைக்கு தோற்றுவோர், அலுவலகம் செல்வோர், இல்லத்தரசிகள் போன்றவர்களுக்காகவும்

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | :- யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| பயிற்சிக் காலம் | :- 1 மாதம் / 100 மணி நேரம் |
| நடைபெறும் காலம் | :- செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதி வரை |
| நேரம் | :- குழு 1 - காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை<br>குழு 2 - நண்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை |

NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

527, Galle Road, Colombo 6. Tel 2363656 Fax 2360004
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

எங்கள் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை இறுதியில் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு அவர்களின் பெறுபேறுகளிற்கேற்ப தரங்கள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் கொடுக்கப்படும்.

**நல்ரவியின் பழைய மாணவர்களின் கவனத்திற்கு:**

நல்ரவி கல்வி நிலையத்தில் NSE/NCSE கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து தற்பொழுது யாழ்.மண்ணில் வசித்து வரும் பழைய மாணவர்களை ஆசிரியர் திரு.ஜெய நல்ரவி அவர்கள் நேரடியாக சந்திக்க விரும்புகின்றார். சந்திக்க விரும்புவோர் ஓகஸ்ட் 14ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு சமூகமளிக்கவும்.

(சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALRAVI ENGLISH LANGUAGE CENTRE NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org